நல்லூர் சோநூலகம்.

சஞ்சீவி

விலை ரூபா 8-00

மலை:6 வள்ளுவர் ஆண்டு2028புரட்டாதி25சனிக்கிழமை(11-10-1997) SANJEAVY-Regenerative Tamil Weekly சிகரம்:19

இணைப்புக்கு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தும் திட்டம் ஒத்திவைக்கப்பட்டது?

கொழும்பு, ஒக். 11

அதிகாரப் பரவலாக்கல் அலகைத் தீர்மானிப்பதற்காக கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தும் திட்டத்தை ஒத்திவைக்க வேண்டும் என்ற கோரிக்கைக்கு அரசு இணங்கியிருப்பதாக நம்பிக்கையாகத் தெரியவருகின்றது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அரசு முன்வைத்துள்ள யோசனைகளின் இறுதி வடிவம் குறித்து கடந்த வாரம் நடைபெற்ற விசேட அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர் அறிவிக்கப்பட்டது தெரிந்ததே.

வடக்கு - கிழக்குக்கான அதிகாரப் பரவலாக்கல் அலகில், வடக்கு - கிழக்கை இணைத்திருப்பதா என்பது குறித்துத் தீர்மானிக்க கிழக்கில் மூன்று சர்வஜன வாக்கெடுப்புகள் நடத்தப்பட வேண்டும் என்று அமைச்சரவை சிபார்சு செய்திருந்தது.

இந்த முடிவை தமிழ் — முஸ்லிம் கட்சிகள் அடியோடு ஆட்சேபித்துள்ளன.

இலங்கை — இந்திய ஒப்பந்தத்தின் கீழ், வடக்கு — கிழக்கு மாகாண இணைப்புத் தொடர்பான சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவதை ஒத்திவைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது

(6 ஆம் பக்கம் பார்க்க)

வவுனியாவில் திங்களன்று ஹர்த்தால்!

'புளொட்' ஏற்பாடு

வவுனியா, ஒக்ரோபர் 11

நான்கு அம்சங்களை முன்வைத்து வவுனியா நகரில் திங்களன்று முழு அளவில் ஹர்த்தால் அனுஷ்டிக்க 'புளொட்' அமைப்பு ஏற்பாடு செய்து வருகின்றது.

இடம்பெயர்ந்து வவுனியாவில் தடுப்பு முகாம்களில் உள்ளவர்களை விடுதலை செய்து அவர்கள் தமது சொந்த இடங்களுக்குச் செல்ல ஏற்பாடு செய்யுமாறு கோரியும்

வவுனியாவில் வதிவிடப் (6 ஆம் பக்கம் பார்க்க)

பீரங்கி சிதறி 5 படையினர் பலி!

கொழும்பு, ஒக். 11

பெரியமடுப் பகுதியில் நேற்று படையினரின் மோட்டார் ஷெல் பீரங்கி சூடேறி வெடித்ததில் அதை இயக்கிய இரு படையினர் உட்பட 5 படையினர் உயிரிழந்தனர்.

இந்தச் சம்பவத்தில் எட்டுப் படையினர் காயமடைந்தனர்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

ஆயர் அம்பலவாணர் நேற்றுக் காலமானார்

யாழ்ப்பாணம், ஒக். 11

தென்னிந்திய திருச்சபையின் யாழ். அத்தியட்சாதீன முன்னாள் பேராயர் அதிவண. டேவிட் ஜெயரத்தினம் அம்பலவாணர் தமது 69 ஆவது வயதில் நேற்றுக் காலமானார்.

சுகயீனம் காரணமாக யாழ். ஆஸ்பத்திரியில் கடந்த புதனன்று சேர்க்கப்பட்ட அவர் நேற்று முற்பகல் ஆஸ்பத்திரியில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் காலமானார்.

ஈரலில் ஏற்பட்ட சீழ்க்கட்டைத் தொடர்ந்து அதனால் ஏற்பட்ட செப்ரீசிமியாத் தாக்கத்திற்குள்ளாகி அவர் மரணமானதாக வைத்திய அறிக்கைகள் தெரிவித்தன.

தென்னிந்திய திருச்சபையின்யாழ். அத்தியட்சாதீனத்தின் முதலாவது பேராயர் சபாபதி குலேந்திரனைத் தொடர்ந்து 1971 ஜூன் மாதம் — தமது 43 ஆவது வயதில் — டேவிட் ஜெயரத்

தினம் அம்பலவாணர் பேராயராக அபிஷேகம் செய்யப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

ஐந்து நாள் யுத்தம் குறித்து புலிகள்

வவுனியா, ஒக். 11

கடந்த 5 ஆம் திகதி முதல் 9 ஆம் திகதி வரை கனகராயன்குளத்துக்கு வட—கிழக்கே விஞ்ஞானகுளம், கரப்புக்குத்தி, கற்கிடங்கு, கரிப்பட்ட முறிப்பு ஆகிய இடங்களில் தாம் மேற்கொண்ட தாக்குதல்கள் குறித்து விடுதலைப் புலிகள் நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

'புலிகளின் குரல்' வானொலியில் ஒலிபரப்பான அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஐந்து நாள்கள் நடந்த தாக்குதல்களில் மூன்று உயர் அதிகாரிகள் உட்பட ஐந்நூறுக்கு மேற்பட்ட படையினர் உயிரிழந்தனர்; நூற்றுக்கணக்கான படையினர் காயமடைந்தனர்.

விஞ்ஞானகுளம், கரப்புக்குத்தி ஆகிய இடங்களில் இருந்த படையினரின் விநியோக மையங்கள் அழிக்கப்பட்டன.

கனகராயன்குளத்துக்கு

(6 ஆம் பக்கம் பார்க்க)

85 இணைப்புகளுக்கு விரைவில் நேரடித் தொலைபேசிச் சேவை!

நேற்று சம்பிரதாயபூர்வமாக அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், ஒக். 11

யாழ்ப்பாணத்துக்கும்வெளி மாவட்டங்களுக்குமான நேரடித் தொலைபேசி வசதி நேற்று மாலை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பண்ணையில் அமைந்துள்ள தொலைத் தொடர்பு பரிவர்த்தனை நிலையத்தில் நேற்று மாலை இந்த வைபவம் மிகச் சுருக்கமாக இடம்பெற்றது.

யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன், யாழ். நகர இராணுவத் தளபதி பிரிகேடியர் சுஸந்த மெண்டிஸ், ரெலிகொம் நிறுவன பிரதி பொது முகாமையாளர் எஸ். கனகசூரியர், யாழ். பிராந்திய தொலைத் தொடர்பு பொறியியலாளர் எஸ். பாலசுப்பிரமணியம் ஆகியோர் இதில் கலந்து கொண்டனர்.

பரிவர்த்தனை நிலையம் நேற்று சம்பிரதாயபூர்வமாக இயக்கி வைக்கப்பட்டது.

இன்று முதல் இணைப்பு வழங்கும் பணிகள் ஆரம்பிக்கப்படும் என்றும் —

தற்சமயம் சேவையில் உள்ள 85 தொலைபேசிப் பாவனையாளர்களுக்கும் ஒரு வார காலத்துக்குள் இணைப்பு வழங்கப்படும் என்றும்—

கேபிள் இணைப்பு வேலைகள் முடிவடைய முடிவடைய

(6 ஆம் பக்கம் பார்க்க)

புலிகளைப் பயங்கரவாத அமைப்பாகப் பிரகடனம்:

அமெரிக்காவை ஏனைய நாடுகளும் பின்பற்றக் கோருகிறார் கதிர்காமர்

கொழும்பு, ஒக். 11

அமெரிக்காவைப் பின்பற்றி விடுதலைப் புலிகள் இயக்கத்தை பயங்கரவாத இயக்கமென பிரகடனம் செய்யுமாறு பல நாடுகளிடம் இலங்கை கோரியுள்ளது.

ஆஸ்திரேலியா, கனடா, பிரிட்டன் போன்ற தமிழ் மக்கள் அதிகம் வாழும் நாடுகளுக்கு இலங்கை மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்துள்ளது.

வாஷிங்டனில் இருந்து திரும்பிய வெளிநாட்டு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் நேற்று கொழும்பில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் இத்தகவலை வெளியிட்டார்.

சர்வதேச பயங்கரவாதத்துக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு இந்த நாடுகளின் வெளிநாட்டு அமைச்சர்களிடம் கடிதம் மூலம் தாம் கோரப்போவதாகவும் அவர் தெரிவித்தார்.

(உ-3)

இருவர் கைது

குருநகர், ஒக் 11

தடை செய்யப்பட்ட சில பொருள்களைக் குருநகரில் இருந்து நேற்றுக் காலை வள்ளத்தில் எடுத்துச் செல்ல முயன்ற இருவர் படையினரால் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பந்தப்பட்ட மீனவர்களின் வள்ளத்திலிருந்து மோட்டார் சைக்கிளுக்கான ரயர், ரியூப், பெற்றோல், ஒயில் ஆகியவை காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(உ-51)

மானிப்பாய் கட்டுடையில்

ஒரே குடும்பத்தில் இருவர் கிரனேட்டுக்குப் பலி!

மற்றைய ஆறு பேர் காயம்!!

யாழ்ப்பாணம், ஒக். 11

மானிப்பாய் கட்டுடைப் பகுதியில் நேற்று முன்தினமிரவு இடம்பெற்ற கிரனேட் வெடிப்புச் சம்பவம் ஒன்றில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் உயிரிழந்தனர்; ஆறு பேர் காயமடைந்தனர்.

இச்சம்பவத்தில் அருச்சுனன் சிவக்கொழுந்து (வயது 51), அவரது மகள் அருச்சுனன் சுசீலா (வயது 22)ஆகிய இருவருமே உயிரிழந்தவர்களாவர்.

உயிரிழந்த சிவக்கொழுந்து என்பவரின் சகோதரி கதிரவேலு நாகம்மா (வயது 57), நாகம்மாவின் மகள் முருகானந்தம் இராசமனோகரி (வயது 31), அவரது கண

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுமையும் எழிலும் பெருமையும் பல்சுவை வார இதழ்

சின்னஞ்சிறு விளம்பரம்

விற்பனைக்கு

கோழிக்கூடு, சிங்கர்தையல் மெசின் என்பன விற்பனைக் குண்டு. தொடர்பு: திருமதி இராசரட்ணம் இல: 418 நாவலர் வீதி, [மாம்பழம் சந்திக்கு அருகில்] அரியாலை, யாழ்ப்பாணம். (50370)

புதிய MERCURIAL SPHYGMOMANOMETER(JAPAN, YAMASU) விற்பனைக்கு உண்டு. இத்துடன் ரெலஸ் கோப்பும் இணைந்துள்ளது. நேரில் பார்வையிடலாம் தொடர்பு:- 154, கன்னாதிட்டி றோட், யாழ்ப்பாணம். (50417)

உடன் விற்பனைக்கு

பிறிமா சேவல் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. 13.10.97 பிறிமா பேட்டுக் குஞ்சுகள் வர இருப்பதால் முற்கூட்டியே பதிவு செய்யவும். தொடர்பு: திருமகள் பண்ணை களஞ்சியம் [சிவன் கோயிலடி] 418, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (50427)

கோழிகள் விற்பனைக்கு

நல்லின முட்டை இடும் பேட்டுக் கோழிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: கந்தையா காங்கேசன் தபால் பெட்டி வீதி, உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய், (உரும்பிராய், ஊரெழு, பிரதேச சபைக்கு அண்மையில்). (50395)

இறைச்சிகோழி விற்பனை

புறோயிலர் இறைச்சிக் கோழி விற்பனைக்குண்டு. தொடர்பு:86, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (50423)

வாடகைக்கு

புங்கனகுளம் வீதி, கணக்கர் சந்தியில் இரு கடைகளுடன் கூடிய சகல வசதிகளையும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. கடைகளைத் தவிர்த்தும் வீடு கொடுக்க முடியும். தொடர்பு;- S. மார்க்கண்டு, 38, பாரதி வீதி, யாழ்ப்பாணம். (50378)

சகல வசதிகளையும் கொண்ட நன்னீர் உடைய பெரிய வீடொன்று வாடகைக்கு [அலுவலக பாவனைக்கு ஏற்றது] உண்டு. தொடர்பு:- Dr. பாலசிங்கம், இல:- 600, நாவலர் வீதி, [கனகரத்தினம் மகா வித்தியாலயத்திற்கு அருகில்] அரியாலை, யாழ்ப்பாணம். (50369)

வகுப்புக்கள்

ஓர்கன், புல்லாங்குழல், கிற்றார் இசைக்கருவிகள் புதிய வகுப்புகள் இன்று காலை 7-00 மணிக்கு ஆரம்பமாகின்றன. S. ரஜீந்திரன் 23, குறோசற்லேன், சுண்டுக்குளி (கல்வி வலயம் I காரியாலயத்திற்கு அண்மையில்) (50387)

O/L கணிதம்

Credit, Distinetion பெறுபேறடைய ஆரம்பத்திலிருந்து வினாவிடை மூலமும் (ஆண்டு 9, 10 உட்பட) கற்பிக்கப்படும். ஆசிரியர், 85, சிவன் கோயிலடி, சிவன் கோயில் மேற்கு வீதி, திருநெல்வேலி. (50242)

AL 98
கம்பனி
ஆசிரியர்:
D. SAM
ஆரம்பம்: 1997-10-11
சனி மாலை 4-00 மணி
LANTHU INSTITUTE
Van North West,
Manipay Road,
Anaikoddai.
— நிர்வாகி
(50415)

மிருதங்கம்

நீண்ட இடைவெளிக்குப் பின் மீண்டும் மிருதங்கம், மற்றும் சகல விதமான தோல் வாத்தியங்களுக்கு மான திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தரமான முறையில் வாத்தியங்களை சீர் செய்து பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: கோவிந்தபிள்ளை விஜயகுமார், பெருமாள் கோயிலடி 192/1, நாவலர் றோட், யாழ்ப்பாணம். [50384]

விண்ணப்பப் படிவம்

லொத்தர் மூலம் தெரிவாகும் அமெரிக்க விசா படிவம் தயாரித்துக் கொடுக்கப்படும். மேலதிக விவரங்களுக்கு: நாயகபாலன் ஸ்ரோர்ஸ், மானிப்பாய். (50352)

ஆசிரியர் இடம்மாற்றப் படிவம் விற்பனையாகின்றது. விலை ரூபா 4/- நாயகபாலன் ஸ்ரோர்ஸ் மானிப்பாய். [50353]

வேலை ஆள் தேவை

மட்டுவிலில் வசிக்கும் வயோதிபர்கள் இருவரை வீட்டில் தங்கிநின்று பராமரிக்க ஆள் தேவை. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். சம்பளம் நேரில் தீர்மானிக்கப்படும். தொடர்பு: ம. சண்முகலிங்கம் நுணாவில் சந்தி, சாவகச்சேரி. [50380]

தட்டெழுத்து வேலை

தமிழ், ஆங்கிலம் தட்டெழுத்து றோணியோ ஸ்ரென்சில் வேலைகள் குறைந்த செலவில் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: வே. பூபாலசிங்கம், ஐயாகடையடி, மீசாலை. (50414)

தென்னம் நாற்றுக்கள்

உடன நடுகைக்குகந்த, நல்இன தென்னம் நாற்றுக்கள் செவ்விளை, வத்தாவி, மாலைதீவு, சாதாரணம் குறுகிய காலத்தில் பலன் தரக்கூடியவை விற்பனைக் குண்டு. தொடர்பு; மு. காங்கேசு, ஐயாகடையடி, கண்டி வீதி, மீசாலை. [50101]

YOGI
HOME SCIENCE ACADEMY
புதிய வகுப்புக்கள்

அடிப்படை முக ஒப்பனைகளும்
நவீன தலை அலங்காரங்களும்
15 வகுப்புக்கள் மட்டும் உடன் ஆரம்பமாக உள்ளன.
ஏனையை மனையியல் வகுப்புக்களும் ஆரம்பமாகி உள்ளன. சேரவிரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்.

75, அம்மன் றோட்,
நல்லூர், யாழ்ப்பாணம்,
(நல்லூர்வீரமாகாளி அம்மன் கோயில் முன்பாக)
(50426)

இலங்கை
இளங் கலைஞர் மன்றம்
வாணி விழா

நாள்: **12 - 10 - 97** ஞாயிறு
மாலை 2.30 மணி
இடம்: மன்றக்கலா மண்டபம்,
சட்டநாதர் வீதி, நல்லூர்.

நிகழ்ச்சிகள்:

நாதஸ்வர இசை 2.30 – 4.30
கலாபூஷணம்,
அளவெட்டி எம். பி. பாலகிருஷ்ணன்
,, ஆர். கேதீஸ்வரன்] நாதஸ்வரம்
தவில் வித்துவான்:
நாச்சிமார் கோயிலடி கே. சிவகுமார்
லயஞான கலாநிதி, ரி. உதயசங்கர்] தவில்
பிரதம விருந்தினர் உரை:
பேராசிரியர் A. சண்முகதாஸ் அவர்கள்
கலைப்பீடாதிபதி, யாழ். பல்கலைக்கழகம்
இசைக்கச்சேரி 4.00 – 5.30
சங்கீத வித்துவான் கே. ராமநாதன் — பாட்டு
இசைஞான திலகம் ஆர். ராதாகிருஷ்ணன் — வயலின்
இசைக்கலைமணி, எஸ். துரைராஜா — மிருதங்கம்

விஜயதசமி வித்தியாரம்பம்

11 - 10 - 97 சனிக்கிழமை பி. ப 2.30 மணிக்கு
மன்ற மண்டபத்தில்
வாய்ப்பாட்டு, வீணை, மிருதங்கம், நடனம் ஆகியவற்றிற்கான வித்தியாரம்பம் நடைபெறும்.

கலாபிமானிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
நிகழ்ச்சிகள் யாவும் குறிப்பிட்ட நேரத்திற்கு ஆரம்பமாகும்.

தலைவர்: என். கே. பத்மநாதன்
செயலாளர்: எஸ். பத்மலிங்கம்
பொருளாளர்: எஸ். பாலசண்முகநாதன்

சிறப்புற வாழ்த்துபவர்:
மகாராணி பட்டுச் சேலை
யாழ்ப்பாணம்
[சி/1738]

மீண்டும் யாழ். நகரில்!
ஞானம் அழகு மாடம்

மருத்துவமனை வீதியில் இதுவரை இயங்கிய எமது ஸ்தாபனம் தற்பொழுது இல. 87, கஸ்தூரியார் வீதியில் இயங்கிவருகின்றது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகிறோம்.

எம்மிடம்:
() அழகு சாதனப் பொருள்கள்
() கைக்கடிகாரங்கள்
() தையல் வேலைகளுக்கேற்ற நூல், லேஸ் வகைகள்
() பாக் (Bag) வகைகள்

அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள:

ஞானம் அழகு மாடம்
87 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

வாடிக்கையாளர் அனைவருக்கும் எமது தீபாவளி நல்வாழ்த்துக்கள்.
(சி1742)

வீடுகள் விற்பனைக்கு

கச்சேரி, பிரபல கல்லூரிகளுக்கு அருகில் 79, றக்கா வீதியில் ஒரு புதிய மாடிவீடும், பழைய வீடு ஒன்றும் விற்பனைக்குள்ளன. சனி, ஞாயிறு 9 - 12 மணி வரை பார்வையிடலாம்.

79, றக்கா வீதி,
மருதடி,
(50422) யாழ்ப்பாணம்.

யா/ விக்ரோறியாக் கல்லூரி
சுழிபுரம்
கணனிப் பகுதி

இக்கல்லூரி மாணவர்களுக்கான கணனிப் பயிற்சி நெறி (BASIC LANGUAGE) **11 - 10 - 1997** சனிக் கிழமை 12.00 மணிக்கு அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட உள்ளது.

இவ்வைபவத்திற்கு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(50421) அதிபர்.

உ
அம்பாள் துணை
கல்வியங்காடு
அருள்மிகு இலங்கை நாயகி மனோன்மணி அம்பாள் கோயில்
கேதார கௌரி விரத காப்பு

திருகோணமலை ஸ்ரீ பத்திரகாளி கோயில் கேதார கௌரி விரதகாப்பு அடியார்களின் வசதி கருதி இம்முறையும் வழமை போல் மேற்படி ஆலயத்தில் வழங்கப்படும். கேதார கௌரி விரதகாப்பு பெறவிரும்பும் அடியார்கள் முன் கூட்டியே தங்கள் பெயர்களைப் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

கல்வியங்காடு அருள்மிகு
ஸ்ரீ இலங்கை நாயகி மனோன்மணி
அம்பாள் கோயில்
சு. பாலசுப்பிரமணியஐயர்,
ஆலயஉரிமையாளரும், ஆதீன கர்த்தாவும்.
(50424)

தெல்லிப்பழை
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
(வரைவுள்ளது)
வெற்றுச் சாக்கு விற்பனை

10,000 வெற்றுச் சாக்குகளும், 35,000 வெற்றுப் பைகளும் கேள்விப்பத்திரம் மூலம் விற்பனைக் குண்டு. மீளளிக்கப்படும் வைப்புப் பணமாக ரூபா. 500/- சங்கத்தில் செலுத்தி. சங்கத்தால் வழங்கப்படும் படிவத்தை நிரப்பி எமக்கு முத்திரையிடப்பட்டு, கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''வெற்றுச்சாக்கு கேள்விப்பத்திரம்'' எனக் குறிப்பிட்டு 16 - 10 - 1997 ஆம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக, பொது முகாமையாளர், தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம், தெல்லிப்பழை என முகவரியிட்டு அனுப்பி வைக்கவும்.

பொது முகாமையாளர்
(சி-1739)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புளியங்குளத்தைப் பிடித்தே தீரும்

கங்கணத்தில் அரசுத் துருப்புக்கள்!

வன்னிச் சமர் இப்போது புதிய பரிமாணத்தை எட்டியிருக்கிறது.

யுத்த முனைக்கு சுதந்திர செய்தியாளர்கள் செல்வதற்கு வழியில்லாத நிலையில் — பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் வெளியிடுகின்ற — இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் முனசிங்க கூறுகின்ற — தகவல்களே யுத்த முனைச் செய்திகளாக தெற்கில் 'விளாசி' அடிக்கப்படுகின்றன. முழு உண்மை நிலை ஆண்டவனுக்கே வெளிச்சம்!

கிளிநொச்சிக்கும் வவுனியாவுக்கும் இடையில் பாதுகாப்பான தரை வழிப் பாதை ஒன்றைத் திறப்பதற்காக வவுனியாவிலிருந்து வெற்றி உறுதி, படை நடவடிக்கையை அரசுத் துருப்புகள் ஆரம்பித்து நூற்றியைம்பது நாள்கள் கடந்து விட்டன. இன்று 152 ஆவது நாள் ஸ்ரீலங்காவின் சரித்திரத்தில் இத்துணை நாள்கள் — இவ்வளவு இழப்புகளுடன் — மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கை வேறு எதுவுமில்லை.

சுமார் இரண்டு மாதங்களுக்கு முன்னரே புளியங்குளத்தைக் கைப்பற்றி விட்டதாக அறிவித்த அரசுத் தரப்பு, இன்னும் புளியங்குளத்தைக் கைப்பற்ற முடியாமல் அல்லாடிக் கொண்டிருக்கின்றது என்பது தான் உண்மை. எனினும் பாதுகாப்பு அமைச்சின் பத்திரிகை அறிக்கைகள் பெருமளவில் முன்னேறி விட்டதாகத் தொடர்ந்து தெரிவிக்கின்றன.

கடந்த ஓகஸ்ட்டுக்குப் பின்னர் புளியங்குளத்தைக் கைப்பற்றுவதற்காக மூன்று பெரும் தாக்குதல்களை அரசுப் படைகள் ஆரம்பித்தனவாயினும் புலிகள அவற்றை முறியடித்து இன்னும் புளியங்குளத்தைத் தக்க வைத்துத் தரித்து நிற்பதாக களமுனைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

புளியங்குளம் பகுதியில் தாம் அமைத்துள்ள பாதுகாப்பான அரண்களுக்குள் இருந்து கொண்டு —

பெரிய எடுப்பில் முன்னேறும் படையினர் மீது எட்ட இருந்து கொண்டு ஷெல் தாக்குதல் நடத்துவதும் —

அதே நேரம் நெருங்கி வந்து, குறுந்தூர வீச்சுக் கொண்ட ஆயுதங்கள் மூலம் அதிரடி நடத்துவதும் —

என்ற இரு முனைப்பட்ட யுத்த தந்திரோபாயத்தைப் பயன்படுத்தி புலிகள் பொருதி வருகின்றார்கள்.

புலிகள் மழைபோல் பொழியும் ஷெல்களினால் படைகளுக்கு பேரிழப்பு ஏற்படுவதை அரசுத் தரப்பும் ஒப்புக் கொண்டிருக்கின்றது.

அதேசமயம் புலிகள் நெருங்கி வந்து நடத்தும் தாக்குதல்கள் மூலமே அரசுப் படைகளின் டாங்கிகள் தாக்கப்படுகின்றன. ஆர். பி. ஜி. றொக்கட் லோஞ்சர்கள், கிறனேட் லோஞ்சர்கள் போன்றவை இக்குறுந்தூரத் தாக்குதல்களுக்குப் பயன்படுத்தப்படும் ஆயுதங்களாகும்.

வன்னிச்சமரில் படையினரின் பதினைந்துக்கும் அதிகமான டாங்கிகளை தாங்கள் தகர்த்து விட்டதாக புலிகள் அறிவித்திருக்கிறார்கள்.

நேரடியாகக் கண்டி வீதி வழியே நகர்ந்து — முன்னேறி — புளியங்குளத்தைக் கைப்பற்றுவதற்கு இரண்டு தடவைகள் பெருத்த எடுப்பில் தாம் எடுத்த முயற்சி பேரிழப்பில் முடிந்ததை அடுத்து —

புளியங்குளத்தில் மிகப் பாதுகாப்பான நிலையில் நின்று புலிகள் மோதி வருவதால் —

நேரடியாக புளியங்குளத்துக்கு முன்னேறாமல் கண்டி வீதிக்கு கிழக்கிலும், மேற்கிலும் நகர்ந்து, புளியங்குளத்தைச் சுற்றி வளைத்து அங்குள்ள புலிகளுக்கு விநியோகத்தைத் துண்டித்த பின்னர், புளியங்குளத்தையும் அங்குள்ள புலிகளையும் பிடிப்பதற்கான திட்டம் ஒன்று வகுக்கப்பட்டது.

இது பற்றிய விவரம் கடந்த வாரங்களில் சமர்க்களத்தில் வெளியாகியிருந்தது.

கடந்த வாரத்தில் —

புளியங்குளத்துக்கு கிழக்கே நெடுங்கேணி — புளியங்குளம் வீதியில் இருந்து நயினாமடுச் சந்திக்குச் சென்ற படையினர் கண்டி வீதியில் உள்ள கனகராயன்குளம் சந்தியைநோக்கி நகர முயன்றனர் இதற்காக கரப்புக்குத்தி, சின்ன அடம்பன், விஞ்ஞானக்குளம், கற்கிடங்கு, கரிப்பட்டமுறிப்பு ஆகிய இடங்களை கடந்த துருப்புகள் விஞ்ஞானக்குளம், கற்கிடங்கு ஆகிய இரு இடங்களிலும் தங்களுக்கான விநியோக மையங்களையும் அமைத்தனர்.

எனினும் கனகராயன்குளம் சந்திக்கு கிழக்கே கண்டி வீதிக்குச் சமாந்தரமாகச் செல்லும் கனகராயன் ஆற்றைப் படைகள் கடக்க வில்லை என்று தெரிகின்றது. மழை ஆரம்பிக்காததால் ஆற்றில் நீரோட்டம் இல்லை. பாலம் இல்லாவிட்டாலும் — நீரோட்டம் இல்லாததால் — இந்த ஆற்றைக் கடப்பது படையினருக்கு சிரமமாக இருக்காது எனக் கருதப்படுகின்றது. ஆனால் அடுத்து வரும் வாரங்களில் மழை கொட்டத் தொடங்கி விட்டால் இந்த ஆறும் புலிகளுக்கு காவலரணாக— படையினருக்குத் தடையாக— மாறிவிடக் கூடிய சூழ்நிலை உண்டு.

இவ்வாறு புளியங்குளத்தைச் சுற்றிவளைக்க முற்பட்ட படைகள் மீது கடந்த திங்கள் இரவு தாங்கள் பெரும் தாக்குதலை தொடுத்ததாக புலிகள் அறிவித்திருக்கின்றார்கள்.

முதலில் கரப்புக்குத்தி, கரிப்பட்ட முறிப்புப் பகுதிகளைக் கைப்பற்றிய தமது போராளிகள் பின்னர் விஞ்ஞானக்குளம், கற்கிடங்கு ஆகிய பகுதிகளில் இருந்த படையினரின் விநியோக மையங்களை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர் என்றும்—

அங்கிருந்த பத்துக் கோடி ரூபா பெறுமதியான ஆயுதங்கள், பத்து புல்டோஸர்கள், டிரக்குகள் ஆகியவற்றை தங்கள் போராளிகள் கைப்பற்றி எடுத்துச் சென்றனர் என்றும் —

புலிகள் தரப்பில் அறிவிக்கப்பட்டது.

புளியங்குளத்துக்குக் கிழக்குப் பகுதியால் அதனைச் சுற்றி வளைக்கும் நோக்குடன் முன்னேறிய படைகள் தற்சமயம் பெரியமடுவுக்குத் திரும்பி விட்டதாகவும் கூறப்படுகின்றது.

என்றாலும் புளியங்குளத்தை வீழ்த்துவதற்கான முயற்சியில் படைத் தரப்பு மிகத் திடமாக இருப்பதாகவும் —

அதை முறியடிப்பதில் புலிகள் மிகத் தீவிரமாக இருப்பதாகவும் —

யுத்த முனைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

புளியங்குளம் பெரும் யுத்த முனையாக மாறிவருவது தவிர்க்கமுடியாததாக இருக்கும் என்றே கருதப்படுகின்றது.

''புளியங்குளம் என்ற சிறிய நகரப் பகுதியைக் கைப்பற்றுவதற்கு அடுத்தடுத்து இராணுவம் எடுத்த அடிகள் முறியடிக்கப்பட்டுள்ளன. இப்பகுதியில் இருதரப்புக்கும் இடையில் ஐந்து லட்சத்துக்கும் அதிகமோட்டார் மற்றும் பீரங்கி ஷெல்கள் ஏவிவிடப்பட்டிருக்கின்றன''— என்று 'த ஐலண்ட்' பத்திரிகையில் அதன் பாதுகாப்புச் செய்தியாளர் கூறியிருப்பது மிகையல்ல.

இதற்கிடையில்—

மாங்குளத்தில் ஹெலி மூலம் துருப்புக்களைத் தரையிறக்குவதற்கு படைகள் முயற்சி ஒன்றை எடுத்ததாகவும்—

ஒரு ஹெலியிலிருந்து கணிசமான எண்ணிக்கை துருப்புகள் இறக்கப்பட்ட நிலையில் அந்த ஹெலி மீது புலிகள் தாக்குதல் நடத்தியதில் ஹெலியின் 'கன்னர்' கொல்லப்பட்டதாகவும்—

யுத்த முனைப் பக்கத்திலிருந்து வவுனியாவுக்குக் கிடைத்த தகவல்கள் தெரிவித்தன, ஆனால் அதனை ஊர்ஜிதப்படுத்த முடியவில்லை.

அவ்வாறு இறக்கப்பட்ட படையினர்கள் காடுகளில் திரிந்து புலிகளைக் கொல்வதாகவும்—

இவர்களின் தாக்குதல்களில் பத்துப்புலிகள் வரை உயிரிழந்ததாகவும்—

நான்கு படையினர் உணவுப்பொட்டலங்களுடன் புலிகளிடம் சிக்கியதாகவும் கூடத் தகவல்.

எனினும் ஊர்ஜிதப்படுத்தப்படும் வரை இத்தகவல்களை முற்றாக கணக்கெடுக்க முடியாது.

இங்கும் றாகிங்கா?

லயன் எயர்' நிறுவனத்தின் கீழ் இயங்கும் 'ஏஷியன் ஏரோ ஸ்பேஸ்' அமைப்பில் விமானங்களுக்கான ஆறு மாதகாலப் பயிற்சிகளைப்— பூர்த்தி செய்து கொண்டு இரண்டு வாரங்களுக்கு முன்னர் எட்டு கடேற் அதிகாரிகள் வெளியேறினர்.

ஸ்ரீலங்கா விமானப்படையில் விமானிகளுக்கு பெருந் தட்டுப்பாடு நிலவுவதால் விமானப்படைக்கு உதவ அவர்கள் முன்வந்தனர்.

அவர்களில் நால்வர் மின்னேரியாவில் உள்ள விமானத் தளத்துக்கும் எஞ்சிய நால்வரும் இரத்மலானை விமானத் தளத்துக்கும் பணிக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

ஆனால் அவர்களில் ஒரு தொகுதியினர் அங்கிருந்த ஏனைய அதிகாரிகளினால் அநாகரிகமான முறையில் 'றாகிங்' குக்கு உட்படுத்தப்பட்டதால் பணி செய்ய விரும்பாமல் திரும்பிவிட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது சம்பந்தப்பட்ட உயரதிகாரிகளுக்கும் முறைப்பாடு செய்யப்பட்டிருக்கின்றது.

இதனையடுத்து குற்றச்சாட்டுக்கு ஆளான இரண்டு விமானிகள் சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர். அவர்களுக்கு எதிராக இராணுவ நீதிமன்ற விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளனவாம்.

★ ★ ★

பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில் தமிழீழ விடுதலைப் புலிகளை அமெரிக்க அரசு சேர்த்திருக்கின்றது.

ஸ்ரீலங்காத் தரப்பு நீண்ட காலமாக எடுத்துவந்த முயற்சிக்கு வெற்றி கிட்டியிருக்கின்றது. ஸ்ரீலங்கா அரசைப் பொறுத்தவரை புலிகளுக்கு எதிரான போரில் இது ஒரு மைல் கல். இந்த வெற்றியில் கணிசமான பங்கு இராஜதந்திர ரீதியில் செயற்பட்ட ஸ்ரீலங்கா வெளியுறவுத்துறை அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரையே சாரும் என்று அவதானிகள் கூறுகின்றனர்.

பயங்கரவாத அமைப்புக்களின் பட்டியலில் புலிகளைச் சேர்ப்பது தொடர்பான திட்டத்துக்கான முயற்சி பல ஆண்டுகளுக்கு முன்னரே ஆரம்பிக்கப்பட்டதாயினும் — அது தொடர்பான ஆரம்ப ஏற்பாடுகள் — அல்லது அறிவிப்புக்கான முயற்சிகள் — கருக்கட்டத் தொடங்கியது இவ்வருட முற்பகுதியில் தான்.

''புலிகளைக் கண்டிக்கும் போக்கை கடைப்பிடிக்க அமெரிக்கா முடிவு?'' என்ற தலைப்பில் கடந்த ஆகஸ்ட் 2 ஆம் திகதி சஞ்சீவியின் சமர்க்களம்' பகுதியில் விரிவான தகவல்கள் வெளியிடப்பட்டிருந்தது வாசகர்களுக்கு நினைவிருக்கக் கூடும். அதன் சுருக்கம் வருமாறு:

''புலிகளைப் பயங்கரவாத அமைப்பாக அறிவிக்கும்படி ஸ்ரீலங்கா அரசு விடுத்து வந்த கோரிக்கையை இதுவரை காலமும் உதாசீனம் செய்து வந்த அமெரிக்கா, இப்போது அக்கோரிக்கையைப் பரிசீலனைக்கு எடுத்திருப்பதாகத் தெரிய வருகின்றது.

பாகுபதுன்

''அமெரிக்காவை இந்த விடயத்தில் இணங்க செய்து விட்டால் — தற்போதுள்ள அரசியல் போக்கில்—அமெரிக்காவைப் பின்பற்றி ஏனைய நாடுகளும் வழிக்கு வந்து விடும் என ஸ்ரீலங்கா எதிர்பார்க்கின்றது.

''அமெரிக்காவின் பென்டகனிலிருந்து மூத்த ஜெனரல்கள் சிலர் அடிக்கடி கொழும்பு வந்து திரும்புவதற்கும் இந்த ஏற்பாட்டுக்கும் இடையில் தொடர்புகள் இருக்கக் கூடும் எனச் சந்தேகிக்கப்படுகின்றது.

''புலிகளைப் பயங்கரவாத இயக்கமாக அறிவிக்கக் கோரும் ஸ்ரீலங்காவின் கோரிக்கையை— அடுத்த மாதத்தில்— செப்ரெம்பரில் —'ஸீரியஸாக' பரிசீலனைக்கு எடுப்பதாக அமெரிக்கத் தரப்பு இலங்கைக்குக் கூறியிருப்பதாகவும். தகவல்

'திருகோணமலை மாவட்ட எம்.பிக்களான தங்கத்துரை, மஹ்ரூப் ஆகியோர் படுகொலை செய்யப்பட்டமை. வடக்கு - கிழக்குக் கடலில் கப்பல் போக்குவரத்துக்கு புலிகள் தடை விதித்தமை. ஸ்ரீலங்கா அரசுக்கு மோட்டார் ஷெல்களை ஏற்றி வந்த கப்பல் ஆழ்கடலில் காணாமற் போனமை, இறக்கக் கண்டி முஸ்லிம் மீனவர்கள் கடத்தப்பட்டமை போன்றவை இந்த விவகாரத்தில் அரசுத் தரப்புக்கு உதவுபவையாகவும் — புலிகளுக்கு 'மைனஸ் பொயிண்ட்' ஆகவும்— அமைந்துள்ளன.'

— என்று குறிப்பிட்டிருந்தோம்

அதற்குப் பின்னர் திருகோணமலைக்கு அருகே புல்மோட்டை கடற் பகுதியில் இல்மனைட் கனிவளத்தை ஏற்றிக் கொண்டிருந்த சீனக் கப்பல் ஒன்றின் மீது புலிகள் நடத்திய தாக்குதலும் அமெரிக்கத் தரப்பினால் 'பயங்கரவாதச் செயல்' என விளங்கப்பட்டிருக்கக் கூடும்.

எது எப்படியென்றாலும் பலதரப்பிலும் எதிர்பார்க்கப்பட்டபடி புலிகளைப் பயங்காவாத அமைப்பாக அமெரிக்க அரசு அறிவித்திருக்கின்றது.

இதனால் புலிகளுக்குப் பாதிப்பு ஏதுமில்லை என்று புலிகளின் சர்வதேசப் பேச்சாளர் ஒருவர் மேலோட்டமாகக் கருத்துத் தெரிவித்திருந்தாலும் கூட, புலிகளின் சர்வதேசநடவடிக்கைகளுக்கு இந்த அறிவிப்பு பெரும் பின்னடைவைத் தரும் என்பதை மறுக்க முடியாது.

சர்வதேச பொலீஸ்காரனாகத் தன்னைக் காட்டிக் கொள்ளும் அமெரிக்காவைப் பகைக்காமல் — அமெரிக்க சார்புப் போக்கைப் பின்பற்றவே — பெரும்பாலான ஐரோப்பிய நாடுகள் விரும்புகின்றன. இந்த வகையில் புலிகளின் விவகாரத்தில் அமெரிக்கா பின்பற்றும் கொள்கையைத் தொடர்வதற்கு அவை விரும்பியோ விரும்பாமலோ தள்ளப்படும். அத்தகைய வழியை நாடினால் — அந்த நாடுகளில் வதியும் ஈழத் தமிழர்கள் மூலமாக — விடுதலைப் புலிகளுக்குக் கிடைத்துவரும் நிதி மற்றும் அரசியல் தார்மீக உதவிகள் தடைப்படும் நிலையே ஏற்படும்.

அத்தோடு இந்த நாடுகளில் செயல்படும் தமது அலுவலகங்களை மூடவேண்டிய கட்டாய நிலையையும் புலிகள் எதிர்கொள்ள நேரிடக் கூடும்.

இந்தக் காரணங்களில் சர்வதேச தொடர்புகள், நிதி திரட்டும் வாய்ப்புகள், உலக சந்தையில் ஆயுதக் கொள்வனவுக்கான சந்தர்ப்பங்கள் போன்ற பலவற்றையும் புலிகள் இழக்க வேண்டியும் நேரிடும்.

என்றாலும் கூட அமெரிக்க அறிவிப்பின் பின்னர், புலிகள் கடைப்பிடிக்கப்போகின்ற கொள்கை மேலும் பல சிக்கல்களை உருவாக்கலாம் என்ற அச்சமும் பல தரப்புகளிலும் வெளிப்படுத்தப்படுகின்றது.

★ உரிய வழிமுறைகள் மூலம் அமெரிக்கத் தரப்புடன் தொடர்புகளை ஏற்படுத்தி புலிகள் சம்பந்தமான அமெரிக்க நிலைப்பாட்டை மாற்றுவதற்கு புலிகள் முயற்சிக்கலாம்.

★ அல்லது வழமை போல் சர்வதேச அபிப்பிராயத்துக்கு—இரண்டாம் பட்ச முன்னுரிமை அளித்து விட்டு

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீனவருக்கு பாதுகாப்பு வழங்கிய ஊர்காவலர்கள் மீது தாக்கு

மட்டக்களப்பு, ஒக். 11

திருகோணமலை, புல்மோட்டை பகுதியில் மீனவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த ஊர்காவலர்கள் மீது விடுதலைப் புலிகள் நேற்றுக்காலை தாக்குதல் நடத்தினர். இத்தாக்குதலில் இரு ஊர்காவலர் உயிரிழந்தனர். (இ-21-3)

ஆசிரியர் தொடர்கல்விப் பாட நெறிக்கு

போதனாசிரியர்கள் 10 பேர் நியமனம்

அச்சுவேலி, ஒக். 11

யாழ். மாவட்டத்தில் ஆசிரியர் தொடர் கல்விப் பாட நெறிப்பயிற்சித் திட்டத்தைச் செயற்படுத்துவதற்காக பத்துப்பேர் போதனாசிரியர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களது நியமனம் தொடர்பான விவரங்களை தேசியகல்வி நிறுவாக பணிப்பாளர் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைத்துள்ளார்.

போதனாசிரியர்களாக நியமிக்கப்பட்டுள்ளோர் விவரம் வருமாறு:-

எஸ். சரவணமுத்து (சிரேஷ்ட போதனாசியர் –யாழ்ப்பாணம்), எஸ். மாதவகுமார்-(சண்டிலிப்பாய்), எம். ஞானலிங்கம்- (அச்சுவேலி), வி. சிவகுமார்- (சண்டிலிப்பாய்), எஸ். யோகராசா-(அரியாலை), எஸ். ஸ்ரீரங்கநாதன் –(கரம்பன்), எம். சுவாமிநாதன்-(கோப்பாய்), கே. பாலசுப்பிரமணியம் – (கரவெட்டி), எஸ். யதுகுலசிங்கம் -(யாழ்ப்பாணம்), எஸ். சத்தியசீலன்–(கரவெட்டி.)

மேற்படி போதனாசிரியர்களைத் தெரிவுசெய்வதற்கான நேர்முகப் பரீட்சை கடந்த மே மாதம் முன்னாள் கல்விப் பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம் தலைமையில் கல்வி வலயம்-1 இல் நடைபெற்றது. (ஐ-11)

9 பொலீஸார் திரும்பி வந்தனர்

வவுனியா, ஒக். 11

அம்பாறை அறந்தலாவையில் உள்ள பொலீஸ் நிலையம் கடந்த திங்கட்கிழமை தாக்குதலுக்குள்ளான போது காணாமற் போன பொலீஸாரில் 9 பேர் நேற்று முன்தினம் காலை காவலரண் ஒன்றுக்கு வந்து சேர்ந்தனர்.

சிலருக்கு காயம் ஏற்பட்டிருந்ததாகக் கூறப்பட்டது. (இ-164-3)

வவுனியாவில் துப்பாக்கி அபகரிப்பு

வவுனியா, ஒக். 11

வவுனியா நகரில் நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் மின் விநியோகம் தடைப்பட்ட நேரத்தில்- ஸ்ரேசன் வீதி- குட்செட் வீதிச் சந்தியில் அமைந்துள்ள காவலரணில் பணியில் ஈடுபட்டிருந்த தமிழ் பொலீஸார் ஒருவரின் கையைவெட்டி அவரிடம் இருந்த துப்பாக்கியை இனந்தெரியாதவர்கள் அபகரித்துச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த சம்பவத்தையடுத்து அன்று இரவு நகரில் பதற்றமான சூழ்நிலை நிலவியதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-164-3)

பரிசளிப்பு விழா

நுணாவில் மத்தி இந்து இளைஞர் மன்றத்தினரால் நவராத்திரியை ஒட்டி நடத்தப்பட்ட போட்டிகளுக்கான பரிசளிப்பு விழா மன்றத் தலைவர் ச. லோகேஸ்வரசர்மா தலைமையில் இன்று சனி பிற்பகல் 2.30 மணிக்கு கந்தசுவாமி (வைரவர்) ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பிரதம விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளை கலந்து கொள்வார். (ஐ)

பரிசளிப்பு ஒத்திவைப்பு

யாழ். கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ். மாநகராட்சி மன்ற சைவ சமய விவகாரக்குழு கடந்த 4 ஆம் திகதி பாடசாலைகளுக்கு இடையே நடந்திய சமய அறிவுப் போட்டிக்கான பரிசளிப்பு விழா முன்னர் அறிவிக்கப்பட்டபடி இன்று சனிக்கிழமை நடைபெற மாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த விழா எதிர்வரும் தீபாவளி தினத்தன்று காலை 9 மணிக்கு நாவலர் மண்டபத்தில் நடைபெறும். (ஐ)

மட்டக்களப்பில் குண்டு வெடித்து ஒருவர் காயம்

மட்டக்களப்புநகரில் நேற்று முன்தினம் மாலை 5-55 மணிக்கு நேரம்குறித்து வைக்கப்பட்ட குண்டு ஒன்று வெடித்தது. இதில் பொதுமகன் ஒருவர் காயமடைந்தார்.

நகரில் உள்ள படையினரின் சென்றி ஒன்றுக்கு அருகில் இக்குண்டு வெடித்ததாகவும்- சென்றியில் பணியில் ஈடுபட்ட படையினர் பணியை முடித்து சென்றதால் பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

அதே நேரம்—பாண்டிருப்பில் உள்ள மின்டிரான்ஸ்போமர் ஒன்றுக்குள் இருந்து ஒன்றரைக்கிலோ எடையுள்ள குண்டு ஒன்று படையினரால் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டது. (இ-21-3)

புலியாங்...

(மூன்றாம் பக்கத் தொடர்)

—தமது விடுதலைப் போரில் மேலும் தீவிரத்தைக் காட்ட புலிகள் தீர்மானிக்கலாம்.

அப்படியான சந்தர்ப்பத்தில் உலக அபிப்பிராயம் தமக்கு எதிராகத் திரும்புமோ என்ற அச்சத்தால் தாம் இதுவரை நாடாமல் ஒதுங்கிய வழிமுறைகள், நடவடிக்கைகள் போன்றவற்றை கூட புலிகள் இனிமேல் நாட முயற்சிக்கலாம்.

★ அமெரிக்க எதிர்ப்பை உதாசீனப்படுத்தி விட்டு தமது சுதந்திரமான செயற்பாட்டை புலிகள் தொடர்ந்தால், உலகில் உள்ள அமெரிக்க எதிர்ப்புச் சக்திகள் (கியூபா, ஈராக் போன்ற நாடுகள்) மறைவில் புலிகளுக்கு உதவ முயற்சிக்கும் நிலையும் ஏற்படலாம்.

அதாவது புலிகளைப் பயங்கரவாத இயக்கங்களின் பட்டியலில் சேர்ப்பதாக அறிவித்ததன் மூலம் அமெரிக்காவிலும் மேற்குலக நாடுகளிலும் புலிகளின் நடவடிக்கைகளுக்கு கட்டுப்பாடு விதிக்கவழி செய்த அமெரிக்கா அதே அறிவிப்பு மூலம் உலகில் உள்ள அமெரிக்கஎதிர்ப்பு சக்திகளுடன் நட்புறவாகப் போகக் கூடிய களம் ஒன்றையும் புலிகளுக்கு அமைத்துக் கொடுத்திருக்கின்றது.

அமெரிக்க அறிவிப்புத் தொடர்பாக புலிகள் என்னபதில் நடவடிக்கை எடுக்கப் போகின்றார்கள் என்பதை யாரும் இப்போதே திட்டவட்டமாகக் கூறிவிட முடியாது.

இது தொடர்பாக தமிழீழ விடுதலை புலிகளின் தலைமைப்பீடம் உத்தியோகபூர்வ அறிக்கையை வெளியிடக் கூடும் என தற்போது எதிர்பார்க்கப்படுகின்றது. ★

கிரிக்கெற் பிரியர்களுக்கோர் நற்செய்தி!

நெல்லியடி வாணிபர் கழகம் நடத்தும்

20 ஓவர், 5 ஓவர் கொண்ட மென்பந்து கிரிக்கெற் கூற்றுப் போட்டி - 1997

விண்ணப்பக் கட்டணம் இலவசம்

விண்ணப்ப முடிவுத்திகதி: 15 - 10 - 97

விண்ணப்பப்படிவங்களை காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

தலைவர்

நெல்லியடி [சி/1740]

தரமான படங்கள்!

துரித சேவை!

SUNIL ARTS

சுனில் ஆர்ட்ஸ்

272, ஸ்ரான்லி வீதி.
(மேல் மாடி)
யாழ்ப்பாணம்.

★ 14 - 09 - 97 வரை ஒப்படைத்த றோல்களின் படங்களை பெற்றுக்கொள்ளலாம். (சி-1747)

பிற்போடப்பட்டுள்ளன

15-10-97 அன்று நடைபெறவிருந்த தென்னிந்திய திருச்சபையின் பொன்விழா நிகழ்ச்சிகள் யாவும் இளைப்பாறிய முன்னாள் பேராயர்

D.J. அம்பலவாணரின்

மறைவையொட்டி பிற்போடப்பட்டுள்ளன.

செயலாளர்
தென்னிந்திய திருச்சபை
வட்டுக்கோட்டை

(/சி1746)

அதிரடி அங்கு

□ ஆயுதக் குழுக்களினால் கைதான பின்னர் தகவல் தெரியாத நிலையில் உள்ள அரசாங்க ஊழியர்களுக்குரிய சம்பளத்தை — அவர்கள் ஐம்பத்தியைந்து வயதை அடையும் வரை — அவர்களது மனைவிக்கு வழங்க பொது நிர்வாக அமைச்சின் 25 - 09 - 1986 ஆம் திகதி 343 ஆவது இலக்க சுற்றறிக்கை வழி செய்கின்றது.

யாழ் செயலகம் இந்த சுற்றறிக்கையைப் பின்பற்றி உரியவர்களுக்கு வேதனத்தை வழங்கி வருகின்றது.

ஆனால் யாழ். கல்வித் திணைக்களமும், யாழ். மாநகரசபையும் இத்தகைய விடயத்தில் பின்னடிப்பதாகக் கேள்வி — தேவையற்ற விவகாரங்களில் தலையை நீட்டி, வாங்கிக் கட்டிக் கொள்ளும் அதிகாரிகள் தேவையான—தங்களுக்குகடமையாகஒதுக்கப்பட்டுள்ள—விடயங்களில் இழுத்துப் பறிப்பது ஏன்?

★ ★ ★ ★

□ 'ரௌடியிஸம்' குறித்து இந்தப் பத்தியில் கடந்த வாரம் குறிப்பிட்டிருந்தோம். மேலும் ஒரு தகவல் இது.

இவ்வார முற்பகுதியில் யாழ். பாடசாலைகள் ஆசிரிய தினத்தை சிறப்பாகக் கொண்டாடின. ஆசிரியர்களைக் கௌரவித்துப் போற்றும் பல்வேறு நிகழ்வுகள் பரவலாக நடைபெற்றமை மகிழ்ச்சிக்குரியது. அத்தகைய ஆசிரிய தின நிகழ்வு ஒன்றில் யாழ்ப்பாணத்தின் பிரபல கல்லூரி ஒன்றின் அதிபர் ஆதங்கத்துடன் கூறிய விடயங்கள் இவை. தனக்கு ஏற்பட்ட அனுபவத்தை அவர் விபரித்ததாகத் தகவல்.

''அதிபரைக் குத்துவதற்காக கத்தியுடன் வழிமறிக்கின்றார்கள்; தாக்குவதற்தாக பொல்லுடன் பாய்கின்றார்கள்; 'பாத்ரூம்' சுவர், மதில் போன்றவற்றில் அதிபரைப் பற்றி அசிங்கமாக எழுதுகின்றார்கள்'' — என்ற சாரப்பட தமது வேதனையைக் கொட்டித் தீர்த்திருக்கின்றார் அவர். இத்தகைய செயல்களில் ஈடுபடும் மாணவர்கள் கண்டிக்கப்பட வேண்டியவர்கள். மாணவர்கள் மத்தியிலும் 'ரௌடியிஸம்' முகிழ்க்கத் தொடங்கிவிட்டதோ என்ற சந்தேகத்தை இது ஏற்படுத்தியுள்ளது.

இத்தகைய தவறான போக்குகளை எதிர்த்து நிற்பதற்கான தார்மீகப் பலமும், தைரியமும் தாம் சார்ந்த கல்விச் சமூகத்திலிருந்து அதிபருக்குக் கிடைத்தாற்றான் அவர் தமது கடமையைக் சரிவரஇயற்ற முடியும். வெள்ளை உடுப்பும், ரையும் மாத்திரம் இந்தப் பலத்தைத் தந்து விடப்போவதில்லை. தமது கல்விச் சமூகத்தை அவர் புரிந்து கொள்வதுதான் முக்கியம். அந்தப் பலத்தோடுதான் முன்னாள் அதிபர்கள் 'கம்பீர' ஆட்சி நடத்தினார்கள். திணைக்கள மேலதிகாரிகளின் பலத்தை அவர்கள் நம்பியிருக்கவில்லை.

கொக்குவிலிலும் ஒரு பாடசாலையுடன் சார்புடையவர்கள் கல்வி அதிகாரி ஒருவருக்கு எதிராக மிரட்டல் சுவரொட்டிகள் எழுதி ஒட்டியிருப்பதாகத் தகவல். அநாமதேய சுவரொட்டிகள் எழுதுபவர்கள் உண்மையில் முதுகுத் துணிவில்லாதவர்கள் என்றே கூறவேண்டும். தங்கள் பெயரை — தங்கள் அமைப்பின் பெயரை — வெளிப்படுத்தி. சுவரொட்டிகளை ஒட்டினால் அதில் இருக்கும் கருத்தைப் பார்க்கலாம். அப்படியில்லாத சுவரொட்டிகள் வெறும்வேடிக்கைக்கு உதவுமே தவிர. அதில் உள்ள கருத்துக்களை எடுக்கத் தேவையில்லை.

அதிகாரிகள் செய்யும் அதிகாரத் துஷ்பிரயோகத்தை சுவரொட்டி மிரட்டலால் திருத்த முயற்சிப்பது பயனற்றது; முறையற்றது. உரிய காலத்தில்— உரிய இடத்தில் — உரியவாறு — அவர்களின் தவறை அவர்களுக்குப் புரிய வைக்கவே முயற்சி எடுக்க வேண்டும்.

★ ★ ★

□ இலங்கை வங்கி உட்பட யாழ். குடாநாட்டில் இயங்கும் பல வங்கிகளில் பெரும் ஊழியர் பற்றாக்குறை வெற்றிடங்கள் நிரப்பப்படவில்லை. இதனால் வங்கி நடவடிக்கைகள் பாதிப்பு; மக்கள் சேவை பாதிப்பு. மக்கள் நீண்ட நேரம் — காலம் — காத்திருக்க வேண்டிய அவலம்.

ஒரு பிரபல வங்கியில் யாழ்ப்பாணத்துக்குப் பொறுப்பான மூத்த அதிகாரி கொழும்பிலிருந்து செயற்படுகின்றாராம். அவரின் பார்வை யாழ்ப்பாணத்துக்குத் திரும்புமா? அந்த வங்கியின் யாழ் கிளைகளின் ஆளணிப் பற்றாக்குறை நீங்குமா? ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்.

★ ★ ★

□ தற்போது பிளாஸ்டிக் போத்தல்களில் ஒரு லீற்றர், ஒன்றரை லீற்றர் அளவுகளில் வரும் குளிர்பான ரக சோடாக்களை மூடிய நிலையில் ஒரு குலுக்குக் குலுக்கினால் உள்ளே 'காஸ்' ஏறி, பிளாஸ்டிக் போத்தல், கண்ணாடிப் போத்தல் போல பலமடைந்து விடுவதைக் காணலாம். 'காஸ்' விடயத்தில் கொக்கோகோலா விசேடமானது. அதில் உள்ள 'காஸ்' காரணமாக, அரை லீற்றர் 'கோக்கை' ஒராள் முழுதாகக் குடிக்க முடியாமல் இருக்கும்; அதன் காஸ் அவ்வளவு வீரியமாக இருக்கும்.

ஆனால் சிங்கப்பூரில் புட்டியில் அடைக்கப்பட்டது எனத் தெரிவித்து ஒன்றரை லீற்றர் பிளாஸ்டிக் போத்தலில் யாழ்ப்பாணத்தில் விற்கப்படும் கோக்கில் காஸும் இல்லை; ஒரு மண்ணும் இல்லை. வெறும் ''எஸன்ஸ்'' கலவை போல அது உள்ளது. நாள் பிந்திய சோடாவா? அல்லது வேறு ஏதும் கலப்படமா? உரிய அதிகாரிகள் 'கண்' வைக்க வேண்டிய பிரச்சினை இது.

- மின்னல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராணுவத்தினர் இரத்த தானம்

யாழ்ப்பாணம், ஒக். 11

இலங்கை இராணுவத்தின் 48 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடு முகமாக நேற்று இராணுவத்தைச் சேர்ந்த 15 பேர் யாழ். போதனா வைத்தியசாலை இரத்தவங்கியில் இரத்ததானம் வழங்கினர்.

ஆஸ்பத்திரியிலுள்ளநோயாளர், ஆஸ்பத்திரி ஊழியர்களுக்கும் மதியபோசனமும் வழங்கினார்.

சுன்னாகம் புனித அந்தோனியார் தேவாலயத்திலும் இராணுவத்தினர் விசேட வழிபாட்டை மேற்கொண்டனர். (உ-15-51)

கண்ணீர் அஞ்சலி

பேராயர்

அறிவர் D. J. அம்பலவாணர்

எமது முன்னாள் பேராயரின் திடீர் மறைவை அறிந்து ஆழ்ந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைகிறோம் பேராயரின் மறைவு எமது கல்லூரிக்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்.

அதிபர், ஆசிரியர்கள்,
ஊழியர்கள், மாணவிகள்.
உடுவில் மகளிர் கல்லூரி.

(சி/1749)

இதய அஞ்சலி

எமது பாடசாலை அதிபர்

திருமதி ச. கனகராசா

அவர்களின் தகப்பனார்

பொன்னையா சங்கரப்பிள்ளை

அவர்களின் மறைவிற்கு எமது இதய அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆசிரியர்கள், மாணவர்கள்,
பெற்றோர், பழைய மாணவர்கள்,
அச்சுவேலி
சரஸ்வதி வித்தியாசாலை.

(50435)

மரண அறிவித்தல்கள்

பொன்னையா சங்கரப்பிள்ளை

நாவற்குளியைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா சங்கரப்பிள்ளை 10-10-1997 இல் சிவபதம் அடைந்துவிட்டார்.

இவர் காலஞ்சென்ற அன்னம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற கந்தசாமி (டிப்போ முகாமையாளர், இ. போ. ச. ஹற்றன்), திருமதி சகுந்தலாதேவி, கனகராசா [அதிபர், அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை), குலசிங்கம், (லண்டன்), தில்லைநாதன் (சுவிஸ்), காலஞ்சென்ற யோகேஸ்வரன் மற்றும் சறோஜினி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுகிர்தமலர் (கனடா), கனகராசா (இ. போ. ச. கோண்டாவில்), தயாநிதி (லண்டன்), சாரதாதேவி (சுவிஸ்), இராசரத்தினம் (கனடா) ஆகியோரின் அன்புமிகு மாமனாரும், சுதர்சினி, தீபதர்சினி (கனடா), ஸ்ரீமோகனன் (மக்கள் வங்கி, கன்னாதிட்டி), சாமினா, சர்மிலா, மாலினா, அச்சுதன் (லண்டன்), லோஜிதா, ஜனகன், திலானி (சுவிஸ்), ரெலி, சஞ்சீவ் (கனடா) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 10 - 10 - 1997 வெள்ளிக்கிழமை வில்லூன்றி மயானத்தில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
க. கனகராசா
(மருமகன்)

60, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
[50441]

திருமதி வள்ளிப்பிள்ளை வேலுப்பிள்ளை

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் அல்வாய் கிழக்கை வசிப்பிடமாகக் கொண்டவருமான திருமதி வள்ளிப்பிள்ளை வேலுப்பிள்ளை கடந்த 8 ஆம் திகதி காலமானார்.

இவர் பொன்னம்பலம் வேலுப்பிள்ளையின் அன்பு மனைவியும், ஜெயராசசிங்கம், புஸ்பராணி, பாலசுப்பிரமணியம் (நேரக் கணிப்பாளர், சிமெந்துக் கூட்டுத்தாபனம்), செல்வராணி, பாலகிருஷ்ணன் (முன்னாள் எரியூட்டுனர், சிமெந்துக் கூட்டுத் தாபனம், ஓமான்), இந்திராணி, பத்மலோசனி (ஆசிரியர், மகாஜனாக் கல்லூரி), தர்மசீலன் ஆகியோரின் அன்புத் தாயாரும், சுப்பிரமணியம் (கொழும்பு), புஸ்பராணி, ரமணி ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் கருகம்பன் மயானத்தில் நடைபெற்றன.

தகவல்:
வே. பாலசுப்பிரமணியம்
(மகன்)

'அம்பிகைவாசா'
அல்வாய் கிழக்கு,
அல்வாய்.
(50438)

சிறுவர் விளையாட்டுப் போட்டி

கைதடி கலைநகர் அறவழி மழலைகள் கல்விப் பூங்காவின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணி முதல் மழலைகள் கல்விப் பூங்கா வளர்ச்சிக் குழுத் தலைவர் இ. செல்வரத்தினம் தலைமையில் நடைபெறும். பிரதம விருந்தினராக அறவழி நிறுவனச் செயலாளர் கே. கோபாலகிருஷ்ணன் கலந்து கொள்வார். (ஐ-ரி)

கிரிக்கெட் ஆட்டங்கள்

டொனால்ட் கணேஷ்குமார் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்காக யாழ்ப்பாணம் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் — ஐம்பது மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களைக் கொண்ட — தோற்றுப்போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள் — வி. எஸ். பி. நிறுவனத்தின் ஆதரவில் — யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இன்றும் நாளையும் காலை 9 30 மணி முதல் நடைபெற விருக்கின்றன. பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ இன்று:- ஜொலிஸ்ரார்ஸ் வி.க.எதிர் மானிப்பாய் பரிஷ் வி. க.

★ நாளை:- யாழ். பல்கலைக்கழக அணி எதிர் ஜொனியன்ஸ் வி. க. (உ)

சமய நிகழ்ச்சிகளில்

வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரலராஜப் பெருமாள் கோயிலின் வருடாந்தத் தேர்த் திருவிழா நேற்றுக் காலை சிறப்பாக நடைபெற்றது. பெரும் எண்ணிக்கையான அடியார்களின் ''அரோகரா'' கோஷத்தின் மத்தியில் பெருமாள் தேரில் வீதிவலம் வந்தார். தேர்உலா முடிந்து சுவாமி உள்ளே சென்ற பின்னர் நகரில் பலத்த மழை பெய்தது. (ஐ-30)

★ ★ ★

வண்ணை - கலட்டி- எச்சாட்டி ஸ்ரீ மஹாமாரி அம்மன்ஆலய கேதாரகௌரி பூசையும், இலட்சார்ச்சணையும் இன்று சனிக்கிழமை முதல் ஆரம்பமாகி எதிர் வரும் 30 ஆம் திகதி வரை நடைபெறும். (ஐ 30)

★ ★ ★

நல்லூர் வடக்கு சந்திரசேகரப் பிள்ளையார் கோயிலில் இன்று காலைப் பூசையைத்தொடர்ந்து 7-30 மணியளவில் மானம்பூத் திருவிழா நடைபெறும். (ஐ)

★ ★ ★

சங்கத்தானை மீனாட்சி அம்மன் தேவஸ்தானத்தில் இன்று பிற்பகல் 2 மணிக்கு மானம் பூ உற்சவமும் சுவாமி நகர வீதி வலம் வருதலும் இடம் பெறவுள்ளன. (ஐ-31)

★ ★ ★

சரசாலை இலந்தைத்திடல் வீரமாகாளி கோயிலிலும், சாவகச்சேரி வடக்கு மண்டுவில் கண்ணகை அம்மன் கோயிலிலும் இன்று பிற்பகல் 2 மணிக்கு மானம்பூத் திருவிழா நடைபெறும். (ஐ-31)

99- Accounting

Mr. BALAVASAN

தொங்கல் க/கு

ஆரம்பம்: 13-10-97

5 – 6 P. M.

SHAMROCK

(50439)

நவராத்திரி நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஒக். 11

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் வாணி விழா இன்று காலை 10.30மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெற உள்ளது. யாழ். வலயம் ii கல்விப்பணிப்பாளர் சி. சிவராசா பிரதம விருந்தினராகவும், பருத்தித்துறை பிரதிக் கல்விப் பணிப்பாளர் வே. தி. செல்வரத்தினம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். (ஐ-9)

★ ★ ★

யாழ். மாவட்ட நீதிமன்றத்தினரின் வாணி விழா இன்றுகாலை 10.00 மணிக்கு 4 ஆம் குறுக்குத்தெருவில் அமைந்துள்ள நீதிமன்ற மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஐ-9)

★ ★ ★

மானிப்பாய் வடக்கு வளர்மதி சனசமூக நிலையத்தில் இன்று பிற்பகல் 4 மணிக்கு நிலையத் தலைவர் சி. இரத்தினசிங்கம் தலைமையில் விஜயதசமி விழா நடைபெறும். (ஐ-90)

★ ★ ★

யாழ். பாலர் கல்விக் கழகத்தின் நிர்வாகத்தின் கீழ் யாழ். இந்துக்கல்லூரி வீதியில் இயங்கும் 'நாவலர் பாலர்சோலை' பாடசாலை மாணவர்களின் நவராத்திரி கலைநிகழ்ச்சி இன்று காலை 10-00 மணி முதல் நடைபெறும். (ஐ-71)

★ ★ ★

கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலையத்தில் இன்று மாலை 5 மணிக்குவிஜயதசமி விழா நடைபெறும் (ஐ-ரி)

★ ★ ★

கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தின் கலைமகள் விழா இன்று காலை 8.30 மணிக்கு அதிபர் ஆ. சோதிலிங்கம் தலைமையில் நடைபெறும்.

★ ★ ★

கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயத்தின் கலைமகள்விழா இன்றுகாலை 9.30மணிக்கு அதிபர் திருமதி பரிமளா-அன்னலிங்கம் தலைமையில் இடம்பெறும். (ஐ-30)

★ ★ ★

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் இன்று சனிக்கிழமை காலை 8.00 மணிக்கு ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் சிறார்களுக்கு ஏடு தொடக்கி வைப்பார். (ஐ-30)

★ ★ ★

வட்டுக்கோட்டை சங்கரத்தைசின்னம்மாவித்தியாசாலையில் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு வாணி விழா நடைபெறும். பிரதம விருந்தினராக சங்கானை கல்விக்கோட்ட அதிகாரி வ. கணேசலிங்கம் கலந்து கொள்வார். (ஐ)

★ ★ ★

யாழ். வைத்தீஸ்வரா கல்லூரி இந்து மாணவர் மன்றம் நடத்தும் விஜயதசமி விழா இன்று காலை 9 மணி முதல் விவேகானந்தா மண்டபத்தில் நடைபெறும். (ஐ)

★ ★ ★

கோப்பாய் தெற்கு கட்டைப்பிராய் சரஸ்வதி சனசமூக நிலைய பாலர் பாடசாலை சிறார்களுக்கு ஏடு தொடக்கும் வைபவம் இன்று காலை 10. 30 மணி முதல் நடைபெறும். நல்லை ஆதீன முதல்வர் ஆசியுரை வழங்கி சிறார்களுக்கு ஏடு தொடக்கி வைப்பார். (ஐ-30)

★ ★ ★

கைதடி கல்விக்கழகத்தின் வாணி விழாவும், கணித நூல் வெளியீடும் இன்று மாலை 4 மணிக்கு கழகமண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. (உ-3)

கோழி மருந்து விநியோகம்

குருநகர், ஒக். 11

கோழிகளுக்கான கொள்ளை நோய்த் தடுப்பு மருந்து இன்று சனிக்கிழமை நாவலர் வீதியில் பிறவுண் வீதிச் சந்திக்கு முன்பாக அமைந்துள்ள கால்நடை உற்பத்தி சுகாதாரத்திணைக்களத்தில் வழங்கப்படவுள்ளது.

கோழிகளையோ, குஞ்சுகளையோ அங்கு கொண்டு வர வேண்டாம் என்றும் மருந்தைப் பெறுவதற்குத் தேவையான போத்தல்களை மட்டும் கொண்டு வருமாறும் கோழி வளர்ப்போர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். (ஐ -51)

அரியாலை ஐக்கிய கழகத்தின்

பொன்விழா - 1997

[50 ஆவது ஆண்டு நிறைவுவிழா - 97]

கரபந்தாட்டச் சுற்றுப் போட்டி

[வடமாகாண ரீதியானவை]

1. 'செற் அப்' கேம்
2. 'ஓவர்' கேம்

விண்ணப்ப முடிவு திகதி: 25-10-1997 சனி

தொடர்பு கொள்ளவேண்டிய விலாசம்:

திரு. க. நாகேந்திரம்
(கரபந்தாட்டப் பொறுப்பாளர்)

785, நாவலர் வீதி, அரியாலை,
யாழ்ப்பாணம்.

தலைவர்,
200 A கண்டி வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம். (50444)

கண்ணீர் அஞ்சலி

பேராயர் D. J. அம்பலவாணர்

எமது மதிப்பிற்குரிய முன்னாள் பேராயர் D. J. அம்பலவாணர் அவர்களின் மறைவுச் செய்தி எம்மையெல்லாம் ஆழ்ந்த துயரத்துக்குள்ளாக்கியது. அன்னாரின் மறைவினால் துயருறும் பேராயரின் குடும்பத்தினருக்கும், தென்னிந்திய திருச்சபை யாழ் அத்தியட்சாதீனத்திற்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பேராயர், குருமார், சபையார்
அங்கிலிக்கன் திருச்சபை,
கொழும்பு அத்தியட்சாதீனம்.

(50443)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜாலியன் வாலா பாக்

பிரிட்டிஷ் மகாராணி எலிஸபெத் நாளை இந்தியாவுக்கு விஜயம் செய்கிறார். இந்தியப் பயணத்தின் போது அவர் அமிர்தசரஸ் நகருக்கும் செல்லவுள்ளார். அங்கு 1919 இல் பிரிட்டிஷ் படைகளால் பெரும் எண்ணிக்கையான பொதுமக்கள் காட்டுமிராண்டித்தனமான முறையில் படுகொலை செய்யப்பட்ட ஜாலியன் வாலா பாக் நினைவுச் சதுக்கத்தில் மகாராணி மலரஞ்சலி செலுத்தவுள்ளார். நான்கு பக்கமும் அடைக்கப்பட்ட ஜாலியன் வாலா பாக் பூங்காவின் நுழைவாயிலை மேலே உள்ள படத்தில் காணலாம்.

இந்த இடம் தற்போது புனித நினைவுச் சின்னமாகப் பேணப்படுகிறது. (விசேட கட்டுரை சஞ்சிகையின் ×I ஆம் பக்கத்தில்)

தீர்வுத்திட்டம் 24 இல் நாடாளுமன்றத்துக்கு!

கொழும்பு, ஒக். 11

அதிகாரப்பரவலாக்கல் யோசனை தொடர்பான ஆவணம் எதிர்வரும் 24 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என நம்பகமாகத் தெரியவருகிறது.

அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் அடுத்த மாதம் 5 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர் இறுதியாக நாடாளுமன்றம் கூடும் தினமான 24 ஆம் திகதி மேற்படி ஆவணம் சமர்ப்பிக்கப்படும் எனத்தெரியவருகிறது.

அதே நேரம் —

இன்று விசேடமாகக் கூடும் அமைச்சரவைக் கூட்டத்தில் அதிகாரப்பரவலாக்கல் அலகு குறித்து இறுதி முடிவு எடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ-21-3)

வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்)

பாஸ் வழங்கும் முறையை இலகுவாக்குமாறு கோரியும் — யாழ். மாவட்டத்தில் கைதாகி தகவல் தெரியாதுள்ளவர்கள் தொடர்பாக உடன் நடவடிக்கை எடுக்கக் கோரியும்—

கொழும்பு மற்றும் இடங்களில் தமிழ்மக்கள் கண்டபடி கைது செய்யப்படுவதை நிறுத்தும்படி கோரியும்—

இந்தக் ஹர்த்தால் நடத்தப்படுகிறது.

திங்கள் கடைகள், பாடசாலைகள் ஆகியவற்றை மூடி பூரண ஹர்த்தால் நடத்தி நகர் ஸ்தம்பிதம் அடையும் வகையில் ஒத்துழைப்பு வழங்குமாறு வர்த்தகர்களிடம் புளொட் கோரியுள்ளது.

(உ-3-164)

85 இணைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்)

மேலதிக இணைப்புக்கள் வழங்கப்படும் என்றும்—

''ரெலிகொம்'' யாழ். பிராந்திய பொறியியலாளர் எஸ். பாலசுப்பிரமணியம் தெரிவித்தார். (உ-3)

ஒரே குடும்ப...

(முதலாம் பக்கத் தொடர்)

வன் சின்னத்தம்பி முருகானந்தம் (வயது 42), இவர்களது உறவினரான தம்பிமுத்து சரஸ்வதி (வயது 58) ஆகிய நால்வரும் காயமடைந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். மற்றுமிருவரான கதிரவேலு கமலாம்பிகை (வயது 29), சண்முகம் இரத்தினம் (வயது 58) (பெண்) ஆகிய இருவரும் தனியார் வைத்திய நிலையத்தில் சிகிச்சை பெற்றனர்.

இரவு 7-30 மணிக்கு வளவில் குப்பை கொளுத்திய வேளையில் குப்பைக்குள் கிடந்த வெடிப்பொருள் வெடித்ததனால் இக்கதி நேர்ந்ததாக ஒரு சாராரும்—

குடும்பத்தகராறு அமர்க்களத்தில் குடும்பத்தவர்கள் ஒருவரிடமிருந்த கிரனேட் வெடித்து இச்சம்பவம் நிகழ்ந்ததாக மற்றொரு சாராலும் — தெரிவிக்கப்பட்டது.

உண்மையில் என்ன நடந்தது என்பதை ஊர்ஜிதப் படுத்த முடியவில்லை.

இச்சம்பவம் தொடர்பாக ஒருவர் விசாரணைக்குக் கூட்டிச் செல்லப்பட்டிருப்பதாகத் தெரியவந்தது.

(உ-15-51)

இணைப்...

(முதலாம் பக்கத் தொடர்)

போல —

தற்போதைய அரசுத் தரப்பு யோசனைகளிலும் இணைப்புத்தொடர்பான சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவதை சில காலத்துக்கு அல்லது ஆண்டுகளுக்கு ஒத்திவைப்பதற்கு ஏற்பாடுசெய்து, அதனடிப்படையில் அந்த வாக்கெடுப்பை ஒத்திவைக்கலாம் என தற்போது ஒரு திட்டம் முன்வைக்கப்பட்டிருக்கின்றதாம்.

அந்தத் திட்டத்தை அரசு சாதகமாகப் பரிசீலிப்பதாகத் தெரிகின்றது.

இதேசமயம் —

அரசு முன்வைத்துள்ள புதிய யோசனைகளின் படி, நாடு முழுவதும் பத்து முதல் பதின்மூன்று அதிகாரப் பரவலாக்கல் அலகுகள் இருக்கும் எனத் தெரியவருகிறது.

கொழும்பு மாநகரசபை, கோட்டை ஸ்ரீ ஜெயவர்த்தனபுர நகரசபை ஆகியவற்றை உள்ளடக்கியதாக தலைநகர் நிர்வாக அலகு ஒன்று உருவாக்கப்பட்டு மத்திய அரசின் கட்டுப்பாட்டில் அது இயங்கும்.

இந்தியாவிலும் தலைநகர் புதுடில்லி தனி யூனியன் பிரதேசமாக இயங்குவது குறிப்பிடத்தக்கது.

மேல்மாகாண அலகில் களுத்துறை, கம்பஹா மாவட்டங்கள் இடம்பெறும். கொழும்பு மாநகரசபை, ஜெயவர்த்தனபுர நகரசபை இந்த அலகில் இடம்பெறாது.

மத்திய மாகாண அலகில் கண்டி, நுவரெலியா, மாத்தளை ஆகிய மாவட்டங்கள் இடம்பெறும்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தை பொறுத்தவரையில் அதன் அலகு தொடர்பான முடிவு எடுக்கப்படும்போது குறைந்தது இரு அலகுகளாவது இருக்கும் வடக்குக் கிழக்கு அலகுக்குப் புறம்பாக தென் கிழக்கு என்று முஸ்லிம்களுக்குஎன ஓர் அலகு உருவாக்கப்படும்.

ஏனைய மாகாணங்களுக்கு தனி அலகுகள் இடம்பெறும்.

(உ-21-3)

ஆயர்...

(முதலாம் பக்கத் தொடர்)

பட்டார்.

தளராத பக்தியும், சிறந்த மதிநுட்பமும், அயராத உழைப்பும், தளராத உறுதியும் கொண்ட பேராயர் அம்பலவாணர், 25 வருட கால ஆயர் பணிக்குப் பின்னர் 1993 பெப்ரவரியில் — தமது 65 ஆவது வயதில் —அப்பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.

புங்குடுதீவைச் சொந்த ஊராகக் கொண்ட பேராயர் அம்பலவாணர் நெருக்கடியான காலகட்டங்களில் தமது மண்ணையும் மக்களையும் விட்டுச் செல்லாமல் மக்களுடனேயே இணைந்து நின்று சேவையாற்றியவர்.

அவரது துணைவியார் குடாநாட்டின் சிறந்த மகப்பேற்றியல் டாக்டர் ஆவார். அவரது மகன்மாரில் ஒருவரான சத்திரசிகிச்சை நிபுணர் தயாளன் யாழ். பல்கலைக் கழக மருத்துவ பீடத்துடன் தம்மை அண்மையில் இணைத்துக் கொண்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தப்பி ஓடிய படையினர் இணைய மீண்டும் வசதி!

கொழும்பு, ஒக். 11

இராணுவத்தில் இருந்து தப்பி ஓடியவர்கள் மீளவும் சேவையில் இணைவதற்கு வசதியாக பொது மன்னிப்பு வழங்கும் திட்டம் மீண்டும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா இராணுவத்தின் 48 ஆவதுநிறைவை யொட்டி இச்சலுகை இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் றோஹான் தளுவத்த நேற்று வழங்கினார்.

எதிர்வரும் 24 ஆம் திகதி வரை இந்த பொது மன்னிப்பு நடைமுறையில் இருக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(உ-21-3)

ரயில் நிலையத்தில் மிதிவெடி!

யாழ்ப்பாணம், ஒக். 11

யாழ். ரயில் நிலையத்துக்குச் சமீபமாக நேற்றுப் பிற்பகல் புல் மேய்ந்து கொண்டிருந்த பசுமாடு ஒன்று மிதிவெடியில் சிக்கியது. அதனால் மாட்டின் பின்கால்கள் இரண்டும் துண்டிக்கப்பட்டன.

மன்னாருக்கு நாளை சேவை

யாழ்ப்பாணம், ஒக். 11

காங்கேசன்துறையில் இருந்து மன்னாருக்கு நாளை பயணிகள் கப்பல் சேவை நடைபெறவிருப்பதாக யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது.

பட்டியல் இலக்கம் 606க்கு உட்பட்டவர்களை நாளை காலை 7 மணிக்கு யாழ். ரயில் நிலையத்துக்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளது.

(உ-3)

சிறுகதை குறித்து...

கடந்த வார சஞ்சீவியில் வெளியான ''நிர்வாக சபைக் கூட்டம்'' என்ற சிறுகதைக்கு பல வாசகர்களிடமிருந்தும் பாராட்டுக் கடிதங்கள் கிடைத்துள்ளன.

இச்சிறு கதையை வரைந்த சு. சிவராசா பார்வையை முற்றாக இழந்தவர்; நாவற்குழி மகா வித்தியாலயத்தில் ஆசிரியராகப் பணிபுரிபவர்.

இந்தக்கதை கற்பனையில் எழுந்தது என்றும்—

பொதுவாக நமது பிரதேச ஆலயங்களில் இடம்பெறும் நிகழ்வுகளின் சாயலை ஒத்ததாக இக்கதைப் போக்கு இருப்பதால், தங்களைச் சித்திரிக்கும் வகையில் சில கதாபாத்திரங்கள் அமைக்கப்பட்டிருப்பதாக சிலர் கருதுவது தவறானது என்றும்—

கதாசிரியர் குறிப்பிடுகின்றார். 'யாவும் கற்பனை' என்ற அடிப்படையிலேயே இந்தச் சிறுகதை சஞ்சீவியில் பிரசுரமானது. (ஆ-ர்)

ஐந்து நாள்...

(முதலாம் பக்கத் தொடர்)

வட - கிழக்கே பெரு நிலப்பரப்பு எமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டதால் கரிப்பட்டமுறிப்பில் தங்கியுள்ள படையினருக்கான தரை விநியோகம் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

இந்த மோதல்களில் எமது தரப்பில் 162 பேர் களப்பலியானார்கள்.

531, 532, 533 ஆகிய பிரிக்கேட்டுக்களின் விநியோக மையங்கள், ஆயுதக் கிடங்குகள், உணவுக் களஞ்சியங்கள் கைப்பற்றப்பட்டு அங்கிருந்தவை எம்மால் அப்புறப்படுத்தப்பட்டன.

இத்தாக்குதலில் 12 லட்சம் ரவைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதில் கைப்பற்றப்பட்ட முக்கிய ஆயுத தளபாடங்கள் வருமாறு:-

✠ 120 எம் எம் ஷெல் - 1405 ✠ 120 எம். எம். பரா ஷெல் — 138 ✠ 81 எம். எம். ஷெல் — 6785 ✠ 81எம்.எம். பராஷெல்—83 ✠ ஆர். பி. ஜி. ஷெல்—1677 ✠ 60 எம். எம். ஷெல் — 4,304 ✠ 40 எம். எம். ஷெல் — 1,684 ✠ 81 எம் எம். மோட்டார் — 14 ✠ 60 எம். எம். மோட்டார் — 22 ✠ 50 கலிபர் துப்பாக்கி — 2 ✠ டோசர்—8 ✠ டிரக்டர் — 16 ✠ டிரக் — 3 ✠ பிக்கப் — 2 ✠ பவள் கவசவாகனம் — 2 ✠ பாரம்தூக்கி—1 ✠ லாண்ட் றோவர் — 1 ✠ நவீனவசதி கொண்ட கவசவாகனம் — 1 மற்றும் ஜெனரேட்டர்கள், மோட்டார் சைக்கிள் ஆகியவற்றையும் கைப்பற்றினோம். — இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் —

வவுனியா பெரிய மடுவில் கடந்த புதன்கிழமை படையினர் நடத்திய தாக்குதலில் அறுபதுக்கும் மேற்பட்ட புலிகள் கொல்லப்பட்டதாகவும் பெரும் எண்ணிக்கையானோர் காயமடைந்ததாகவும் அரசுத் தரப்பில் அறிவிக்கப்பட்டது.

(உ-3-164)

பீரங்கி...

(முதலாம் பக்கத் தொடர்)

பெரியமடுப் பகுதி இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலுக்குப் பதிலடியாக படையினரின் பீரங்கிப் பிரிவு மோட்டார் தாக்குதல் நடத்திய சமயமே இச் சம்பவம் இடம்பெற்றது. (உ-21-3)

மரண அறிவித்தல்

சின்னப்பு நடராசா

அராலியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தம்பாலையைச் சேர்ந்தவரும் தற்போது உடுப்பிட்டியில் வசித்துவந்தவருமாகிய சின்னப்பு நடராசா 10-10-97 இல் காலமானார்.

இவர் அராலி சின்னப்பு - சுந்தரம் தம்பதிகளின் மகனும், இரத்தினத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற திருநாவுக்கரசு மற்றும் அற்புதராசா (ராசு—கரன், கைத்தொழிலகம், உடுப்பிட்டி), முத்துராசா (கனடா), யோகேஸ்வரன், விக்னேஸ்வரன் (அப்பன்), மீனலோஜினி ஆகியோரின் அன்புத் தந்தையும், சத்தியதேவி, மாலதி, இரத்தினகுமாரி, பத்மினி, வைரவநாதன் (இந்தியன் ஒவசியஸ் வங்கி, கொழும்பு) ஆகியோரின் மாமனாரும் ஆவார். இவரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
மனைவி
பிள்ளைகள்

அல்வாய் வீதி,
உடுப்பிட்டி.

(50442)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகமனையில் 11 - 10 - 97 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடரொளி சிந்தனை

11 - 10 - 1997 சனிக்கிழமை

சாரங்கா நகை மாடம்

177/4, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

நம்பிக்கை, நாணயம்,
உத்தரவாதத்துடன் 22 கரட்
தங்க நகைகளைப் பெற்றிட
இன்றே நாடுங்கள்!

(சி/1721)

கருத்துக் கலசம்

மேஜோ

மழையே வா!

குடாநாட்டில் ஆறு மாதங்களுக்கு மேலாக மழை பெய்யவில்லை புரட்டாதி மாதமும் கழியும் காலமாகிறது; இன்னும் பல பகுதிகளில் மண் நனையக் கூடியதான மழை தானும் இல்லை.

விசும்பின் நீர் இதோ கீழே விழப் போகின்றது என்பது போல கரு மேகங்கள் காணப் படுகின்றன; இடி முழக்கம் கேட்கிறது; மின்னல் பளிச்சிடுகிறது; குளிர் காற்று வீசுகிறது; மழை கொட்டும் என்று மக்கள் மனம் நம்புகிறது. ஆனால் மண்ணுக்குப் பன்னீர் தெளிப்பது போல நாலு துளி விழுந்ததுடன் எல்லாம் அடங்கி விடுகிறது. பல நாள்களாக இப்படி ஒரு தயக்கம். வானம் எங்களை ஏமாற்றி விளையாடுகிறது!

வெப்பம் அகோரம். பனியும் பொழிகிறது. பலரும் நோயாளிகளாக மாறுகின்றனர்.

குடாநாட்டில் நதியும் இல்லை; மலையும் இல்லை. இங்கு வாழும் மக்களின் விவசாய மற்றும் சகல தேவைகளுக்கும் உதவுவது மாரிமழை ஒன்றே. அந்த மழையும் பொய்த்து விட்டால் வள்ளுவன் கூறியது போல பசியும் பஞ்சமும் வந்து மக்களை வாட்டும்.

விண்இன்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்துள் நின்று உடற்றும் பசி — என்று அவன் சொன்ன நிலை வராது தடுப்பது எங்ஙனம்?

குடாநாட்டில் அடர்ந்த காடு எதுவும் இல்லை. சிறிய அளவில் ஆங்காங்கே பற்றைக் காடுகளே உள்ளன. அதனால், குடாநாட்டின் மழை வளம் வாழ்விடங்களிலும், வெற்றுக் காணிகளிலும், வெளிகளிலும் வளர்க்கப்பட்ட மரங்களிலேயே தங்கியிருந்தது; மாரி மழைக்கு அவையே பெரிதும் உதவின.

பாதுகாப்புக்கென்று போரில் ஈடுபட்ட தரப்பினரும் விறகுக்கென்று பொது மக்களும் மரங்களை அழித்ததன் வினையின் பயன் இது.

மன்னர் ஆட்சிக் காலங்களில் மழை பொய்க்காதிருக்கப் பெரும் யாகங்களும், வேள்விகளும் தொடர்ச்சியாகப் பல நாள்களுக்கு நடத்தப்படுவது உண்டு. அவற்றின் பின்னர் வானம் சிரித்து மழை வருவதுண்டு. அந்தகைய யாகங்கள் இங்கு தாமதியாமல் செய்யப்பட வேண்டும் என்று அன்பர் ஒருவர் எழுதியிருக்கிறார்.

மழை வந்த பின்னர் —

வேறு எந்தத் திட்டத்தையும் விட மரம் வளர்க்கும் திட்டத்துக்கு முன்னுரிமை வழங்க வேண்டிய அவசரம் ஏற்பட்டுள்ளது. ஒவ்வொருவரும் தமது பிறந்த நாளில் தமது வளவில், அயலில், சுற்றாடலில் தமது வயதின் எண்ணிக்கையில் மரத்தை நடலாம். தறித்த, தறிக்கும் ஒவ்வொரு மரத்துக்கும் பதிலாக பத்து மரங்களை நடலாம். மரநடுகையில் நாட்டம் காட்டாவிடில், போகிற போக்கில் இன்னும் பத்து வருடங்களுக்குள்ளேயே நாடு பாலைவனமாகி விடக் கூடும்.

நாமகளைப் போற்றும் நவராத்திரிப் பெருவிழா

''ஆயகலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என்னம்மை—தூய
உருப்பளிங்கு போல்வாள் என்னுள்ளத்தினுள்ளே
இருப்பளிங்கு வாரா தீடர்.''

அன்னை பராசக்தியின் அரவணைப்பில் அகில உலகமும் வாழ்ந்து கொண்டிருக்கிறது என்பதை நன்றியோடு நினைப்பூட்டும் விழாவே நவராத்திரி விழாவாகும்.

''எங்கெங்கு காணினும் சக்தியடா
ஏழு கடல் அவள் வண்ணமடா'' என்ற வாக்கினைப் பல தடவைகள் சொல்லிச் சொல்லி ஆனந்தம் அடைய வேண்டிய நாள்கள் இவை.

மக்கள் வாழ்வாங்கு வாழவும், தெய்வ உணர்வு பெற்றுப் பேரானந்தம் அடையவும் வாய்த்த ஒரு நல்வழியே சமய நெறியாகும். இதனை ''பொய்தீர் ஒழுக்க நெறி'' என்று போற்றுகிறார் வள்ளுவர். பொய்ம்மைப் பாதையை விட்டு உண்மைப்பாதைக்கு வழிகாட்டுவது சமயமாகும். இந்நெறி பற்றி நிற்போருக்கு ஒருபோதும் அவலம் இல்லை. ஏனெனில் அவர்கள் துன்பத்தையும் இன்பமாக ஏற்றுக் கொள்ளும் பக்குவம் வாய்ந்தவர்கள். ''இன்பமே எந்நாளும் துன்பமில்லை'' என்று வாழ்ந்த அப்பரடிகளின் வாழ்க்கை இதற்குச் சான்றாகும்.

நன்றாக வாழவும் வாழ்வின் பயனை அடையவும் எமக்கு வழிகாட்டுவன தெய்வீக விழாக்களே ஆகும். அத்தகைய ஒரு பெருநிகழ்வாக இன்று நடைபெற்றுக் கொண்டிருப்பது நவராத்திரி விழாவாகும். இவ்விழாவில் இறுதி மூன்று நாள்களும் வாணி என்றுசொல்லப்படும் வாக்குத் தேவிக்கு விழா எடுத்துப் போற்றும் திருநாள்களாகும்.

படைப்புக் கடவுளாகிய நான்முகன் நாவில் எக்காலத்தும் வீற்றிருக்கும் காரணத்தால் அவள் 'நாமகள்' என்று போற்றப்படுகிறாள். உண்மை பேசுகின்றவர்களிடத்திலும் அறிவு நூல்களை ஓதுகின்றவர்களிடத்திலும் அன்னை சரஸ்வதி இவ்வாறே எழுந்தருளி அருள் பாலிக்கின்றாள் என்பதை சரஸ்வதி அந்தாதி போன்ற பல பாடல்களில் காண முடிகிறது.

திருக்குறள் அரங்கேற்றத்தின் போது நாமகள் பாண்டியனை நோக்கி கூறியதாகப் பின்வரும் பாடல் அமைந்தது.

''நாடா, முதல்நான் மறைநான் முகன் நாவில்
பாடா, இடைப்பா ரதம்பகர்ந்தேன் — கூடாரை
எள்ளிய வென்றி இலங்கிலை வேல்மாற, பின்
வள்ளுவன் வாயதென் வாக்கு''

'பாண்டியனே, நான் உலகிற்கு உண்மையை உணர்த்த எண்ணிப் படைப்புக் காலமாகிய முதற்காலத்தில் பிரமதேவன் நாவில் வீற்றிருந்து நான்கு வேதங்களைப் பாடினேன். இடைக்காலத்தில் வியாசமுனிவன் நாவில் வீற்றிருந்து பாரதத்தைப் பாடினேன். இப்பொழுது எனது ஆற்றல் திருவள்ளுவனது நாவில் வீற்றிருக்கின்றது'' — என்பது அவ் வெண்பாவின் பொருள். இதனால் இருக்கு முதலிய நான்கும் ஆதிவேதம் என்பதும் பாரதம் மத்தியவேதம் என்பதும் திருக்குறள் உத்தரவேதம் என்பதும் கருத்தாகும்.

பொதுவாக வாணி எல்லா மக்கள் நாவிலும் வீற்றிருக்கின்றாள் எனினும் சிறப்பாக அவள் நல்ல நூல்களைக் கற்பவர் நாவில் வீற்றிருக்கிறாள் என்பதும், அதுவிலும் சிறப்பாக அவள் புதுக்கவி புனையும் புலவர் நாவில் வீற்றிருக்கிறாள் என்பதும் நன்கு விளங்குவனவாகும்.

கலைமகளின் கடாட்சத்தினால் கம்பர் கவிச்சக்கரவர்த்தியாக விளங்கியமை கண்கூடு, அனைத்துக் கலைகளுக்கும் அவளே தலைவியாக இருக்கின்றாள்.

'சகலகலாவல்லிமாலை' என்ற பாடல் தொகுதி குமரகுருபர சுவாமிகளினால் அருளிச் செய்யப்பட்டது. தன்னை வழிபடுபவர்களுக்கு அவரவர் வேண்டியாங்கு அவ்வக்கலைகளை உணர்த்தியருளும் சிறப்பை விளக்கமாகக் காட்டுகிறார் குமரகுருபர சுவாமிகள். சொற்சுவை, பொருட்சுவை, அகத்திணை, புறத்திணை, நயம்படப்பேசும் நாவன்மை, முத்தமிழ்ப்பயிற்சி, கல்வியால் எய்தப்படும் ஒழுக்கம், சொல்வன்மை ஆகிய அனைத்தையும் உணர்த்த வல்ல திறன் அன்னை கலைமகளிடமிருந்தே பெறப்படுகின்

துர்க்காதுரந்தரி

தங்கம்மா அப்பாக்குட்டி

றது என்பதை சகலகலாவல்லி மாலையில் உணர்த்துகிறார் குமரகுருபரர்.

''சொற்கும் பொருட்கும் உயிராம் மெய்ஞ்ஞானத்தின்
தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்'' என்று பாடுவதால் உணர்வரிய மெய்ஞ்ஞானமாக அன்னையைக் காட்டுகிறார் என்பதும் உணரக் கூடியது.

சகலகலாவல்லி மாலையில் கடைசிப் பாடலில் அன்னை கலைவாணியிடம் முழுமையாகச் சரணடையும் திறன் காட்டப்பட்டுள்ளது. இந்நாள்களில் நாம் அனைவரும் அந்தப் பாடலையாவது எமது பிரார்த்தனையில் ஒரு சிறு அங்கமாக அமைத்துக் கொள்வது சாலச் சிறந்தது.

''மண்கண்ட வெண்குடைக்கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண்டனவிற் பணியச் செய்வாய்
படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம் பல்கோடியுண்டேனும்
விளம்பில் உன்போற்
கண்கண்ட தெய்வ முளதோ
சகலகலா வல்லியே!''

ஆகவே அம்பிகையின் சிறப்பு வழிபாட்டிற்குரிய இந்நாள்களில் மனம், மொழி, மெய்களால் அன்னை பராசக்தியை வழிபட்டு நிற்பதோடு தானதர்மங்களைப் பேணி உண்மையையும், நீதியையும் நிலைநாட்டி எழுத்தறிவற்றவர்களுக்கும் ஏழைகளுக்கும், நோயுற்றவர்களுக்கும் வேண்டிய வேண்டியாங்கு உதவிகள் புரிந்து, அனைவரும் நன்னெறியாம் செந்நெறியில் வாழ்வதற்கு அவளை பரிவோமாக!

சக்தியை வேண்டி நிற்போம்

தெய்வத்தைத் தெளிந்து கொள்ள
தெய்வத்தின் பாதம் போற்ற
தெய்வத்தின் நெறியில் நின்றே
சீரிய வாழ்வு வாழ
சைவத்தில் திகழ்வ வான
விரதங்கள் தம்மைப் போற்றி
உய்வதைக் கொண்டோர் எல்லாம்
உயர்ந்தனர் நலங்கள் பெற்றார்,
செல்வமும் வாழ்வில் வேண்டும்
சீரிய வீரம் வேண்டும்
கல்வியும் வாழ்வில் வேண்டும்
கலைகளும் பலவும் வேண்டும்
நல்லவை அனைத்தும் வேண்டும்
நம்முயிர் சிறத்தல் வேண்டும்
வல்லமை வடிவாம் சக்தி
மலர்ப்பதம் வேண்டு வோமே,
சக்தியின் விரதம் காத்தே
தாளிணை வணங்குவோர்கள்
தக்கவை இவைகளென்றும்
தகாதவை இவைகளென்றும்
மிக்கவும் தெளிந்தே கொள்வார்
மேதினி சிறக்க வாழ்வார்
பக்தியின் பயன் ஈ தென்றே
பாரினர் வியக்க வாழ்வார்.

செல்வி பா. பாரதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வஜன வாக்கெடுப்பை எதிர்ப்பதில் தமிழ்க் கட்சிகள் உறுதியாக நிற்குமா?

உள்ளும் புறமும்

குறுமுனி

'பிள்ளையார் பிடிக்க குரங்கான கதை'

அரசாங்கத்தின் தீர்வுத் திட்டத்தையும், அதற்கு அங்கீகாரம் பெறுவதற்கு கடந்த வாரம் ஜனாதிபதி கூட்டிய விசேட அமைச்சரவைக் கூட்டத்தையும் பொறுத்தவரை இந்தப் பழமொழி சாலப் பொருத்தமானது போலத் தோன்றுகின்றது.

1996 நடுப்பகுதியில் அரசு தனது தீர்வுத் திட்ட யோசனைகளின் ஆரம்ப வடிவங்களை வெளியிட்ட போது, அரசு பிள்ளையார் பிடிக்க முயற்சிப்பதாகவே தோன்றியது. ஆனால் இப்போது நாடாளுமன்றத் தெரிவுக்குழுவரை முன்னேறியிருக்கும் தீர்வு யோசனை வடிவங்களைப் பார்க்கும் போது குரங்கின் தோற்றத்தைக் கூட அது எட்டவில்லை என்பது புலனாகியிருக்கின்றது.

அதிகாரப் பரவலாக்கல் அலகைத் தீர்மானிப்பதற்கு கிழக்கு மாகாணத்தில் மூன்று சர்வஜன வாக்கெடுப்புகளை உடன் நடத்துவது என்ற அரசின் யோசனைகளுக்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் உட்பட சகல தமிழ்க் கட்சிகளும் ஒரேயடியாக மறுப்புத் தெரிவித்து விட்டன.

கிழக்கில் முஸ்லிம்களுக்கு என தனியான ஓர் அலகை ஒதுக்குவது என்ற விடயத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியுடன், இணங்கிப் போயுள்ள முஸ்லிம் காங்கிரஸ் கூட, வடக்கு, கிழக்கு இணைப்புக்கு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தும் எண்ணத்துக்கு எதிர்ப்பு வெளியிட்டிருக்கின்றது.

ஆக மொத்தத்தில் தமிழ்க் கட்சிகள் அனைத்தும் — தமிழர் விடுதலைக் கூட்டணி, அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சி, ஈ.பி.டி.பி, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ், ஈரோஸ், ரெலோ, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி ஆகியவையும் — ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தும் அரசின் திட்டத்தை ஒட்டு மொத்தமாக எதிர்க்கின்றார்கள் என்பதே இன்றைய நிலைப்பாடாகும். ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரை மிக பகிழ்ச்சி தரும் விடயம் இதுவாகும்.

ஆனால் இந்த முடிவில் அக்கட்சிகள் நிலையாக இறுதி வரை நின்று பிடிக்குமா என்பதுதான் இன்று தமிழர்களின் மனதைக் குடையும் முக்கிய அம்சமாக இருக்கின்றது

அற்ப, சொற்ப சலுகைகள் கிடைக்கும் என்ற நம்பிக்கை பிறந்துவிட்டால் — ஏதேதோ காரணங்களைக் கூறிக்கொண்டு — நெல்லிக்காய் மூடை அவிழ்த்துக் கொட்டுண்டதுபோல நாளா புறமும் சிதறி ஓடிப்போகக் கூடியவை இக்கட்சிகள் என்பது பொதுவாகத் தமிழரின் அபிப்பிராயமாகும்.

இந்த அபிப்பிராயத்தை மெய்யாக்காதவாறு அவை நடந்து கொள்ளவேண்டும். தற்போது நாடாளுமன்றத்தில் இடம்பெற்றுள்ள தமிழ்க் கட்சிகள் — அவை தமிழ் மக்களை உண்மையில் பிரதிநிதித்துவப் படுத்துகின்றனவா என்ற கேள்வி ஒருபுறம் இருக்க—இந்த விடயத்தில் மிக அவதானமாக இருக்க வேண்டும். அற்ப ஆசைகளுக்கும் சொற்ப சலுகைகளுக்கும் எடுபட்டு தமிழினத்தை விற்கும் வேலையில் இறங்கிவிடக் கூடாது. அவர்கள் அப்படிச் செய்தால் தமிழர்கள் அவர்களை நிரந்தரமாக ஒதுக்கி விடுவர்.

தீர்வுப்பொதி என்ற பெயரில் அரசு போடும் தாளத்துக்கு தமிழ்க் கட்சிகள் எப்படி ஆடப்போகின்றன என்பது அடுத்து வரும் வாரங்களில் ஓரளவுக்கு வெளிச்சத்துக்கு வரும் என எதிர்பார்க்கலாம்.

சர்வஜன வாக்கெடுப்பை எதிர்க்கும் விவகாரத்தில் தமிழ்க் கட்சிகள் ஓரளவு ஒத்துப்போகும் நிலைமை கொழும்பில் ஏற்பட—

மறுபுறத்தில் அமைச்சரவைக்குள் அரசின் யோசனைக்கு புதிதாக — தீவிர — எதிர்ப்பு அலை உருவாகியிருக்கின்றது.

கடந்த வாரம் அரசின் தீர்வுத் திட்டயோசனைகளுக்கு முழு அங்கீகாரம் வழங்குவதற்கு அமைச்சரவை விசேடமாகக் கூடிய போது இந்த எதிர்ப்பு அங்கு பெரிய அளவில் வெளிப்பட்டது.

1987 இல் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக இந்தியாவுடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்வதற்கு அப்போதைய ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா முன்வந்தார். அப்போதும் இதே போன்ற எதிர்ப்புகள் கிளம்பின.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் பிக்குகளுடன் சேர்ந்து தலைநகரில் மறியல் நடத்தினர்; அரசின் பிரதமரான ஆர். பிரேமதாஸாவும், அப்போதைய பாதுகாப்பு பிரதி அமைச்சரான லலித் அத்துலத் முதலியும் ஜே. ஆரின் முடிவுக்கு கடும் எதிர்ப்புக் காட்டினர். சுகாதார அமைச்சர் காமினி ஜெயசூரிய, ஜே. ஆரின் முடிவை எதிர்த்து இராஜினாமாச் செய்தார். ஆனாலும் அவற்றுக்கு எல்லாம் அசைந்து கொடுக்காது ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார் ஜே ஆர்.

அது போல இப்போதும் அமைச்சரவைக்குள் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு கடும் எதிர்ப்புக் கிளம்பியிருக்கின்றது. அதைப் பொருட்படுத்தாது முறியடித்து தீர்வுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவாரா சந்திரிகா? பதில் விரைவில் தெரிந்து விடும்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளர் டி.எம். ஜயரத்ன, மகிந்த ராஜபக்ஷ, பேர்ட்டி பிரேமலால் திஸநாயக்கா, மைத்திரிபால சிறிசேன, அனுருத்த ரத்வத்தை ஆகியோரே அரசின் தீர்வுத் திட்டத்துக்கு அமைச்சரவைக்குள் எதிர்ப்புக் காட்டியவர்கள்.

அமைச்சர் தொண்டமான், அஷ்ரப், பௌஸி ஆகியோர் தீர்வுத் திட்டம் விரிவுபடுத்தப்பட வேண்டும் என்ற பாணியில் கருத்து வெளியிட்டனர்.

''புலிகளுடன் பேச்சு நடத்தாமல் தீர்வு சாத்தியமல்ல; ஆகவே புலிகளுடன் பேச்சை ஆரம்பிக்க ஏற்பாடு செய்யுங்கள்'' என்றாராம் தொண்டமான்.

தீர்வுத் திட்டத்தை நாடாளுமன்றம் ஊடாக நகர்த்துவதற்காக நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளுக்கு இது விடயத்தில் அரசு நிச்சயம் அழுத்தம் கொடுக்கும் என்பது உறுதி.

அப்போது இக்கட்சிகள் என்ன செய்யப் போகின்றன?

தங்கத்தின் தரத்தை அளவிடுவதற்காக அதனைப் புடம் போடுவார்கள். அத்தகைய புடம் போடும் பரீட்சை வரும் போது தமிழ்க்கட்சிகள் என்ன செய்யப் போகின்றன? தம்மை சுத்தத் தங்கம் என்று காட்டுவார்களா? அல்லது சலுகைகளுக்கு அலையும் அற்பப் பித்தளைகள் என்று குசுப்பிப்பார்களா? பொறுத்திருந்து பார்ப்போமே!

★ ★ ★

பிரிட்டனில் கரிகாலன்

தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு — அம்பாறை மாவட்ட முன்னாள் பொறுப்பாளரும், புலிகளின் அரசியல் பிரிவின் பிரதித் தலைவருமான கரிகாலன் பிரிட்டனில் தங்கியிருந்து புலிகள் ஆதரவு நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருவதாகச் செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

புலிகளின் சர்வதேச மையத்தின் பொறுப்பாளராகக் கடமையாற்றியவர் லோறன்ஸ் திலகர்; பிரான்ஸின் தலைநகர் பாரிஸை மையமாகக் கொண்டு செயற்பட்டவர். இந்த ஆண்டின் முற்பகுதியில் வெளிநாடுகளில் இருந்து காணாமல் போன லோறன்ஸ் திலகர், பின்னர் வன்னியில் காணப்பட்டதாக செய்திகள் அடிபட்டன. விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனால் அவர் வன்னிக்கு அழைக்கப்பட்டதாக அப்போது கூறப்பட்டது. அதன் பின்னர் கரிகாலன் சகிதம் திலகர் வெளிநாட்டுக்குப் புறப்பட்டுச் சென்றதாகத் தகவல் வெளியாகின. ஆனால் எந்த வெளிநாட்டிலும் திலகரின் நடமாட்டம் இப்போது அவதானிக்கப்படவில்லை. கரிகாலன் மட்டும் லண்டனில் இருப்பதாகக் கூறப்படுகின்றது.

லண்டனில் கூட கரிகாலன் பகிரங்கமாக தோன்றுவதில்லை என்றும் —

புலிகள் ஆதரவு பிரமுகர்கள் கூட்டங்களில் — மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையுடையவர்களைக் கொண்ட கூட்டங்களில் — மட்டும் அவர் உரையாற்றுவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கரிகாலன் லண்டனில் தங்கியிருந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் இவ்வேளைகளில் தான் —

ஸ்ரீலங்காவுக்கு எதிராக ஆட்சேப போராட்டங்களை நடத்துவதற்கு அங்குள்ள ஈழத் தமிழர் அமைப்புகள் தயாராகி வருகின்றன.

பொதுநல அமைப்பு (கொமன்வெல்த்) நாடுகளின் தலைவர்களின் உச்சிமாநாடு ஒக்டோபர் 24 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரை ஸ்கொட்லண்டின் எடின்பேர்க் நகரில் நடைபெறவிருக்கின்றது. இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உட்பட பொதுநல அமைப்பைச் சேர்ந்த 53 நாடுகளின் தலைவர்கள் இந்த மாநாட்டில் பங்கு பற்றுவதற்கு பிரிட்டன் செல்லுகின்றார்கள்.

உலகின் கால் பங்கு மக்கள் தொகையைக் கொண்ட நாடுகளின் தலைவர்கள் பங்கு பற்றும் இந்த மாநாட்டில், சிறந்த ஆட்சி முறை, ஜனநாயகம், சட்டத்தின் ஆட்சி, அபிவிருத்தி, சூழலியல், கல்வி ஆகிய துறைகள் குறித்து சம்பந்தப்பட்ட தலைவர்கள் விரிவாகக் கலந்து பேசவிருக்கின்றார்கள்.

லண்டனில் உள்ள பொதுநல அமைப்பு நாடுகளின் செயலகம் இந்த மாநாட்டுக்கான ஏற்பாடுகளை ஒருபுறம் செய்ய —

ஸ்ரீலங்கா அரசுக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் வகையில் ஒக்ரோபர் 25 ஆம் திகதி எடின்பேர்க்கில் பெரும் எதிர்ப்பு இயக்கம் ஒன்றை நடத்துவதற்கான ஏற்பாடுகளை லண்டனில் அமைந்துள்ள புலிகளின் சர்வதேசச் செயலகம் மறுபுறத்தில் மேற்கொண்டு வருகின்றது.

தமிழரின் சர்வதேச சம்மேளனம், தமிழர்சங்கங்களின் சம்மேளனம் (லண்டன்), பொல்ட்டன் தமிழ்ச் சங்கம், தமிழர்களின் மருத்துவ நிறுவனம், தமிழ் சட்டத்தரணிகள் ஐக்கிய சங்கம், தமிழர் புனர்வாழ்வு நிறுவனம், தமிழ் அகதிகள் நடவடிக்கைக் குழு, தமிழர் வீடமைப்புச் சங்கம், சர்வதேச தமிழர் நிறுவனம், தமிழர் ஆதரவு நிறுவனம் போன்ற அமைப்புகள் ஒன்றிணைந்து பெரிய அளவில் எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு ஏற்பாடு செய்து வருகின்றன.

கரிகாலன்

இந்த அமைப்புகள் எல்லாம் சேர்ந்து 'பொதுநல வாயம் — 1997 இற்கான தமிழர் பேரவை' என்ற ஐக்கிய அணி ஒன்றை ஏற்படுத்தியுள்ளன.

இந்தப் பேரவையின் ஏற்பாட்டில் முதல் நடவடிக்கையாக எதிர்வரும் 25 ஆம் திகதி லண்டனில் இருந்து ஸ்கொட்லண்டுக்கு ஈழத் தமிழ் ஆதரவாளர்கள் அறுநூறு பேர் தனிப்பட்ட ரயில் சேவை ஒன்றில் புரட்சிப் பயணம் நடத்த விருக்கின்றார்கள்.

லண்டனில் உள்ள கிங் — குறொஸ் ரயில் நிலையத்திலிருந்து காலை 7 மணிக்கு புறப்படும் 'ஈழம் — ஸ்கொட்லண்ட் நட்புறவு ரயில்' அன்று நண்பகல் ஸ்கொட்லண்ட் தலைநகர் எடின்பேர்க்கில் உள்ள வேவரலி ரயில் நிலையத்தை சென்றடையும். இரண்டுக்கும் இடையில் இந்த விசேட ரயில், பொட்டஸ்பார் நிலையத்தில் மட்டும் சிறிது நேரம் தரித்து நிற்கும்.

வேவரலி ரயில் நிலையத்தில் புரட்சிப் பயணம் மேற்கொண்டவர்கள் வந்திறங்கும் போது அங்கு அவர்களை வரவேற்க மேலும் பல நூற்றுக் கணக்கான ஈழத் தமிழர்களும் ஸ்கொட்லண்ட் மக்களும் காத்து நிற்பார்கள்.

ரயில் நிலையத்தில் அவர்கள் ஒன்றிணைந்து, அங்கிருந்து எடின்பேர்க் வீதி வழியே 'ஸ்கொட்லண்ட் — தமிழ் ஈழ' நட்புறவை எதிரொலிக்கும் கோஷங்களை எழுப்பியவாறும், பதாகைகளைத் தாங்கியவாறும் பேரணியாகச் செல்வார்கள்.

ஈழத் தமிழரின் பாரம்பரியத்தை வெளிப்படுத்தும் நாதஸ்வரமும் —

ஸ்கொட்டிஷ் மக்களின் பாரம்பரியத்தை வெளிப்படுத்தும் பைக் குழல் இசைக் கருவியும் (Bagpipe) —

இசைக்க பேரணி நடைபெறும்.

பேரணியின் முடிவில் எடின்பேர்க் பிரின்ஸ் வீதியில் உள்ள வேவரலி ஷொப்பிங் நிலையத்தின் உச்சியில் உள்ள பொது மண்டபத்தில் நட்புறவு மாநாட்டுக் கூட்டம் நடைபெறும்.

கூட்டத்தின் ஆரம்பத்தில் ஸ்கொட்லண்டை பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிற்கட்சி எம்.பி.க்களினால் ஸ்கொட்லண்ட் கொடியும் புலிகளின் கொடியும் ஏற்றி வைக்கப்படும்.

கடைசியாக தமிழ் கலை நிகழ்ச்சிகள் இடம் பெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது

இந்த நடவடிக்கைகள் இரண்டு காரணங்களுக்காக மேற்கொள்ளப்படுவதாக அதன் ஏற்பாட்டாளர்கள் கூறுகின்றார்கள்.

(i) ஸ்கொட்டிஷ் மக்களது போன்ற ஒரு விடுதலைப் போராட்டத்தையே தமிழீழ மக்கள் தொடர்கின்றனர். அதிகாரப் பகிர்வை வெற்றிகரமாகப் பெற்றுக்கொள்வதனால் ஸ்கொட்டிஷ் மக்களுக்கு ஏற்படும் மகிழ்வை அவர்களுடன் சேர்ந்து தமிழீழ மக்களும் பகிர்ந்து கொள்வது —

(ii) தமிழீழத்தில் தமது சகோதரர்களுக்கு எதிராக படுகொலை—அடக்கு முறை—ஆக்கிரமிப்பு ஆட்சியை மேற்கொண்டிருக்கும் ஸ்ரீலங்கா அரசின் உண்மைச் சொரூபத்தை ஸ்கொட்டிஷ் மக்களுக்கும், அங்கு விஜயம் செய்யும் பொதுநல அமைப்பு நாடுகளின் தலைவர்களுக்கும் அம்பலப்படுத்தி எடுத்துரைப்பது —

பொதுநல அமைப்பு மாநாட்டுக்காக ஜனாதிபதி எடின்பேர்க் சென்றடையும் போது அவருக்கும் அவரது அரசுக்கும் எதிரான பிரசாரங்கள், துண்டுப்பிரசுரங்கள், ஆரவாரங்கள் உச்சமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த ஆர்ப்பாட்ட ஏற்பாடுகளுக்குத் தேவையான நிதியைச் சேகரிப்பதற்கு லண்டனில் கடந்த 14 ஆம் திகதி நிதி திரட்டும் இயக்கம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. அந்த இயக்கம் நேற்றுடன் முடிவடைவதாக இருந்தது.

★ ★

அமெரிக்காவில் கதிர்காமருக்கு கிடைத்த பதில்

தமிழீழ விடுதலைப் புலிகளை பயங்கரவாத அமைப்பாகப் பிரகடனப்படுத்தும்படி ஸ்ரீலங்கா அரசு விடுத்த கோரிக்கையை சாதகமாகப் பரிசீலிக்க அமெரிக்கா இணங்கி

(XI ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளதில் திருப்தியுற்றால் உள்ளம் உவகை அடையும்

அமைதி, மகிழ்ச்சி, ஆறுதல், சுகம் என்பவைகள் மனதிலிருந்து உண்டாகின்றன. மனதைச் செம்மையாக வைத்துக்கொண்டவன் இன்பத்தையடைவான். செல்வம், பெரிய வசதிகள், சொத்துக்கள் முதலிய எத்தனையிருந்தாலும் மனதைச் செம்மையாக வைத்துக் கொள்ளாதவன் துன்பத்தையடைவான்.

எனவே இன்பமும் துன்பமும் மனதிலிருந்து உண்டாகின்றன. இந்தக் கருத்தை விளக்கும் கதை இது.

வயல்களில் தண்ணீர் நிறைந்தது. தவளைகள் "கர கர" என்று இரைந்து கொண்டிருந்தன. நீறு பூசிய முனிவர்கள் நீருக்கு நடுவே தவஞ்செய்வது போல் கொக்குகள் ஒரு காலில் நின்று கொண்டிருந்தன. வானளாவிய சோலைகளிலிருந்து நல்ல இனிய காற்று வீசிக் கொண்டிந்தது. சாதுக்கள் உள்ளம் போல் நிலம் குளிர்ந்திருந்தது.

அந்த வயலில் ஒரு கிழவன் உழுதுகொண்டிருந்தான். அடிக்கடி எருமைக் கடாக்களைக் கோலால் அடித்து ...ம்...ம் என்று ஓட்டுவதும், சந்தோஷமாகப் பாடுவதுமாக இருந்தான்; கோவணத்தைத் தவிர இடையில் ஆடையில்லை; தலையில் கிழிந்த ஒரு கந்தலைச் சுற்றிக் கொண்டிருந்தான்; உடம்பெல்லாம் சேறு.

சிறந்த செல்வமும், வீரமும் பொருந்திய அரசன் ஒருவன் வேட்டையாடிவிட்டுப் பஞ்சகல்யாணிக் குதிரை மீது, தன் பரிவாரங்களுடன் அவ்வழியே சென்றான். மன்னன் பார்வை இந்தக் கிழவனிடம் சென்றது.

'ஆ! இந்த உழவனாகிய கிழவன் மிகவும் எளியவன் போல் காணப்படுகிறான். உடுக்க உடையில்லை; இளைத்த உடம்பு; முதுகில் ஒட்டிய வயிறு; குழிந்த கண்கள்; தொங்குகின்ற புருவம். பாவம்! வறுமையின் சிறுமையால் மெலிந்திருக்கின்றான். ஆனால் மகிழ்ச்சி நிலவுகின்றது. மலர்ந்த முகமும், புன்னகை பொலிந்த வாயும் உடையவனாகப் பாடிக்கொண்டே உழுகின்றானே! இவனை அழைத்து விசாரிப்போம்" என்று மன்னன் கருதினான்.

"ஐயா பெரியவரே இங்கே வாரும்" — என்று அழைத்தான் அரசன்.

கிழவன் பதில் கூறினான்.

"ஐயா வணக்கம். பொழுது போவதற்கு முன் இந்த வயல் முழுவதும் உழுது முடிக்க வேண்டும். இப்பொழுது தங்களிடம் வரவோ பேசவோ எனக்கு நேரம் இல்லை."

அரசன் தொடர்ந்தான்.

"ஐயா அவ்வளவு அவசரமோ? இன்று சிறிது எஞ்சியிருந்தால் நாளை உழுது கொள்ளலாமே? உங்களுக்கு எத்தனை ஏக்கர் நிலம் உள்ளது?" — மன்னரின் வினா இது.

கிழவன் சர்வசாதாரணமாகப் பதிலளித்தான்.

"சுவாமி! நான் ஏழைக் குடியானவன் எனக்குச் சொந்தமாக ஓர் உள்ளங்கையளவு நிலங்கிடையாது. இது என் எஜமானனுடைய நிலம். இதை முழுவதும் உழுதுமுடித்தான் தான் அவர் கூலி தருவார். நான் கூலிக்கு உழுகின்றேன். உம்முடன் பேசிக் கொண்டிருந்தால், எஜமானனுக்குத் துரோகம் செய்தவனாவேன்."

— இவ்வாறு கிழவன் பதிலளித்ததும் அரசனுக்கு தர்ம சாங்கடமாகிவிட்டது. கிழவனின் கடமையுணர்வை அரசன் புரிந்து கொண்டான். கிழவனின் வேலையைத் தொடர்ந்து குழப்ப அரசன் விரும்பவில்லை. அதேசமயம் கிழவனிடம் மேலும் சிலவற்றைக் கேட்டுத் தெரிந்து கொள்ள அரசன் விரும்பினான். அதனால் பஞ்சகல்யாணிக் குதிரையை விட்டு இறங்கி உழுது கொண்டிருக்கும் கிழவனுக்குப் பின்னாலேயே வரம்பில் இறங்கி நடந்தபடியே கேள்விகளைத் தொடர்ந்தான் மன்னன். உழுதபடியே பதிலளித்தான் கிழவன்.

"ஐயா! ஒரு நாள் முழுவதும் உழுதால் உமக்கு எவ்வளவு கூலி?"

"சுவாமி! எட்டணா தருகின்றார் எஜமானார்."

அரசர் ஆச்சரியத்தில் வாயடைத்துப் போனார்.

"ஆ! என்ன எட்டணாவா? இவ்வளவு குறைந்த கூலியா? இதைக்கொண்டு நீர் எப்படிக் காலந்தள்ளுகின்றீர்? குடும்பம் எப்படி நடைபெறுகின்றது? மிகவும் கவலையுடன் தான் வாழவேண்டியிருக்கும்." கிழவன் பூரணதிருப்தியுடையவனாகப் பதிலளித்தான்.

"சுவாமி! தாங்கள் நினைப்பது தவறு. எட்டணா போதுமானதுதான். ஒன்றுமே கிடைக்காமலே பலர் வாடுகின்றனர். கடவுள் எனக்கு இவ்வளவு படியளந்து வருகின்றாரே? இது போதும். கவலை என்பதே எனக்குத் தெரியாது. கடவுள் கொடுத்த கைகள் இருக்கின்றன. எப்போதும் எனக்குக் கூலி கிடைக்கின்றது. ஒரு குறைவும் இல்லை. கவலைப்பட வேண்டிய அவசியமே இல்லை."

அரசன் சிந்தித்தான். 'என்ன ஆச்சரியம்! எட்டணா வாங்கும் இவன், கவலையே தெரியாது என்கின்றான். மணிக்கு ஆயிரக் கணக்கான பணம் எனக்கு வருகின்றது. எண்ணில்லாத செல்வம்; ஏராளமான நிலபுலன்கள்; வசிப்பது அரண்மனை; பக்கத்தில் ஐம்பது பேர் கைகட்டி நின்று ஏவல் புரிகின்றனர். குடிப்பது பால்; படுப்பது பஞ்சணை. அப்படியிருந்தும் என் மனதில் நிம்மதியும், ஆறுதலும், மகிழ்ச்சியும் இல்லை. சதா கவலைதானே; அச்சமும் அல்லலும் நிரம்பிய என் வாழ்க்கை அமைதியும், இன்பமும் நிறைந்த இவன் வாழ்க்கைக்கு இணையாகாது' — என்று கருதினான் அரசன்.



ஆகவே கிழவனிடம் மேலும் தெரிந்து கொள்ள விரும்பி வினாக்களைத் தொடர்ந்தான்.

"ஐயா பெரியவரே! உம்மைத் தெரந்தரவு செய்வதாக எண்ணாதீர்; தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவலால் வினவுகின்றேன். எங்களுக்கு ஏராளமான வருவாய் வந்தும் வாழ்வில் நிம்மதியும் இல்லை; நிரம்பச் செலவும் ஆகின்றது. உமக்கு எட்டணாவில் குடும்பம் எவ்வாறு கவலையின்றி நடைபெறுகின்றது?"

கிழவன் பதிலளித்தான்.

"ஐயனே! எனக்குக் கிடைக்கும் எட்டணாவில் இரண்டணாவை குடும்பத்திற்குச் செலவழிக்கின்றேன். இரண்டணா பழைய கடனுக்குச் செலுத்துகின்றேன். இரண்டணா தருமஞ்செய்கிறேன். இரண்டணாவை வட்டிக்குக் கொடுக்கிறேன் ஒரு குறையும் இல்லை கவலையும் இல்லை" — என்றான்.

கிழவனின் பதில் அரசனுக்கு விளங்க வில்லை.

"ஐயா! நீர் சொல்லுவது மிகவும் ஆச்சரியமாக இருக்கின்றது. என்ன? எட்டணாவில் இரண்டணா வட்டிக்கு வேறு கொடுகின்றீரா? இரண்டணாதருமஞ்செய்கின்றீரா? மேலும் மேலும் வியப்பைத் தருகின்றது. உமது செயல் விசித்திரமாக இருக்கின்றது. நீர்கூறுவது எனக்கு விளங்க வில்லை. எப்படியப்பா இதில் மிச்சம் பிடித்து தருமத்திற்கும், வட்டிக்கும் கொடுக்கின்றீர்?" — அரசனின் ஆச்சரியம் இது.

கிழவன் அமைதியாகப் பதிலளித்தான்.

"சுவாமி நீங்கள் விளங்காமல் இக்கேள்வியை எழுப்புவதுதான் எனக்கு ஆச்சரியமாக இருக்கின்றது. கிடைத்ததைக் கொண்டு திருப்தியடையாதவனுக்கு ஆறுதல் எப்படிக் கிடைக்கும்?

"எனக்கும் எனது மனைவிக்கும் இரண்டணா செலவழிகின்றது. இது குடும்பச் செலவு. எனக்கு மிக மிக வயது தளர்ந்த தாயும் தந்தையும் இருக்கின்றார்கள். அவர்கள் என்னை இளமையில் உண்டியும் உடையும் கொடுத்துக் காப்பாற்றினார்கள். அந்தக் கடனுக்கு அவர்கள் பொருட்டு இரண்டணா செலவழிகின்றது. அது பழைய கடன்.

"எனது தங்கை விதவையாகி தன் மகனுடன் வேறு ஓர் ஆதரவும் இன்றி என் வீட்டில் வாழ்கின்றாள். அவளுக்கும் அவள் மகனுக்கும் இரண்டணா செலவழிகின்றது. அது தருமம்.

"எனக்கும் இரண்டு சிறு புதல்வர்கள் இருக்கின்றார்கள். அவர்களின் பொருட்டு இரண்டணா செலவழிகின்றது. அது வட்டிக்குக் கொடுப்பது போன்றது. பிற்காலத்தில் அவர்கள் என்னைக் காப்பாற்றுவார்கள். இந்த அளவில் எனக்குத் திருப்தி உண்டாகின்றது" — என்று விளக்கினான் கிழவன்.

அரசன் இந்தப் பொருளடங்கிய பொன்மொழிகளைக் கேட்டு விம்மிதமுற்றான்.

அந்த கிழவனின் நற்பண்பையும், மனோசாந்தியையும், போதும் என்ற திருப்தியையும் நினைந்து மகிழ்ந்தான்.

அந்த உழவன் உழுத நிலத்தை அவனின் எஜமானனிடம் பணம் கொடுத்து வாங்கி கிழவனுக்குப் பரிசாக அளித்து மகிழ்விக்க எண்ணினான் அரசன். ஆனால் போதும் என்ற மனநிறைவுடன் வாழும் அந்தக் கிழவனுக்கு சொத்து வாங்கிக் கொடுத்து அவன் மகிழ்ச்சியைக் குலைக்க அரசன் விரும்பவில்லை. அதனால் கிழவனை வாழ்த்தி விட்டு தனது பஞ்சகல்யாணிக் குதிரையில் ஏறி, பரிவாரங்களுடன் புறப்பட்டான் அரசன்.

★

(திருமுருக கிருபானந்தவாரியார் உரையிலிருந்து.)

பயன்தரும் பப்பாசி

"பப்பாளி". பப்பாசி என்றும் இதனை அழைப்பர்.

விசேடமாக நாமே தேடி இதனை நமது வீடுகளில் நட்டு வளர்ப்பதை விட, தானாகவே எமது வீடுகளில் விதை விழுந்த இடத்தில் முளைத்துப் பயன்தருவது தான் பப்பாசியின் சிறப்பு.

"பப்பாசிப் பழமா? அது சூடு. குழந்தைக்கு வயிற்றுப் போக்கு வரும். ஆகவே பிள்ளைகளுக்குக் கொடுக்காதே." — என்று கூறுவோரும் உளர். ஆனால் அது தவறு.

பப்பாசியின் இலை, காய், பழம் என்று அனைத்தும் மருந்தாகப் பயன்படுகின்றன.

அதிகம் முற்றாத பப்பாசி இலையை எடுத்து, அதன் தடித்த நரம்பை நீக்கிவிட்டு, இலையை மட்டும் சிறியவையாக வெட்டிக் கொள்ள வேண்டும். அதனை வேப்பெண்ணெயுடன் சேர்த்து வதக்கி, வீக்கம் உள்ள இடங்களில் கட்டினால் வீக்கம் குறையும்.

உடலில் ஏற்படும் எந்தக் கட்டி, வீக்கம் என்றாலும் பப்பாசி இலையை மைபோல அரைத்து பற்றுப் போட்டுக் கட்டினால் அவை உடைந்து சீழும், ரத்தமும் வெளியேறி விடும். தொடர்ந்து பற்றுப் போட்டுக் கொண்டு வந்தால் கட்டிகளில் உள்ள அத்தனை சீழும் வெளி வந்து கட்டிகள் காய்ந்து விடும்.

கட்டிகள் ஆரம்ப நிலையில் இருந்தால் — பப்பாசி இலைப் பற்று கட்டியதும்— உடையாமலேயே வாடி மறைந்து விடும்.

ஊனுளச் சதை உடையவர்கள் கூட பப்பாசிக் காயைந் தினமும் உண்டு வந்தால் உடல் மெலியும்.

நாம் அன்றாடம் பயன்படுத்தும் புளியை விட பப்பாசிப்பழம் மிகவும் உஷ்ணம் குறைந்தது. மாம்பழத்தை விடப் பப்பாசிப்பழம் நான்கு மடங்கு உஷ்ணம் தாழ்வானது. பப்பாசிக் காயைத் தேவையான அளவு எடுத்து, அதன் தோலைச் சீவிவிட்டு, இரண்டாக நறுக்கி உள்ளே உள்ள விதைச் சடைகளை நீக்கிவிட்டு, அதன் [illegible] பகுதியைத் தேவையான அளவு சிறு துண்டுகளாக நறுக்கிக் கொள்ள வேண்டும். பின்பு அதைப் பாத்திரத்தில் போட்டு நன்றாகக் கழுவி, எடுத்து அத்துடன் பச்சைப் பயறு, அல்லது கடலைப் பருப்புப் போட்டு கூட்டு வைக்கலாம். இதைத் தனியே பொரியல் செய்தும் சாப்பிடலாம். இறைச்சியுடனும், இறால், மீனுடனும் கூடப் போட்டுச் சமைக்கலாம்; சாம்பார் அல்லது பருப்புக் குழம்பிலும் போடலாம்.

குழந்தைக்குத் தேவையான அளவு தாய்ப்பால் சுரக்காத தாய்மார்கள் வாரம் இருமுறை பப்பாசிக் காயைச் சமைத்துச் சாப்பிடுவார்களேயானால், அவர்களிடம் குழந்தைகளுக்குத் தேவையான பால் தாராளமாகச் சுரக்க ஆரம்பித்து விடும்.

சில சமயங்களில் இறைச்சி [illegible] வேண்டாம் வேகாது. அவியாது. ரப்பர் போன்ற நிலையிலேயே இருக்கும். இதைச் சாப்பிடுவதும் கஷ்டம். இதற்கு பப்பாசிக்காய் உதவுகிறது. இறைச்சியின் அளவில் எட்டில் ஒரு பங்கு பப்பாசிக்காயை வேகாத இறைச்சியுடன் சேர்த்து ஒரு ஆவி வேகவிட்டால் போதும். இறைச்சி பஞ்சு போல மிருதுவாகி, சாப்பிட ருசியானதாக மாறிவிடும்.

மூன்று மாத கருவுடன் கூடிய கர்ப்பவதிகள் மட்டும் பப்பாசிக்காயைச் சாப்பிடக் கூடாது. இந்த இளங்கருவை, பப்பாசிக் காயிலுள்ள ஒரு விதமான இரசாயனப் பொருள், எந்தவிதமான கஷ்டத்தையும் கொடுக்காமல் கலபமாகக் கலைத்து வெளியேற்றி விடும். ஆகையால் எந்த ஒரு கர்ப்பவதியும் பப்பாசிக்காயைச் சாப்பிடக் கூடாது.

வேறு எந்த வகையான பழங்களிலும் இல்லாத உயிர்ச்சத்து இந்த பப்பாசிப்பழம் ஒன்றில்தான் உள்ளது. பல வீனமான உடலை பலப்படுத்தி அந்த மனிதனை பலமிக்க மனிதனாக மாற்றக் கூடிய சக்தி இக்கனி ஒன்றுக்குத்தான் உண்டு.

ஒருவன் பகல் உணவிற்குப் பின் நன்றாகப் பழுத்த பப்பாசிப் பழத்தில் இரண்டு துண்டு வீதமும், இரவு படுக்கப் போகும் பொழுது சுத்தமான பசுவின் பால் ஒரு டம்ளர் வீதமும் தொடர்ந்து இருபத்தொரு நாள்கள் சாப்பிட்டு வந்தால் அவன் உடல் உறுதியான சதைப் பற்றுப் பெற்று பலசாலியாக மாறி விடுவான்.

ஒரு நாளைக்கு 5 அப்பில் வீதம் ஆறு மாதம் தொடர்ந்து சாப்பிட்டாலும் கிட்டாத பலன் இந்த 21 நாள்களில் கிடைக்கும். விலையுயர்ந்த டொனிக்குகளை ஆறு மாதம் தொடர்ந்து சாப்பிட்டாலும் கிட்டாத பலன் இந்த இருபத்தொரு நாள்களில் கிடைத்துவிடும்.

பப்பாசி பல வியாதிகளையும் குணப்படுத்துகிறது. இது மனித உள்ளுறுப்புக்களான கல்லீரல், மண்ணீரல் ஆகிய

(IX ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்டர்நெட் மூலமும் இனி திருமணங்கள்

திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன என்பதெல்லாம் மிகவும் பழைய கதை. இப்பொழுதெல்லாம் திருமணங்கள் இன்டர்நெட்டிலும் நிச்சயிக்கப்படுகின்றது.

உங்கள் வீட்டிலிருக்கும் 'பேர்சனல் கம்பியூட்டர்' வழியாக சர்வதேச அளவில் இயங்கும் தகவல் தொடர்பு அமைப்பான இன்டர்நெட் மூலம் பல தரப்புடனும் தொடர்பு கொள்ள வசதியான ஒழுங்குமுறை விரைவில் யாழ்ப்பாணத்துக்கு அறிமுகமாகிவிடும் என எதிர்பார்க்கப் படுகின்றது.

வெளியூர் தொலைபேசிச் சேவை சீரானதும் உங்கள் தொலைபேசி மூலம், உங்கள் வீட்டிலிருக்கும் 'பேர்சனல் கம்பியூட்டரை' இன்டர்நெட் அமைப்பின் சந்தாதாராக இணைத்து விட்டால் போதும். உலகின் எந்த மூலை முடுக்குடனும் சில செக்கன்களில் நீங்கள் தகவல் பரிமாறிக்கொள்ளலாம்; தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

வெளிநாடுகளில் உள்ள பல திருமண பொருத்த அமைப்புகள் இப்போது 'இன்டர்நெட்' மூலம் செயல்படத் தொடங்கியுள்ளன.

இன்டர்நெட்டில் 'மேரேஜ் மேட்சிங்' பகுதியில் நுழைந்தால் உங்களை வரவேற்க விதம் விதமாக பெண்கள் தயாராக உள்ளனர். பெயர், வயது, படிப்பு, வேலை, மற்ற விவரங்களை தாங்களாகவே கூறி அறிமுகப்படுத்திக் கொள்கிறார்கள். கிடைத்த தகவல்கள் உங்களுக்கு திருப்தியளித்தால் மேற்கொண்டு தொடர்பு கொள்ள முகவரியும் உள்ளது.

ரஷ்யா, அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளில் இதுபோன்ற 'இன்டர்நெட் பெண் பார்த்தல்' பழக்கம் பெருகி வருகிறது.

'ஒல்கா' மேரேஜ் பீரோ' வியூ மாட்ரிமோனி' மற்றும் 'ஆன்ட்டி- ஜிஸ் மேட்ச் மேக்கிங் சேர்வீஸ்' போன்றவை பிரபலமான சில திருமணப் பொருத்த நிலையங்கள்.

இன்னும் கொஞ்ச நாளில் கம்பியூட்டர் மூலமாகவே கல்யாணம் செய்து கொள்ளும் முறை வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

புகைப்படங்களிலிருந்து தப்ப புதிய ரக கருவி!

'பப்பராஸி' புகைப்படக்காரர்களுக்கு போக்குக் காட்டி விட்டு ஓடிக்கொண்டிருந்த சமயம் விபத்துக்குள்ளான இளவரசி டயானாவும் அவரது நண்பர் அல்பயிட்டும் உயிரிழந்ததை அடுத்து பத்திரிகைப் புகைப்படக்காரர்களுக்கு எதிராக மக்கள் ஆவேசம் கிளர்ந்தெழுந்திருக்கின்றது. ஆத்திரமுற்ற பொதுமக்கள் ஆங்காங்கே பல இடங்களில் அப்பாவிப் பத்திரிகைப் புகைப்படக்காரர்களை நையப் புடைத்திருக்கின்றார்கள்.

பிரபலங்களின் தனிப்பட்ட வாழ்வைத் திருட்டுத்தனமாகப் படம் எடுப்பதைத் தடுப்பதற்கும் ஒரு கருவி புதிதாகக் கண்டுபிடித்திருக்கின்றார்களாம்.

'ஈகிள்ஸ்—ஐ' என்ற இக்கருவி ஒரு வகை லேசர் உபகரணமாகும். இந்தக் கருவியில் உள்ள ஒரு பட்டனை அழுத்தியதும் சம்பந்தப்பட்ட நபரைச் சூழ லேசர் கதிர்கள் பரவி, புகைப்படம் எடுத்தால் படம் தெளிவாக விழாத மாதிரி அது செய்து விடும். இதன் விலை நானூறு டொலர் வரை இருக்கும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பூமியை நோக்கி வீழும் அமெ. செயற்கைக்கோள்

அமெரிக்கா ஏவிய 'லூவிஸ்' என்ற செயற்கைக் கோள் கட்டுப்பாட்டை இழந்து பூமியை நோக்கி வந்து கொண்டிருக்கிறது. இன்னும் சில நாள்களில் அது புவி மண்டலத்துக்குள் நுழையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அந்த செயற்கைக் கோள் பல சுற்றுகளுக்குப் பின்பே புவி மண்டலத்துக்குள் நுழையும். எனவே அது எந்த இடத்தில் எப்போது விழும் என்பதை முன்கூட்டியே கணிக்க முடியாது இருக்கின்றது.

மணிக்கு 27 ஆயிரம் கிலோ மீற்றர் வேகததில் பூமியைச் சுற்றிக்கொண்டிருக்கும் 'லூவிஸ்' ஒரு சுற்றை முடிக்க 88 நிமிடங்களே எடுத்துக் கொள்கிறது.

காற்று மண்டலத்துக்குள் நுழைந்தவுடன் அச் செயற்கைக் கோள் எரிந்துவிடும். தரையிலோ அல்லது கடலிலோ முழுதாக அது வந்து விழுவதற்கு வாய்ப்புகள் இல்லை என்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

'லூவிஸ்' செயற்கைக் கோள் ஒகஸ்டு 22 ஆம் திகதி ஏவப்பட்டது. ஆனால் 26 ஆம் திகதியன்றே அது கட்டுப்பாட்டை இழந்து விட்டது.

மாற்று இதயத்துடனேயே மலையேறிய பெண்மணி!

மாற்று இதயம் பொருத்தப்பட்ட ஒரு பெண் மலையேறி சாதனை புரிந்திருக்கின்றார்.

இச்சாதனைக்குச் சொந்தக்காரர் பேர்கின்ஸ் வயது 36. இரண்டு ஆண்டுகளுக்கு முன்புதான் பழுதுபட்ட இவரது இதயத்துக்குப் பதிலாக மாற்று இதயம் ஒன்று அறுவை சிகிச்சை மூலம் பொருத்தப்பட்டது.

இதய மாற்றின் பின்னர் ஏதேனும் சாதனை புரிய வேண்டும் என்ற ஆவேசக் கனல் அவர் மனதில் கிளர்ந்தது. சாம்பல் மேட்டிலிருந்து எழும் பீனிக்ஸ் பறவையானார் பேர்கின்ஸ். மெல்ல ஓடினார்; கவனமாகத் தாவினார்; மலையேறப் பயின்றார்.

இரண்டு ஆண்டுகாலப் பயிற்சியின் விளைவு, அமெரிக்காவில் உள்ள — 4 ஆயிரத்து 418 மீற்றர் உயரமுடைய —மவுண்ட் விட்னியின் உச்சியை முகர வைத்திருக்கின்றது.

எவரெஸ்ட்டிற்கும் மவுண்ட் விட்னிக்கும் இடையே உயரமுடைய ஒரு மலையை அடுத்து ஏறுவதற்குத் தேடிக் கொண்டிருக்கின்றார் பேர்கின்ஸ்.

மாயமாக மறையும் துப்பாக்கிகள்

பஞ்சாப்பில் அந்த மாநில தீவிரவாதிகளுக்கு எதிராகக் கடந்த காலங்களில் இந்தியப்படைகள், பொலீஸார் எடுத்த நடவடிக்கைகளின் போது கைப்பற்றப்பட்ட சுமார் 10 ஆயிரம் துப்பாக்கிகள், றொக்கட் லோஞ்சர்கள் போன்றவற்றில் பெரும் எண்ணிக்கையானவை மாயமாக மறைந்து விட்டதாக அதிர்ச்சித் தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

பல்வேறு மாவட்டங்களிலும் உள்ள பொலீஸ் தலைமையகங்களில் வைக்கப்பட்டிருந்த இந்த ஆயுதங்கள் குறித்து சரியான பதிவுகள், தகவல்கள் இல்லை என்றும் —

பொலீஸ் தரப்பில் ஊடுருவியுள்ள ஊழல் சக்திகள் மூலம் அவை மீண்டும் தீவிரவாதிகளின் கைகளில் சிக்கியிருக்கலாம் எனவும் —

தற்போது சந்தேகிக்கப் படுகிறது.

சாமியார் கைது

கன்யாகுமரியில் இருந்து ஐம்பது கிலோ மீற்றர் தொலைவில் உள்ள மார்த்தாண்டத்தில் கடந்த ஐந்து வருட காலமாக 'தெய்வீக சுகமளிக்கும்' (?) கூட்டங்களையும ஆசிரமத்தையும் நடத்தி வந்த பாதிரியார் ஜோன் ஜோசப் (வயது52) என்பவர் கடந்த மாதம் கைது செய்யப்பட்டிருக்கின்றார்.

கற்பழிப்பு, கடத்தல், கொலை, பக்தர்களை வக்கிர செக்ஸ் நடவடிக்கைகளுக்கு ஆளாக்கியது போன்ற பல குற்றச்சாட்டுகள் இவர் மீது சுமத்தப்பட்டுள்ளன.

தமது 'கரிஸ்மாட்டிக்' நிலையத்தில் வாரத்துக்கு மூன்று நாள்கள் இவர் கூட்டும் 'வசீகர' பிரார்த்தனைக்கு சாதாரணமாக ஐயாயிரம் பேர் வரை வந்து கூடியதாகக் கூறப்பட்டது.

ஆனால் இவர் கைதாகி, பல கதைகள் — வதந்திகள் அடிபடத் தொடங்கியதை அடுத்து, உள்ளூர் மக்களே திரண்டு இவரது நிலையத்துக்கு தீ வைக்க முயன்றனர்.

சாமியாருடன் அவரது ஆசிரமத்தில் தங்கியிருந்த இரண்டு பெண்கள் உட்பட நால்வர் கைதாகி உள்ளனர்.

அரவிந்தர் ஆச்சிரம விவகாரம்

பாண்டிச்சேரியில் உள்ள ஸ்ரீ அரவிந்தர் ஆச்சிரமம் உலகப் புகழ் பெற்றது. ஆத்ம ஞானப் புகழ் பெற்ற அந்த நிலையத்துக்கு இப்போது கிரிமினல்களின் கூட்டம் என்ற பெயர் வந்து விடுமோ என்ற அச்சம் ஏற்பட்டிருக்கின்றது.

இந்த ஆச்சிரமத்துக்கு இந்தியா முழுவதிலும் இருக்கும் சொத்துகளின் மதிப்பு ஐந்நூறு கோடி (இந்தியா) ரூபாவுக்கு மேல்.

அந்தச் சொத்துக்களை நிர்வகிப்பதில் டிரஸ்ட் உறுப்பினர்கள் பெரும் மோசடி செய்வதாகவும் —

பாலியல் பலாத்காரம், ஓரினச் சேர்க்கை உட்பட பல விவகாரங்கள் (?) ஆச்சிரமத்துக்குள் நடப்பதாகவும் —

தமிழகசஞ்சிகைகள் பரபரப்புச் செய்தி வெளியிட்டிருக்கின்றன.

ஆச்சிரமத்தில் ஆயிரத்து நானூறு உறுப்பினர்கள் உள்ளனர். அன்னாரின் ஆச்சிரம வரவு — செலவுக் கணக்குகள் ஒரு சிலரைத் தவிர மற்றவர்கள் ஒருவருக்கும் தெரியாது. அவ்வளவு இரகசியம்.

துப்பாக்கிகளை பறிக்கும் ஆஸி அரசு

ஆஸ்திரேலியாவில் —

பொது மக்களிடமிருக்கும் துப்பாக்கிகளை அரசு திரும்பப் பெறுவது தொடர்பான சட்டம் முழு அளவில் நடைமுறைக்கு வருவதற்கு இன்னும் சில தினங்களே உள்ளன.

அதற்கு முன்னர் பொதுமக்கள் தங்களிடமிருக்கும் அனைத்து ரகத் துப்பாக்கிகளையும் அரசிடம் கையளித்து அதற்கான விலையைப் பெற்றுக் கொள்ள முடியும். பொதுமக்களிடம் உள்ள துப்பாக்கிகளை பணம் கொடுத்து வாங்கி அழித்து வருகின்றது அந்நாட்டரசு.

ஆஸ்திரேலியாவில் வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்ததை அடுத்து பொது மக்களிடம் துப்பாக்கிகளை விட்டு வைப்பதில்லை என்று அந்த நாட்டு அரசு முடிவு செய்தது.

இந்தத் திட்டப்படி பொதுமக்கள் 15 மாதங்களுக்குள் தமது துப்பாக்கிகளை ஒப்படைத்துவிட வேண்டும். அந்தப் 15 மாதகால அவகாசமே இன்னும் சில தினங்களில் முடியவிருக்கின்றது.

அரசு இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்த போது அதற்கு எதிராக மெல்போர்னில் எழுபாதயிரம் பொதுமக்கள் கூடி ஆர்ப்பாட்டம் செய்தார்களாம்.

என்றாலும் இதுவரை ஐந்து லட்சத்துக்கு மேற்பட்ட துப்பாக்கிகள் ஒப்படைக்கப்பட்டு விட்டன. இதற்காக அந்நாட்டரசு ஐம்பது கோடி டொலர்களைச் செலவிட்டுள்ளது.

உலக நாடுகளில் டாக்டர்கள் தொகை

அண்மையில் ''ஏசியா வீக்'' என்ற சஞ்சிகை 46 நாடுகளில் உள்ள நோயாளர்கள் பற்றியும் அங்கு இருக்கின்ற டாக்டர்கள் எண்ணிக்கை பற்றியும் ஓர் ஆய்வை நடத்தியது.

முதல்நிலையில் காணப்பட்ட இத்தாலியில் 195 நோயாளர்களுக்கு ஒரு டாக்டரும் 46 ஆவது நிலையில் (கடைசியாக) இருந்த நேபாளத்தில் 12 ஆயிரத்து 612 நோயாளிகளுக்கு ஒரு டாக்டரும், 30 ஆம் நிலையிலிருந்த இந்தியாவில் 2 ஆயிரத்து 165 நோயாளர்களுக்கு ஒரு டாக்டரும் உள்ளனராம்.

உடும்புப் பிடி இதுதான்!

மிகப் பண்டைக் காலத்தில் கோட்டைச் சுவர்களில் ஏறுவதற்காக உடும்புகளைப் பயன்படுத்தி வந்தனர். உடும்பு ஓரிடத்தில் பிடித்துக் கொண்டால் இலேசில் விடாது. 'உடும்பும்பிடி' என்று இதைச் சொல்வர்.

அண்மையில் நியூயோர்க்கில் தனது நண்பியின் வீட்டுக்கு ஒரு பெண் சென்றிருந்தாள். அங்கு கூண்டு ஒன்றினுள் உடும்பு அடைத்து வைக்கப்பட்டு இருந்தது. அந்தப் பெண் கூண்டைத் திறந்து பார்க்க நினைத்து அதனைத் திறக்க முற்பட்டபோது கூண்டினுள் இருந்து உடும்பு 'சட்' என்று பாய்ந்து அப்பெண்ணின் மார்புப் பகுதியில் 'கப்' என்று பிடித்துக் கொண்டது. அப்பெண் உடும்பை உடம்பிலிருந்து பிரித்தெடுக்க எவ்வளவோ போராடினாள். முயற்சி பலனளிக்காமற் போகவே மருத்துவர் உதவியை நாடினாள். மருத்துவர்களாலும் அந்த உடும்பை ஒன்றும் செய்திடமுடியவில்லை. கடைசியில் உடும்பை மயங்கச் செய்தே அதனைப் பிரித்தெடுத்தனர்.

அதிசய சிறுமி இவள்!

விக்டோஸ் ஆறு வயதுச் சிறுமி. தென்னாபிரிக்காவைச் சேர்ந்தவள்.

இவள் முஸ்லிம்களின் புனித நூலாகிய திருக்குர்ஆனை அப்படியே மனனம் செய்து ஒப்புவித்துக் காண்பிக்கின்றாளாம். இன்னும் பள்ளியே செல்லாத இவள் இவ்வாறு செய்வதைக் கண்டு பலரும் அதிசயிக்கின்றனர்.

இதுபற்றி இவளது தாயார் கூறும்போது ''எனது மகள் சிறுவயது முதலே வியக்கத்தக்க முறையில் ஏதாவது செய்து ஆச்சரியத்தில் ஆழ்த்தி விடுகின்றாள். அவளுக்கு ஒரு வயதாக இருக்கும்போதே அரேபிய எழுத்துக்களை எழுதத் தொடங்கிவிட்டாள்'' —என்கின்றார்.

கையைத் தட்டுங்கள்!

''தட்டுங்கள் திறக்கப்படும்; கேளுங்கள் கொடுக்கப்படும்'' என்று இயேசுநாதர் கூறியிருந்தார். ஆனால் இந்தியாவிலுள்ள பிற்படுத்தப்பட்ட மாநிலம் ஒன்றில் முதியவர் ஒருவர் இதற்கு வேறு அர்த்தம் கற்பித்துள்ளார்.

பஜாஜ் என்பது அந்த முதியவரின் பெயர். அவருக்கு ஆரம்பத்தில் கண்பார்வை சரியாகத்தான் இருந்தது. ஆனால், காலப்போக்கில் அவருக்கு கண்பார்வை சிறிது சிறிதாக மங்கத்தொடங்கியது. 'கற்றாக்ட்' அறுவைச் சிகிச்சை செய்யும்படி நண்பர்கள் கூறினர்.

ஆனால் பஜாஜ் சாது ஒருவரிடம் சென்றார். ''கையைத்தட்டு காரியம் சித்திக்கும்'' என்று கூறி சாது அவரை அனுப்பிவைத்தார்.

காலை 5 மணிக்கே எழுந்து கையைத் தட்ட ஆரம்பித்துவிடுவாராம் பஜாஜ். அக்கம் பக்கத்திலுள்ள வீட்டுக்காரர்களுக்கு இதனால் பெரிய தொல்லை. அரைக் கிலோ மீற்றர் வரை அந்த கைத்தட்டல் சத்தம் கேட்குமாம்.

விஞ்ஞானம் வளர்ந்துவிட்ட இந்தக் காலத்தில் இப்படியும் ஒரு மனிதரா என்று நினைக்கத் தோன்றுகின்றது. ஆனால் அவர் கூறுவது வேடிக்கையானது.

''இதுவரை 75 லட்சம் தடவைகளுக்கு மேல் கை தட்டிவிட்டேன். இதனால் எனக்கு கண்பார்வை குணமாகி வருகின்றது. கைதட்டுவதால் இரத்த ஓட்டம் சரியாகி நான் இளமையாய் இருப்பதாக உணர்கின்றேன். எனது பெயரும் கின்னஸ் புத்தகத்தில் வரும்.'' — என்று கூறுகின்றார் பஜாஜ்.

பஞ்சாமிர்தம் பலாச அமர்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீஞ்சீவி சிறுகதை

தீவு

கூண்ணுக்கெட்டிய தூரம் வரை பரந்து விரிந்து கிடந்த அந்த வயலைச் செல்லத் துரையரின் கண்கள் ஏக்கத்துடன் பார்த்தன. வயல் காய்ந்து கருவாடாகிக் காட்சியளித்தது. உச்சிவெயிலில் புழுதிநிலம் பளபளத்துக் கண்களைக் கூசவைத்தது.

மெல்ல அருகிலிருந்த குளக்கட்டில் ஏறினார். குளத்தில் மருந்துக்குக் கூட நீரில்லை. குளக்கட்டோடு அணைந்திருந்த குண்டுகளில் மட்டும் கொஞ்சம் நீரிருந்தது.

''இந்தமுறை மழை பெய்யாதோ? பேசாமல் வயலை வித்துப்போட்டு நல்ல தோட்டக் காணியா வாங்குவம் எண்டாலும் மனம் வருகுதில்லை. என்ரை அப்பா விண்ரை காலத்து வயல் சோக்கான பள்ளக்காணி.''

யோசித்தவாறு திரும்பிப் பார்த்தார்.

சிலர் புழுதி விதைப்பில் மும்முரமாக ஈடுபட்டிருந்தனர். மழையில்லா வேளையிலே விவசாயிகளுக்கு ஓரளவுக்கேனும் கை கொடுக்கும் முறை அது.

மெல்ல நடந்து கந்தையாவின் காணிப்பக்கம் வந்தார். கந்தையர் இவரது காணிக்கு அடுத்த காணிக்காரர். நல்ல பிரயாசிக்காரர். மூன்று பரப்புக்காணியில் என்னென்ன நட்டுப் பயன் எடுக்கலாமோ அத்தனையும் செய்வார்.

செல்லத்துரையரைக் கண்டதும் கந்தையர் மண்வெட்டியை வைத்து விட்டு வரம்பில் ஏறினார்.

''என்ன துரையண்ணை விதைக்கேல்லையோ?'' என்றவாறு தலையிலை கட்டியிருந்த துவாயை அவிழ்த்து முகத்தை அழுந்தத் துடைத்துக் கொண்டார்.

''என்னடாப்பா செய்யிறது? போனமுறை பட்ட பாடு காணாதே? வந்த வெள்ளம் எல்லாத்தையும் அள்ளிக்கொண்டு போச்சுது. இந்த முறை என்னடா வெண்டால் மழையை இன்னும் காணேல்லை...''

''எல்லாம் பெய்யும்''

கந்தையர் வாயிலை சுருட்டை வைத்துக் கொண்டார்.

''அவன் சின்னையாவைப் பார் கந்தையா. ஆள் விண்ணன்தான். இந்த வரியம் வயலுக்கை குழாய் அடிச்சிருக்கிறான். போன முறை வெள்ளம் அடிச்சும் கவலையில்லாமல் திரியிறான்.''

செல்லத்துரையரின் குரலில் இலேசான ஆதங்கம் தெரிந்தது.

''அவனுக்கென்ன? ரெண்டு பெடியன்கள் கவிசிலை; உவன் சும்மா பொழுது போக்குக்கெல்லோ தோட்டம் செய்யிறான். எங்களை மாதிரி இதை நம்பி இருக்க வேணும் எண்டில்லை ..''

இருமியபடி கந்தையர் சொன்னதை செல்லத்துரையர் தலையை ஆட்டி ஆமோதித்தார்.

''என்ரை வீட்டிலை மூண்டு குமர் இருக்குது. நான் எங்கெண்டு காசுசேர்த்து...? இவளவை ஆரையாவதுவிரும்பினாலும் பேசாம செய்யுங்கோடி எண்டு விட்டிடலாம். அதுக்கும் துணியிறாளவையில்லை.''

''ஒண்டுக்கும் யோசியாதையுங்கோ அண்ணை, எல்லாம் நடக்கும்''

''உனக்கென்ன? நீ ஆறு பெடியளைப் பெத்திருக்கிறாய். அவ கள் வளந்திட்டாங்கள் எண்டா சும்மா இருந்து சாப்பிடுவாய். ம்... அங்கைபார் அவன் ரத்தினம் வேலை செய்யாமல் பிராக்குப் பாக்கிறான். நீ போய் அலுவலைப்பார். நான் வாறன்.'' என்றவாறு செல்லத்துரையர் திரும்பி நடந்தார்.

இக்கிரியும், கோரையும் மண்டிப்போய்க் கிடந்ததனது காணியைப்பார்த்தார். ''ஒரு சின்னமழை பெய்தாலும் உழுதுபோடுவன். கடவுளே! இந்தமுறை என்ன செய்யப் போறனோ?''

எண்ணியபடி வரம்பிலிருந்து வீதியில் ஏறினார். வீதிச் சரிவிலே சாய்த்து வைக்கப்பட்டிருந்த சைக்கிளை நிமிர்த்தினார்.

அவரது வயற்காணி வீட்டிலிருந்து மூன்றுமைல் தொலைவில் இருந்தது. வீட்டிற்கும், வயலுக்கும் ஒரேயொரு போக்குவரத்துப் பாதை அந்த நீண்ட வீதிதான். ஒல்லாந்தர் காலத்து வீதி, அநேக வளைவுகளுடன் அமைந்திருந்தது. எழுபத்தொன்பதிலே தார்போட்டபின் இன்றுவரை செப்பனிடப்படாத வீதி அது. ஒரு புறம் வீதியுடன் சேர்ந்திருந்த வடிகால் பற்றைகள் வளர்ந்து, மண்நிரம்பி அடைபட்டிருந்தது. இருபுறத்து வேலிகளும் நிலம்வரை வெட்டப்பட்டு வெட்டவெளியாக்கப்பட்டிருந்தது.

''அநியாயப்படுவார். ஒரு மரந்தடியையாவது உருப்படியா இருக்கவிட்டாங்களே. வீட்டுக்கு அச்சறுக்கையா வேலியைப் போட்டா அதை வெட்டவைக்கிறது. எண்டைக்குத்தான் எங்களுக்கு நிம்மதி வரப்போகுதோ?'' என்றுசெத்தல் சுப்பிரமணியத்தினுடைய பேத்திக்கிழவி புலம்பியது இன்றும் செல்லதுரையரின் காதுகளுக்குள் ஒலித்துக் கொண்டிருந்தது.

உண்மைதான். ஒரு கிராமத்தின் இயற்கை அழகு அங்குள்ள மரங்கவிலும் பசுமையான வயல்களிலும் தான் தங்கியுள்ளது.

செல்லத்துரையர் யோசித்துக்கொண்டே சைக்கிளை உழக்கினார்.

ஒழுங்கான இடைவெளிகளில் நடப்பட்டிருந்த அந்த மலைவேம்புக் கன்றுகளைப் பார்த்தார். இரண்டு வருட முதிர்ச்சியில் நாலைந்தடி உயரத்திற்கு வளர்ந்திருந்தன. வெயிலின் அகோரத்திலே இலைகள் சுருண்டிருந்தன. வீசுகின்ற அனற் காற்றிலே அவை ஆடியபோது தண்ணீர் வேண்டி இரப்பது போல அவருக்குத் தோன்றியது.

உச்சிவெயில் மண்டையைப் பிளந்தது. ஒருவாறு வீட்டிற்கு வந்து சேர்ந்தார். சாய்மனைக் கதிரையிலே ''அப்பாடா'' என்று சரிந்து கொண்டார்.

மனைவி பூரணம் மூக்குப் பேணி நிறைந்த தேநீருடன் வந்தாள்.

இவ்வளவு காலம் கடந்தும் அவர் மூக்குப்பேணியை விடவில்லை. அதிலே குடித்தால் தான் தேநீரே ருசிப்பதாகக் கூறுவார்.

மனைவி பூரணம் அடிக்கடி புறுபுறுப்பாள்.

''பெட்டையள் பீலிகிலை குடிக்கிறாளவை... இவர்தான் கண்டறியாத மூக்குப் பேணிக்கை குடிக்கிறார். கொஞ்சமெண்டாலும் நாகரிகம் தெரியாத மனிசன்''.

செல்லத்துரையர் மனைவி மாகச் சிரிப்பார். வீண் [illegible] டைகளைத் தவிர்க்க அவர் கையாளும் முறை அதுதான்.

தேநீரை வைத்துவிட்டு நிமிர்ந்தாள் பூரணம்.

''அவன் குமார் வந்திட்டுப் போறான். அடைவு வைச்ச கொடியை மீளட்டாம். வட்டியும் முதலும் நகையை விழுங்கப்போகுது''

அவள் குரலில் கவலை தெரிந்தது.

அதைக் கண்டுகொண்ட செல்லத்துரையர் மெதுவாகச் சொன்னார்.

''நானென்னப்பா செய்யிறது? இடையிடையிலை அங்கினை இங்கினை எண்டு வாற தரகுக்காசிலை சீவியம் போகுது. இனி நகைகளை மீளிறதெண்டால் காணியைத்தான் விக்க வேணும்...''

''...றோட்டுக்கு வெளிக்கிடவே வெக்கமாக் கிடக்கு. கழுத்திலை ஒரு சங்கிலி எண்டாலும் வேண்டாமே. என்ன கந்தறுந்த வாழ்க்கையப்பா?''

சலித்துக்கொண்டாள் பூரணம்.

''இஞ்சைபார் பூரணம் எங்கட மூண்டு பெட்டையளும் காதிலை கிடக்கிற தோட்டைத் தவிர ஏதாவது போட்டிருக்கிறாளவையே? இண்டுவரைக்கும் அதை வாங்கித்தா இதை வாங்கித்தா எண்டு கேக்கேல்லை. அவளவைக்கு இல்லாத கவலை உமக்கு வந்திட்டுதோ?...''

பூரணத்துக்கு அது சுள்ளென்று சுட்டிருக்க வேண்டும். ''என்னவோ செய்யுங்கோ. எல்லாம் என்ரை விதி. கிடந்து உலையுறன்'' என்றவாறு பேணியை எடுத்துக்கொண்டு நகர்ந்தாள்.

''ஏதோ கோடீஸ்வரன் வீட்டிலை இருந்துவந்த குமரி மாதிரி எல்லே நிக்கிறா'' என எண்ணி மெல்லச் சிரித்துக் சொண்டார். பூரணம் இலேசில் எதிலாவது திருப்திப்படுபவள் இல்லை என்பது அவருக்குத் தெரியும்.

கைகளை உயர்த்திச் சோம்பல் முறித்தார். அன்றைய பத்திரிகையை எடுத்துப் புரட்டினார். சாப்பாடு தண்ணீர் இல்லாவிட்டாலும் நாட்டு நடப்புக்களை அறிந்து கொள்ளாவிட்டால் அவருக்குத் தூக்கம் வராது.

உடுவில் அரவிந்தன்

தலைப்புச் செய்தியை மேய்ந்தார்.

''அனைத்துத் தரப்பினரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வொன்றைக் காண்பதே எமது அரசாங்கத்தின் முக்கிய நோக்கம்''

''மூன்றுசிபிர் விமானங்கள் கொள்வளவு''

''உவங்களைத் திருத்தேலாது. நான் என்ரை பிரச்சினைக்கே தீர்வு காணேலாமல் முழுசிறன்'' வாய்விட்டுத் திட்டிக் கொண்டார்.

கைகள் ஐந்தாம் பக்கத்தைப் புரட்டின.

காடழிப்பதால் ஏற்படும் தீமைபற்றி ''மில்க்வைற்'' தகவலாக ஒருகட்டுரை பிரசுரமாகியிருந்தது.

நிமிர்ந்து உட்கார்ந்தார். ''...மரங்களைத் தொடர்ச்சியாக அழிப்பதால் இயற்கையான காலநிலை வட்டம் பாதிப்படையும்; நீர்ச் சமநிலை குலையும்; மழை குறைந்து கடும் வரட்சி ஏற்படும். எனவே அளவுக்கு மீறி மரங்களை அழிக்காது. இருக்கும் மரங்களைப் பேணுவோம். நாளைவரும் எமது சந்ததி நலமாக வாழ ஆளுக்கொரு மரம் நடுவோம். எமது தேசம் செழிப்படைவதற்கு [illegible]'— என்று அந்தக் கட்டுரை முடிந்திருந்தது.

பத்திரிகையை மேசையில் வைத்துவிட்டுச் சிந்தனையில் ஆழ்ந்தார்.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் வீதியோரங்கள், வெளிகள் எல்லாம் மரங்கள் நடப்பட்டு மிகவும் ஒழுங்காக நீரூற்றப்பட்டுப் பராமரிக்கப்பட்ட காட்சிகள் மனதில் நிழலாடின.

''ஓ...! எவ்வளவை இழந்திட்டம்''

நெடுநேரம் அப்படியே அமர்ந்திருந்தார்.

''இந்த மனிசன் சாப்பிடாமல் என்ன கண்டறியாத யோசினையோ?'' உள்ளேபூரணம் புறு புறுப்பது கேட்டது.

ஏதோ தீர்மானித்தவராக எழுந்து கிணற்றடிக்கு முகங் கழுவப் போனார்.

மறுநாள்...

அந்த நீண்ட வீதியிலே 'நடப்பட்டிருந்த மரக் கன்றுகளுக்குச் செல்லத்துரையார் அக்கம்பக்க வீடுகளிலிருந்து அள்ளியள்ளி நீர் ஊற்றுவதை ஊர்மக்கள் வியப்புடன் பார்த்தனர்.

''உந்த மனிசனுக்கு வேறை வேலையில்லையோ? தன்ரை தரையை உழாமல் விசர்வேலை பாக்குது'' என்று சிலர் சிரிப்பதையும் அவர்பொருட்படுத்தவில்லை.

வாடிச்சுருண்டிருந்த மரக் கன்றுகள் நீர் பட்டதும் இலைகளைச் சிலிர்த்துக் கொண்டு நிமிர்ந்தன.

செல்லத்துரையர் மனம் இலேசாயிருப்பதை உணர்ந்தார்.

வெகு தொலைவில் வடகீழ்வானம் மெல்லிதாகக் கறுத்திருப்பது தெரிந்தது.

இனி...

மழை பெய்யக்கூடும்!.

★

உண்மை அறிவு

உணர்வைத் தின்னும்
அறிவு பாழ்
அறிவைத் தின்னும்
உணர்வும் பாழ்
சம நிலை எங்கே ...?
சம நிலை எங்கே ...?
அதனைக் காண்பதே
உண்மை அறிவு!

—என்.சண்முகலிங்கன்

ஒடுக்கம்

நான் அழுவதற்கும்
தயாராயிருக்கிறேன்...!
என் கண்ணீர்
ஒரு சின்னப் பூச்சியின்
தாகத்தையாவது
தணிக்குமெனின்...

நான் அடிபடவும்
சம்மதிக்கிறேன்...!
எந்த ஒரு தாக்கத்துக்கும்
சமனும் எதிருமான
மறுதாக்கம்
இல்லையெனும் பட்சத்தில் ..

நான் சிரிப்பதற்குக் கூடத்தயார்
உன் துயரங்கள்
அதன் மூலம் கழுவப்படு
மென்றால்...

ஆனால்...
என் கண்ணீரால்
எந்த ஜீவராசிக்கும்
பயனில்லாமல்
போகுமென்பதால்
நியூட்டனின் விதி
என்றுமே மாறாதிருப்பதால்...
நான் சிரிப்பது
ஒரு போதுமே உனக்கு
சந்தோஷத்தைத் தரப்
போவதில்லை
என்பதால்...

நான் —
அழமால்...
அடிபடாமல்
சிரிக்காமல்...
வாழ்வதற்குப்பழகி
விட்டேன்!

-தாட்சாயணி-

காகிதக் கனி

இயல்பாய் வீசுகிறது காற்று.
வழமை போலவே
இயல்பாய் காய்கிறது வெயில்.
பறவைகள் தமது
பாடல்களோடு

பாதை வழி போகும்
கிராமத்து மனிதர்
மனதிலிருந்து வரும்
புன்னகையோடு.

புறந்திரும்பிய
முகங்களுடனும்
புதையுண்டு போன
மனசுகளுடனும்
நீயும் நானும் மாத்திரம்
என்ன
செய்து கொண்டிருக்கிறோம்
இங்கே ...?

ஏடுகள் தந்த ஞானம்
எமது இயற்கையையும்
தின்று போனதேன் ...?

- ந. சத்தியபாலன்

கண்ணீர்

கயல் விழிக்
கண்ணீர் கோளங்களால் என்
வாழ்வுக்கு
வர்ணம் தீட்டியவளே...!

உனக்காக இழந்தது
உள்ளம் மட்டுமல்ல;
உயிராய் நேசித்த
உயர் கல்வியும் தான்.

பாழாய்ப் போனது
பட்டம் மட்டுமல்ல;
பாரினில் உயர்ந்த
பதவியும்தான்.

ஊமையாய் அழுகிறேன் ...
ஊனமான மனதுக்கு
உரமூட்ட — நீ
உள்ளாய் என்பதால்.

- இ. ரமேஸ்

வேர்கள் அழைக்கின்றன

கணனி யுகத்தில்
உலகம்.
கண்ணிகள் உலகத்தில்
நாங்கள்.
புழுவாய் உலகை
உழுகிறோம்...
புகலிடம் தேடி
அலைகிறோம்.
நாளும்
வெடித்துச் சூரியன்
வெளிப்பட
வேதனைச் சுழலில்
வீழ்ந்திடும் மாந்தர்.
எழுவான் திசையிலும்
அழுவான் ஒருவன்...
படுவான் திசையிலும்
துயர்
படுவான் ஒருவன்...
வடக்கில்
வாசல் இழந்தவர்;
வாசம் துறந்தவர்.
தெற்கில்,
தேசமிழந்து
நிழல்
தேடி யிழந்தவர்.
தேய்தல் நிகழ்கிறது.
எங்கும்
ஓய்தல் தெரிகிறது.
கிறிஸ்துவின் பின்
இது என்ன காலம்?
ஏனிந்த கோலம்?
எட்டுத் திசையிலும்
துயர் பட்டு
மரத்தவர்.
அன்று மறத்தினால்
ஆண்ட இனத்தவர்,
இன்று மறந்தனர்
இனி என்ன
நிகழ்ந்திடும்?
இன்னும் கொஞ்சம்தான்
இருக்கிறது
இயலாமல் போக முன்னர்,
இதயம் நிற்க முன்னர்,
இரண்டாயிரமாண்டு
மேலாய்ச் சரிதம்
இல்லாமல் போக முன்னர்
இம் மண்ணை மிதிப்பீரா?
மண்ணில் பூத்து
சிறகை விரித்து
எட்டுத் திக்கிலும்
ஏற்றம் புரிபவரே
வேர்கள் அழைக்கின்றன
வெளிக்கிளம்பி வருவீரா?
விழுதாய் நீங்கள்
மண்ணைத் தொடுகையில்
மூச்சாய் எழுந்து
முழுதாய் நிறைந்து
விண்ணை முட்டும் மண்.

-கனல்குஞ்சு-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகுக்கு இனி மாரி காலம்!

காய்ந்த மரங்களுக்கு கண்குளிரப் பச்சைநிறச்
சாயம் கொடுத்துச் சரிசெய்ய—பாய்ந்தோடும்
சில்லென்ற வெள்ளத்தில் சின்னக் கடதாசி
வள்ளங்கள் விட்டெங்கள் வாண்டு—உளம்மகிழ
வேர்வை தொலைய; விடிகின்ற மட்டிலுமோர்
போர்வையால் மூடிப் புரண்டெழும்ப—கார்மேகம்
கண்ணைக் கசக்கிக் கடுங்குரலிற் கர்ச்சித்து
விண்ணைப் பிழியவரும் வெள்ளிமழை!—மண்ணில்
கொட்டுகின்ற மாரிக் குளிர்காலம் வந்ததென
மொட்டுக்கள் தம்முள் முணுமுணுக்க—ஒட்டியிதை
கேட்டு நிலப்பெண் கிளுகிளுத்து ''வாசனைகள்''
போட்டுப் பொலிந்துவிண் பார்த்துநிற்க—நாட்டினிலே
மாரியொன்று மீண்டுமிந்த மண்ணில் வருவதென
ஊரினிலே பேச்சு; உறுதிசெய்யக்—காரெறும்புப்
பட்டியொன்று இங்கே படையெடுத்து வந்துளது.
பிட்டியிலே தள்ளாடி பிரண்டுருண்டு—துட்டப்
பறவைகண்ணில் மண்தூவிப் பாடுபட்டுக் கட்டிவைத்த
புற்றைத் துறந்து பருகுதற்கு—நீரின்றி
உற்றார் உடன்தம் உயிர்மட்டும் காவிவந்தென்
முற்றத்தில் ஊரும் முறைபார்த்தேன்—சட்டென்று
என்றன் மனதில் நினைவதுவோ? மின்னியது!
சின்ன எறும்புபற்றி சிந்தித்துக்—கண்கலங்கி
நின்ற பொழுதில் நினையாப் பிரகாரம்
வெண்புறா வந்திவற்றை வேட்டையிட—என்இறையே
அத்துவித முத்திநிலை! ஆருக்கும் கொடுக்காயிச்
சிற்றெறும்புக் கேனிதைநீ சித்தித்தாய்?—சத்தியமாய்
ஒன்றும் புரியா துணவாகிக் கொண்டிருக்கும்
சின்ன எறும்புபற்றி சிந்திக்க—என்விழியில்
நீரும் பொழிய நிசந்தான்எம் ஊரினிலே
மாரி இனித்தான் மகிழ்!

ச. முகுந்தன்.

மைந்தனுக்கு ஓர் மடல்

நேற்றுத்தான் நீயனுப்பி வைத்த 'செக்கும்'
நீலமடலும் கைக்கு எட்டிற்றையா!
கேற்றடியில் செய்ததவம் பலித்து... காத்துக்
கிடந்தவிழி பூத்ததடா! கடிதக்காரன்
தேற்றோடு; நேசமானான். நொட்டை சொல்லி
நின்றவர்கள் வாயடைத்தார்! உந்தன் அன்பு
ஊற்றடைக்க வில்லை... என்றேன்; எனினும் வெந்தேன்.
உன் ஊரின் குளுமையையுன் சிரிப்பில் கண்டேன்,

இத்தாலிப் பெட்டையினை 'எழுதிப் போட்டு'
என்கோபம் ஆற்றவாநீ ''எனையும் வாவா
இத்தாலிக்'' னெ எழுதி உள்ளாய்? என்னை
இத் தாலி மண்ணை விற்றா வர நீ சொன்னாய்?
செத்தாலும்... 'என்குஞ்சி' எனக்கு என்று
சீதனமாய்த் தந்தவீட்டை; உந்தன் கோப்பர்
வித்தை செய்து விளைத்தமெட்டை; நீ மண் தின்று
விரிந்த கூட்டை விட்டுவிட்டு வராதிக் கட்டை!

பல் செட்டுப் புனையைவைப்பாய்; கிறீம், மை பூசி
சுருங்கியதோல் பளபளக்கச் செய்வாய்! சல்லிக்
கல்ரோட்டைச் செருப்பின்றிக் கடந்த காலில்
'கன்வஸ் சூ' மாட்டிடுவாய்! கம்பளிக்குள்
தள்ளிடுவாய்! 'ஹோலிலு'ள்ள 'சோபா' ஒன்றே
தஞ்சமெனக் கிடக்கவைப்பாய்! 'சுவற்றர்' பின்ன
மெள்ள எனைப் பழக்கிடுவாய்! நின்சேய் தூங்க
'றாப்' பாடச் சொல்லிடுவாய்! வரவே மாட்டேன்.

விதானையாரின் தாய்க்கிழவி அடித்த கூத்தை
வீடியோவில் பார்த்தவன் நான்... வெளிநாடென்றால்
முதுமைகளும் நாகரிக மதுவில் மூழ்கின்...
முருகா!... உன் நிலையென்னே? வேண்டாம்; இங்கே
சதைசிதறும் நிலைவரினும் சதையைக் காட்டித்
தன்மானம் விற்கும்நிலை வரலை! வாழ்வின்
நதிமூலம் கண்டுயிர்த்த சாரவாழ்க்கை
நம்மதடா! இதைவிடவுஞ் சொர்க்கம் இல்லை!!

தமிழ் மணக்கும் பூமண்ணும், வைகறையில்
தட்டியெனை எழுப்பும் மணி நாதக் காற்றும்,
அமுதான ஊர்க் கிணற்றின் நீரும், கூட்ட
அலுக்காத அடிவளவும், குரக்கன் புட்டும்,
குமரா.... டேய் எனைச் சூழ்ந்தால் வாழ்வேன்! உன் ஊர்க்
கொடுங்குளிரில் எனைநட்டால் வரழ்வேன்! உன்னைச்
சுமந்தகடன் தீர்த்துவிட்டாய்; இனிமேல்தான் நான்
எனைச்சுமந்த மண்ணின்கடன் தீர்க்கப் போகிறேன்.

நல்லூரின் பிரசாதம், நயினாதீவில்
நானுனக்காய் நேர்ந்தெடுத்த அரைஞாண், கைநூல்
எல்லாமும் அனுப்ப ஆசை; நீ ஏற்பாயோ?
இவை ''பஷனா'' என்பாயோ? அறிக ஒன்று... உன்,
'இல்லறத்தில் நிரந்தரங்கள் இல்லை'., எங்கள்
இதம்தாண்டா எமைமதிக்கும் எல்லை. உந்தன்
பிள்ளைக்கிவ் வூர் கொடுமை! அதனால் எந்தன்
''பேத்திபடம் அனுப்பெனக்கிம் மண்ணே பாடை!''

அருணன்

அந்த நாள் ஞாபகங்கள்

ஊரின் ஞாபகங்கள்
ஊறும் மனதிலே
''அந்தநாள்'' ஞாபகங்கள்
'அழகான' ஞாபகங்கள்

முத்தரின் காணியில்
முட்டுக்காய் ஆய்ந்து
சுப்பரின் தோப்பைச்
சுற்றியோடி வந்து
பரமுவின் வீட்டுப்
பற்றைக்குள் ஒளிந்த ஞாபகங்கள்.

கிருஷ்ணனின் வீட்டிலே
கிரிக்கெட் விளையாட
பரமு அடித்த ''ஸிக்சர்''
பந்து பட்டு
ஓமான் மாமாவின்
'ஓடுடைந்த' ஞாபகங்கள்.

மாதவன் சேர் வீட்டு
மாங்காய்க்குக் கல்லெறிய
பக்கத்து வீட்டிலிருந்த
பரமுக் கிழவன் கூரத்த
கோவிந்தன் வீட்டுக்
'கோடிக்குள்' ஒளித்த ஞாபகங்கள்.

காந்தன் வீட்டருகுக்
காளி கோயிலிலே
அரியதம்பி ஐயா
அர்ச்சனை செய்ய
தேவன் காத்து நின்று
'தேவி' தரிசனம் பெற்ற ஞாபகங்கள்.

வரசிக சாலையடியில்
வாய்ச்சண்டை முற்றி
கதிரவனுங் குகனுங்
கைகலந்த போது
தம்புக் கிழவன்
தடியாலடித்த ஞாபகங்கள்.

பிரபுவின் தமக்கைக்குப்
பிரசவ வலியெடுக்க
வண்டில் வைத்திருந்த
வடிவேலரிடம் கேட்ட
சின்னத்தம்பியரைச்
'சீறி' விழுந்த ஞாபகங்கள்.

அரியதம்பி ஐயருடன்
அடுத்த நாள் பின்னேரம்
வடிவேலர் நடந்து
வருகின்ற வேளையில்
ஆதவன் கல்லெறிந்து
'ஆத்திரம்' தீர்த்த ஞாபகங்கள்.

அம்மன் கோயிற் கேணியில்
அடுத்த நாட் பின்னேரம்
நீலன் குதித்து
நீச்சல் பழக
முகுந்தன் வீடுபோய்
'மூட்டி வைத்த' ஞாபகங்கள்

அந்த நாள் ஞாபகங்கள்
அழகாக நெஞ்சில் வரும்
ஆனால்
அநுபவிக்க முடியாது;
ஏனென்றால் நான்
கல்லறைக்குள்ளிருக்கின்றேன்!

இளங்கோ-

புதுக்கவிதை ஓர் பூங்கா

புதுக்கவிதை ஓர் பூங்கா!
புரியாதது எம் தீங்கா?
எழுதுமேன் நற்பாங்கா.
தெரிந்த கருத்தை
புரிந்த மொழியில்
புகல்வது தான் கவிதை — இதை
புரிந்து மேனோ
புதுக் கவிதை படைப் போர் மீது
வீசுவான் புழுதியை — அரவிந்தா?
கவிதையா .. புரியாதென்று
புறக்கணித்த பாமரரை
தன்பால் சாயவைத்து
இனிமையை நுகர வைத்து
புதுமை படைத்தது புதுக்கவிதை.
தலையிடிக்கு தலையணை
மாற்றுதல் தீர்வாகாது.
புதுக்கவிதை ஓர்வழி
மரபுக் கவிதை தனிவழி
இதற்கேன் வீண்பழி?
எல்லாமே எம் மொழி!

தேவகி

'கவிதை' என்ற தலைப்பில் 27 - 09 - 1997 திகதிய சஞ்சீவியின் கவிதை முற்றத்தில் உடுவில் அரவிந்தன் வரைந்த கவிதைக்குப் பதில் இது.

பாரதி ஒரு மானுடன்

(பாரதி எனும் கவிமாதகுரு புஷ்பித்த புதுமையான வசனகவிதை எனும் பூக்கொண்டு அச்செடிக்கு ஒரு பாமாலை சூட்டுகின்றார் இந்நங்கை.)

பாரதி ஒரு சாகரம்.
அவன் எண்ணம் திண்ணலை.
அவை வடித்த முத்து பல்நூறு.
நீலம், வெண்மை, பசுமை, சிவப்பு—எல்லாம்
கருமை தவிர
நிர்மலம், அமைதி, ஆனந்தம், உக்கிரம்
துன்பம தவிர.

பாரதி உணர்வானவன்.
அவனிடம் வஞ்சினமுண்டு; வஞ்சகம் இல்லை.
பேராண்மை உண்டு; பொறாமை இல்லை.
ஊக்கம், எழுச்சி, ஏக்கம், மலர்ச்சி,
தூற்றல், போற்றல்,
வியத்தல், இகழ்தல், வீரம், வேடிக்கை
எல்லாம் உண்டு.
உணர்வே கவிதை.

உணர்வுகளின் பாற்கடல் அவன்.
உலகியல் மத்து.
மத்து பாலைக் கடைகிறது.
அமுதம் துளித்துளியாய், உயிர்வார்ப்பதற்காய்
அளவிறந்து திரள்கிறது.
அமுதம் கவிதை.

பாரதி போகி.
காணிநிலம், கண்ணம்மா, கவினுறுசோலை;
கேணி, தென்னைமரம், தென்றல்
யாவும் அவனுக்கு இன்பம்.
பாரதி யோகி.
காளி மலர்த்தாள் அவன் கருவறை.
கடவுளர் வாழ்த்து அவன் கவிதை,
தசையைத் தீசுடினும்,
அவன் நெஞ்சம் சிவசக்தியைப் பாடும்
பாரதி ஞானி.
வானிடியும், அவன் அஞ்சலன்.
உளனிழியும்; அவன் உணர்தலிலன்
தேனும் வேம்பும் அவன் தெளிவிலொன்றே.

பாரதி மனிதன்.
எல்லா மனிதரிடத்தும் குருதி சிவப்பு.
அதில் பேதம் காணாதவன் அவன்.
பெண் சக்தி.
சக்தி ஆற்றலுக்குத் தாய்.
ஆற்றலை இழிக்காதவன் பாரதி.
மதம் ஜீவன்.
ஜீவாதாரம் மத நம்பிக்கை.
சடங்குகள் ஜீவனைப் போர்த்த ஊனாகும்.
உயிர் மறந்து ஊன் போவாமோ?
பாரதி உண்மை தெளிந்தவன்.
உய்வ தனைத்திலும் ஒரே பொருள் கண்டான்.

பாரதி உறுதி.
தீயின் நிழலில் யாராவது
சுகித்திருத்தல் இயலுமா?
வறுமை, பகைமை, இல்லாமை
தீயின் கங்குகளாய் அவனில் கொழுந்தெரியும்;
நடுவில் பாரதி.
நனவிடை அமிழ்ந்து, உலகியலில் சிதையாத
உண்மை பாரதி.
அவன் உள்ளம் திண்ணிது. ஆதலால்,
சுட்ட தீ முடமானது.

பாரதி இரசிகன்.
காற்று, எறும்பு, குருவி, கயிறு,
சூரியன், தமிழ், குழந்தை,
மணல், கடவுளர், சுதந்திரம்
எல்லாவற்றையும் இரசித்தான்
எல்லாவற்றையும் உணர்ந்தான்.
எல்லாம் ஒன்றெனத் தெளிந்தான்.

பாரதி காலம்.
காலங்களில் நிகழ்காலமே சிறந்தது.
இறந்தகாலம் அதிர்ச்சியைத்தரும்.
எதிர்காலம் ஏக்கத்தைத் தரும்.
நிகழ்காலம் உயிருள்ளது; ஊக்கமுள்ளது.
ஆதலின், பாரதி நிகழ்காலம்.
பாரதி செயல் — கவிதை.
பாரதி செயல் — வையகம் பயனுற
வாழ்தல்.
கவிதை அழிதலற்றது.
பயனுற வாழ்தலில் மரணமில்லை.
அதனாற்றான்,
எக்காலத்தும் அவன் இளமையானவன்.
எக்காலத்துக்கும் அவன் புதுமையானவன்.
எவ்வேளையிலும் அவன் ஆனந்தமானவன்.

பாரதி தமிழ்.
பாரதி அறிவு.
பாரதி ஞானம்.
அவன் நதி. பெருநிதியும் கூட.
அவன் தடம் படிந்த மண் வளர்ந்தது,
மனம் வளர்ந்தது.
இவ்விரண்டும் வினைத்தலை விட
மானுடத்துக்கு
வேறு மாண்பும் உண்டாமோ?
பாரதி மானுடன்.

-ச. ஆனந்தி-

கவிதை முற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூந்தோட்டம்

வண்ண வண்ணப் பூந்தோட்டம்
வடிவு மிக்க பூந்தோட்டம்
கண்ணைக் கவரும் பூந்தோட்டம்
எங்கள் வீட்டுப் பூந்தோட்டம்

இதயம் கவரும் மல்லிகையும்
இரத்த சிவப்பு செவ்வரத்தையும்
இனிய நல்ல பூக்களிலே
கானம் பாடும் வண்டுகளாம்

நல்ல மஞ்சள் நிறத்திலே
செவ்வந்திப் பூ சிலிர்க்குதே
இனிய ரோஜாப் பூவுமே
இதயம் மலர களிக்குதே!

தம்பி கண்டு சிரிக்கின்றான்
தண்மையான பூந்தோட்டம்
நம்பி வந்து பாருங்கள்
நாங்கள் வளர்க்கும் பூந்தோட்டம்!

இ. கிருஸ்ணஜெயந்தி,
ஆண்டு 3,
யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை.

அவசர புத்தி ஆபத்தைத் தரும்

ஒரு காட்டில் ஒரு சிங்கம் வாழ்ந்து வந்தது. அது தனக்கு இரை தேடித் தருவதற்குத் துணையாக நரி ஒன்றைச் சினேகம் பண்ணிக் கொண்டது. முதுமை காரணமாக சிங்கத்தால் வேட்டையாட முடியவில்லை.

ஒருநாள் அந்த நரி நல்ல கொழுத்த கழுதை ஒன்றை கதை சொல்லி ஏமாற்றித் தந்திரமாக அழைத்து வந்தது. சிங்கத்தின் குகையருகே வந்த கழுதை குகையின் உள்ளே செல்லச் சற்றுத் தயங்கியது. அவ்வேளை குகையின் உள்ளேயிருந்த சிங்கம் அவசரப் பட்டுக் குகையின் வாசலில் வைத்தே கழுதையின் மீது குறிவைத்துப் பாய்ந்தது.

சிங்கத்தின் குறி தவறிவிட்டது. அதனால் தப்பிவிட்ட கழுதையோ, ''தப்பினேன், பிழைத்தேன்'' என்று ஓடிப் போய் விட்டது. கழுதை ஓடியதைக்கண்ட நரி, சிங்கத்தைப் பார்த்து, ''ஏ சிங்கராசாவே! எவ்வளவு கஷ்டப்பட்டு நான் கழுதையை அழைத்து வந்தேன் தப்ப விட்டு விட்டீர்களே'' என்று அங்கலாய்த்தது.

அதைக் கேட்ட சிங்கம், ''சரி! நரியாரே, மீண்டும் ஒருவாறு எப்படியாவது அழைத்து வாரும்! நான் குறி தப்பாமல் கொன்று விடுகிறேன்'' என்றது.

''சரி முயன்று பார்க்கிறேன்'' என்ற நரி கழுதையைத் தேடிச் சென்றது. தூரத்தில் மேய்ந்து கொண்டு நின்ற கழுதையைக் கண்ட நரி, அதற்குக் கிட்டப் போய் மெதுவாகப் பேச்சுக் கொடுத்தது.

கழுதையோ நரியைப் பார்த்து, ''ஓ! நரியாரே, என்னைக் கொலை செய்யவா அழைத்துப் போனீர் நல்ல காலம் தப்பி வந்து விட்டேன். மீண்டும் எதற்காக வந்திருக்கின்றீர்?'' என்று கேட்டது. அதற்கு நரி, ''அடடா! சிங்கம் உன் காதுகளில் ஏதோ இரகசியமான செய்தி ஒன்று சொல்வதற்காகப் பாய்ந்து கிட்ட வந்தபோது நீ அதைத் தவறாகப் புரிந்து கொண்டு ஓடி வந்துவிட்டாய். அதுதான் உன்னிடம் விஷயத்தை விளங்கப்படுத்தி மீண்டும் உன்னை அழைத்து வருமாறு என்னை அனுப்பியிருக்கிறார் சிங்கராஜா!'' என்றது நரி.

நீதிக்கதை

நரியின் வஞ்சக எண்ணத்தைப் புரிந்துகொள்ளாத அந்தக் கழுதை, நரியின் பேச்சை நம்பி, ''நான் வருகிறேன் ஆனால் என்னைக் கொல்லக் கூடாது'' என்று கூறியது. ''இல்லை! இல்லை! ஒரு தவறும் நடக்காது. நீ என்னுடன் தாராளமாக வரலாம்'' என்றது.

கழுதையைக் கூட்டிக் கொண்டு சிங்கத்தின் குகையை நாடிச் சென்றது நரி, அப்போது தூரத்தில் இருவரும் வருவதைக் கண்டதும் நரியின் சாமர்த்தியத்தை எண்ணி வியந்தது சிங்கம். ஒருவாறு சாக்குப் போக்குச் சொல்லி குகைக்குள்ளே கழுதையை அழைத்துப் போனது நரி.

கழுதை உள்ளே வந்ததும் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து அதனை அடித்துக் கொன்று விட்டது சிங்கம். கழுதை துடிதுடித்து இறந்தது. ''சரி, நான் குளித்து விட்டு வருகிறேன். நரியாரே! நீர் கழுதையைப் பார்த்துக் கொள்ளும்'' என்று சொல்லி விட்டுப் போய்விட்டது சிங்கம்.

இறந்து கிடந்த கழுதையின் இறைச்சியைப் பார்த்ததும் நரியின் நாக்கில் ஜலம் ஊறியது. தலையில் அடிபட்டு கழுதையின் மூளை வெளியே தெரிந்தது. பொறுமையிழந்த நரி அதனை முதலில் தின்று முடித்து விட்டது.

குளித்துவிட்டு வந்த சிங்கம் கழுதையைத் தின்ன ஆரம்பித்தது. அப்போது கழுதையின் மூளையைக் காணாது தேடிப்பார்த்து ''ஓ! நரியாரே! கழுதையின் மூளையைக் காணவில்லையே? எங்கே அது?'' என்று கேட்டது சிங்கம்.

நரியோ சிரித்துவிட்டு, ''முதலில் ஓடிப்போன கழுதை மீண்டும் திரும்பி வந்தபோதே தெரியவில்லையா, அதற்கு மூளை இல்லையென்று சிங்கராசாவே!'' என்று கூறி நமட்டுச்சிரிப்புச் சிரித்தது.

சிங்கமும் ஒன்றும்பேசாமல் கழுதைஇறைச்சியை ரசித்து ருசித்துச் சாப்பிட்டது. இந்தக் கதையிலிருந்து நீங்கள் என்ன அறிந்து கொண்டீர்கள் என்பதைக் கூறுங்கள் பார்க்கலாம்?

- ஸ்ரீ. குவலயா
(யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை)

முயன்று பாருங்கள்!

ஒன்று தொடக்கம் இருபத்தைந்து வரையான அனைத்து எண்களையும் ஒருமுறை மாத்திரம் உபயோகித்து கீழே உள்ள சதுரக் கோலத்தைப் பூர்த்தி செய்க. ஆனால் நிலைக்குத்தாகவோ கிடையாகவோ அல்லது குறுக்காகவோ கூட்டின் கூட்டுத் தொகை 65 ஆக இருக்க வேண்டும்.

				3
	12			
		1		
23				15

- ஈழநேசன் -
(விடை IX ஆம் பக்கத்தில்)

வறுமை ஒரு தடையல்ல

உலகில் உயர்வதற்கு வறுமை ஒரு தடையல்ல, அதற்கு சாதாரண மனிதர்களாக இருந்து தம்திறனால் உயர்ந்த சிலரைநாம் காணலாம். அவர்களில் சிலர்:-

★ **ஆபிரகாம் லிங்கன்:-** இவர் ஓர் ஏழைவிறகு வெட்டியின் மகன். அமெரிக்கநாட்டின் ஜனாதிபதியானார்.

★ **டாக்டர் சாமுவேல்ஜோன்சன்:-** வறுமையில் வாழ்ந்த ஒரு புத்தக வியாபாரியின் மகன். உலகம் போற்றும் இலக்கிய மேதையாகவும் ஆங்கில அகராதியின் ஆசிரியருமாவார்.

★ **ஜோசப் ஸ்டாலின்:-** சோவியத் நாட்டின் இரும்பு மனிதராக — தலைவராக — இருந்த இவர் செருப்பு தைக்கும் ஏழைத் தொழிலாளியின் மகனாவார்.

★ **ஹென்ரி போர்ட்:-** ஒரு சாதாரண பண்ணைத் தொழிலாளியின் மகனான இவர் உலகம் போற்றும் விஞ்ஞானி ஆனார்.

★ **ஜோன் றாக்பெல்லர்:-** சாதாரண எழுதுவினைஞரின் மகனாகப் பிறந்து ஒருமாபெரும் பொருளாதார சாம்ராஜ்யத்தையே உருவாக்கியவர்.

★ **தாமஸ் அல்வா எடிசன்:-** வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்த—படகு செய்பவரின்—மகன். விஞ்ஞானியாக வளர்ந்து அளப்பரிய சாதனைகளைப் புரிந்தவர்.

★ **பெஞ்சமின் பிராங்ளின்:-** உலகம் போற்றும் உன்னத விஞ்ஞானியான இவர், ஒரு மெழுகு வர்த்தி வியாபாரியின் மகனாவார்.

தொகுப்பு:-
செல்வி ஜெ. வாணி-
(ஆண்டு- 10, சாவகச்சேரி, இந்துக் கல்லூரி.)

நொடிப் பொழுது

1. காகமும் குருவியும் கட்டாத கூடு. அது என்ன?
2. மூத்தவர் ஆற்றிலே; இளையவர் வீட்டிலே; நடுவிலார்புறத்திலே; அதுஎன்ன?
3. அம்மாவுக்கு எட்டும்; அப்பாவுக்கு எட்டும்; தம்பிக்கு எட்டும்; அண்ணாவுக்கு எட்டாது அது என்ன?
4. ஒரு சாண் உடல்தான்; உடல் நிறையப் பற்கள். அது என்ன?
5. தலை கறுப்பு; தண்டனை கொடுத்தால் சிவப்பு. அது என்ன?

1. குருவிக்கூடு 2. ஆறாத - மூலை -மூலையில் 3. ஊசி 4. சீப்பு 5. பேனா

மழலையர்

தொகுப்பு:-
சி. கிரிசாலினி,
ஆண்டு 2,
யா/பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி.

சிரிப்புகள் பல விதம்

ஓயாமல் சிரிப்பவன்	—	பைத்தியக்காரன்.
ஓடவிடு சிரிப்பவன்	—	வஞ்சகன்.
இடம் பார்த்துச் சிரிப்பவன்	—	எத்தன்.
இருக்குமிடமெல்லாம் சிரிப்பவன்	—	கோமாளி.
கற்பனையில் சிரிப்பவன்	—	கவிஞன்.
கண்பார்த்து சிரிப்பவன்	—	காரியவாதி.
தெரியும் என்று சிரிப்பவன்	—	நடிகன்.
தெரியாது என்று சிரிப்பவன்	—	பசப்பாளி.
நீதியோடு சிரிப்பவன்	—	அறிஞன்.
நிலை மறந்து சிரிப்பவன்	—	காதலன்.
மகிமையில் சிரிப்பவன்	—	மன்னன்.
மாண்பில் சிரிப்பவன்	—	பண்பாளன்.
குழந்து சிரிப்பவன்	—	சந்தர்ப்பவாதி.
கூட்டத்தில் சிரிப்பவன்	—	அரசியல்வாதி
இன்பத்தில் சிரிப்பவன்	—	ஏமாளி.
துன்பத்தில் சிரிப்பவன்	—	ஞானி.

தொகுப்பு:-
அ. அன்ரனி பகீரதன்,
(ஆண்டு 5, மிருசுவில், றோ. க. த. க. வித்தியாலயம்).

உலகில் பெரியவை

குடாநாடு	—	அரேபியா
கண்டம்	—	ஆசியா
சமுத்திரம்	—	பசுபிக்
தீவு	—	கிறீன்லாந்து
ஏரி	—	கஸ்பியன் ஏரி
பாலைவனம்	—	சஹாரா
கடல்	—	மத்தியதரைக் கடல்
பாலம்	—	சான்பிரான்ஸிக் கோவில் உள்ள ஒக்லாந்துப்பாலம்
சிலை	—	நியூயோர்க்கில் உள்ள சுகந்திரச்சிலை
கடிகாரம்	—	லண்டன் பிக்—பென்
விமானத்தளம்	—	அமெரிக்கோவில்உள்ள டல்லஸ்
மலை (உயரம்)	—	இமயம்
கட்டடம் (உயரம்)	—	சிக்காக்கோவில் உள்ள சியர்ஸ் கட்டடம்
கால்வாய் (நீளம்)	—	சுயெஸ் கால்வாய்
நதி (நீளம்)	—	நைல்

தொகுப்பு:- வி. உதேஸ்
(நாவற்குழி ம. வி)

தகவல் களஞ்சியம்

★ 19 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் சேர் ஹம்பரி டேவி என்னும் விஞ்ஞானி முதன் முதல் மின்சார விளக்கை கண்டுபிடித்தார்.

★ முதன் முதல் வெப்பத்தினால் ஒளிர்வு தரும் விளக்கு தோமஸ் அல்வா எடிசனினால் 1879 இல் அமைக்கப் பட்டது.

★ தகரத்திற்கு அழுகின்ற உலோகம் என்றும் ஒரு பெயர் உண்டு. தகரத்தகடு முறுக்கப்பட்டால் அது யாரோ அழுவது போன்ற ஒலியை எழுப்புவதே இதற்குக் காரணம்

★ தென்னையின் வயதை அறிவது அதன் தண்டில் உள்ள வரைகளால்.

★ பல்லுள்ள பறவை வௌவால்.

★ வானொலி அலைகள் வினாடிக்கு ஒரு லட்சத்து 86 ஆயிரம் மைல்கள் வரை கூடச் செல்லும்.

★ விஞ்ஞானத்தின் தாய் எனப் போற்றப்படுவது மெய்யியல். அது சரி விஞ்ஞானத்தின் அரசி எனப் போற்றப்படுவது எது தெரியுமா? ஓ...தெரியுமே கணிதம்!

★ பறவை இனங்களில் பெரியது தீக்கோழி. மிகவும் சிறியது கியூபா நாட்டில் காணப்படும் ரீங்காரப் பறவையாகும்.

★ பறக்கும் ஆற்றல் பெற்றவற்றுள் பெரியது சோரி என்னும் பறவை.

★ முதன் முதலில் ஆங்கில மொழியில் அகராதியை உருவாக்கியவர் யார் தெரியுமா? ரோபேட் காவ்டரே என்னும் பள்ளி ஆசிரியரே இதனைச் செய்தார். 1604 இல் இது இடம் பெற்றது.

தொகுப்பு:-
பு. யசோதா
(ஆண்டு 11, சாவகச்சேரி இந்துக்கல்லூரி,

வாசி! யோசி!!

'சி' யில் முடியும் இந்தச் சொற்களை உங்களுக்குத் தெரியுமா?

1. பெரியோர் வழங்குவது.....
2. குத்துவது.....
3. வாசனை அறிய உதவுவது.....
4. தும்மலைத் தருவது.....
5. குளக்கரைப் படிக்கட்டில் உருவாவது.....
6. சோதிடத்தில் வருவது.....
7. வயிற்றைக் கிள்ளுவது.....
8. தைக்குப் பின் வருவது.....
9. பாவம் தொலைக்க நாடும் தலம்.....

தொகுப்பு:- குணரத்தினம் ஜீவன்.

1. சீர் 2. சிறை 3. சிறை 4. சிறி 5. பாசி 6. சிறை 7. சிறை 8. சிறை 9. சிறை

மழலையர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதி வெண்பா

''ஒழுக்கு'' என்று சுருக்கமாக முடித்து விட்டார் வள்ளுவர். உலகினில் நிலைக்க வேண்டிய ஒழுக்கங்கள் அனைத்தும் இச் சொல்லில் அடக்கம். அது மனித ஒழுக்கானாலும் சரி நீரின் ஒழுக்கானாலும் சரி.

எல்லாம் தாராளமாக இருந்தால் உலகினில் கள்வரும் இல்லை; கொள்வார் இல்லாமையால் கொடுப்பாரும் இல்லை என்ற நிலைமை — நிறைவு — வந்து விடும். இதுவா ''ஒழுக்கு''?

ஒழுக்கம் தவறி பொருள் கொள்ளும் தேவையோ, நடத்தை தடுமாறும் தேவையோ ஏற்படுவது இல்லை. இதுவா ''ஒழுக்கு''?

மழை பொய்த்து, தாராளத்தன்மை மாறித் தட்டுப்பாடு ஏற்படத் தொடங்கினால் ஒழுக்கம் தவறும்; பதுக்கல் வியாபாரம் களவு, கொள்ளை லாபம் எல்லாம் தலை தூக்கும்.

யார் யார்க்கும் குறுக்கு வழியில் புத்தி வேலை செய்யத் தொடங்கிவிடும். அடுத்தவனை விழுத்தி தான் மிதக்கும் வழிகளை ஆராயத் தொடங்குவான் மனிதன். இதுவே தடுப்பாடு தரும் 'ஒழுக்கு'

மழையில்லா விட்டால் மனிதனுக்கு மட்டுமா ஒழுக்கம் குறையும்? நீருக்கும் தான்! ஆறுகள், குளங்கள், ஏரிகள் போன்ற நன்னீர் ஒழுக்குகளும் வற்றி விடும்!

எனவேதான் பொழிகின்ற வெள்ளத்தை கடலுக்கு வெட்டி விடாமல் நாட்டிலே தேக்கிட முயன்றார்கள் முன்னோர்கள். இன்று விரைவாக இவற்றை கடலுக்கு அனுப்பும் வகையிலேயே நகரத் திட்டங்கள் உருவாகின்றன.

எத்தனை வசதிகள் இருந்தும் எந்தக் குபேரனுக்கும் நீர் இல்லாத சீவியம் சாத்தியம் ஆகிவிடுமா? ஒழுக்கம் இல்லாத வாழ்வும் ஒரு வாழ்வு ஆகிவிடுமா?

வாழ்வில் ஒழுக்கமும் உலகினில் செழிப்பும் நிலைக்க வேண்டின் மழைதான் தெய்வமாகி விடல் வேண்டும்.

இதையே —

நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்
வானின் றமையா தொழுக்கு.

—0020

என்றார் வள்ளுவர்.

(வான் சிறப்பு முற்றும்)

- அம்பிகைபாகன்

இந்த வார இராசி பலன்

(11 - 10 - 1997 முதல் 17 - 10 - 1997 வரை)

சனி	8	9	10
கே	இராசிச் சக்கரம்		11
சந் வி			ரா
4	செ வெ	புத	*சூ

மாற்றம்:

நட்சத்திரம்:- திருவோணம் மகரத்தில் மாற்றம்.

12-10-1997:- துலாம் இராசியில் புதன்வரும்.

அரசியலில் புதிய கருத்துக்களும், வெளி நாடுகளின் ஆலோசனைகளும் மேலிடும். தெற்கில் திட்டமிட்ட எதிர்ப்புக்களும் வடக்கில் பெற்றோரின் கண்ணீரும் கிழக்கில் யுத்த நெருக்கடிகளும் மேற்கில் புதிய நெருக்கடிகளும் தோன்றும். கிழக்கு உலகில் இயற்கை, செயற்கை அழிவுகள் மேலிடும். மேற்கில், வடமேற்கில் அத்திலாந்திக் சமுத்திர நாடுகளில் அரசியல் போராட்டங்கள் புதிய ரூபமாகும் எனக் கிரகநிலைகள் காட்டுகின்றன. தெய்வ வழிபாடு செய்து வருவதனால் அந்தந்த இடங்களில் தாக்கங்கள் குறையும்.

மேடம்: போராடிப் போராடி ஞானம் பெற்றுக் கொண்டிருக்கும் உங்களுக்கு உலகில் எதிர் நீச்சல் அடித்து வாழ்வது அவ்வளவு கஷ்டமல்ல. மேடு — பள்ளம் — எல்லாம் அறிந்து கொண்டுதான் இருப்பீர்கள். ஆயினும் உங்களுக்கோ உங்கள் குடும்பத்திற்கோ எதிர் விளைவுகள் வருமாயின் கலங்காமல் இருக்க மாட்டீர்கள். தொழில் ஸ்தானத்தில் புதிய தென்பு ஏற்படும். பழைய தாக்கங்கள் பின் தொடரும். அவதானமாகச் செயற்பட்டால் சமாளித்துக் கொள்வீர்கள். கை, கால் உளைவு, கண்கூச்சம், வயிற்றில் நோ கொடுக்கும். தகுந்த வைத்தியத்தால் சுகமாகும். மறைமுகத்தில் உங்களுக்கு விரோதச் செயல்கள் செய்வோர் வெட்கித் தலை குனிவர். வீடுமனை, வாகனச் சிறப்புக்கள் வரும். பொருள் ரீதியில் புதிய அணுகுமுறை ஒன்று ஏற்படும்.

இடபம்: எதிலும் கலக்கமா? அல்லது மயக்கமா? எதிர்ப்பாலாருடன் அன்பாகப் பழகிக் கொள்ளுங்கள். அல்லது வீண் பழி சுமத்துவார்கள். திடீர் திடீர் கோபங்களை நிதானப்படுத்திக் கொள்ளுங்கள். தொழில் ஸ்தானத்தில் உதவிகளும், உபத்திரவங்களும் கலந்திருக்கும். உங்கள் சொல்வாக்கால் செல்வாக்குப் பெற முயலுங்கள். முழங்காலில் விறைப்பு, சிரசில் வருத்தங்கள் சிலரை வருந்தச் செய்யும். புத்திரருக்காக ஓடியாடித் திரியவேண்டி வரும். சகோதரிகளின் முன்னேற்றத்திற்காகவும், வாழ்க்கைக்காகவும் பேச்சுவார்த்தைகள் செய்ய அலைவீர்கள். ஒரு நல்ல காரியத்திற்காக ஓடியாடித் திரிவதனால் நஷ்டமில்லை. காரியத்தை நிறைவேற்றுவதில் அவதானமாக இருங்கள். தூரதேசச் செய்திகளால் நன்மை அடைவீர்கள்.

மிதுனம்: உங்களுக்குத் தொழில் ஸ்தானத்தில் ஏட்டிக்குப் போட்டியான சம்பவங்கள் ஏற்படும். எந்த விஷயங்களில் ஈடுபட்டாலும் காரியம் கைகூடவில்லை என்று அலுத்துக் கொள்ளாதீர்கள். வருங்காலத்தில் மெல்ல மெல்ல நற்பலன்கள் அனுகூலமாகும். சொந்தச் செலவுகளைக் கட்டுப்படுத்தி வாழுங்கள். எதிர்ப்பாலாரால் மறைமுக எதிர்ப்புக்கள் ஏற்படும். பொருளால் ஏமாற்றங்கள் சிலருக்கு வரலாம். அவதானமாக இருந்தால் நன்று. புத்திரருக்கும்; சகோதரங்களுக்கும் மாற்றங்கள் ஏற்பட இடம் உண்டு. இடமாற்றம், பிரயாணங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

கடகம்: உங்கள் முயற்சிகள் இடைக்கிடை தடைப்பட்டாலும் விடாமுயற்சி செய்து வாருங்கள். நண்பர்கள், பெரியவர்களால் நன்மைகள் கிடைக்கும். தொழில் ஸ்தானத்தில் புதிய திட்டங்களும், மாற்றங்களும் ஏற்பட்டு நன்மை ஏற்படும். கண்டபடி இடமாற்றங்கள் செய்வதைத் தவிர்த்துக்கொள்ளுங்கள். உங்கள் பேச்சுக்களால் சிலர் வெறுப்பும், கொதிப்பும் அடைந்து உங்களுக்குத் தீங்குகள் செய்ய முற்படுவார்கள். கால நேரம் அறிந்து பேச்சுக்களை விடுங்கள். எதிர்ப்பாலாரால் வேற்றுமைப்படுவர். சிலருக்கு சிறு சிறு காயங்கள், விக்கங்கள் வர இடம் உண்டு. அவதானமாக இருங்கள். பொருளில் அவதானமாக இருக்கவும். கள்வர் பயங்கள், ஏமாற்றங்கள் ஏற்படலாம்.

சிங்கம்: நீங்கள் காலநேரமறிந்து செயற்படுவதில் கண்ணாக இருங்கள். நேரம் இல்லை; நேரம் இல்லை என்று சலிப்படைந்து கொள்ளாதீர்கள். வீட்டுக் கடமைகளும் செய்யவேண்டிய பொறுப்பு உண்டல்லவா? புத்திரர்களுக்காகவும், சகோதரங்களுக்காகவும் புதிய முயற்சிகளைச் செய்வதில் முனைவீர்கள். உங்கள் வாக்குச் சாதுரியத்தால் தொழில் ஸ்தானத்தில் நன்மைகள் ஏற்படும். தாய்வழியினர் குறை குற்றம் சொல்வார்கள். கண்டபடி இடமாற்றங்கள் செய்யாதீர்கள். அதனால் பிரயோசனங்கள் இல்லை. வீண் செலவுகள் ஏற்படும். மறைமுக அவமானங்கள் ஏற்பட்டாலும் உங்கள் அமைதி, சாதுரியத்தால் அவை அடங்கிப் போகும்.

கன்னி: உங்களுக்கு எதிராகவோ, சார்பாகவோ எவராவது செயற்படுகிறார்கள் என முன்கூட்டியே செய்திகள் வரும். அடிக்கடி உணர்ச்சி வசப்பட்டு கோபித்துக் கொள்வதினால் அடிக்கடி மறதிகள் ஏற்பட்டபடி இருக்கும் காலமறிந்து காரியமாற்றும் திறமையுள்ள நீங்கள் பல சந்தர்ப்பங்களை உருவாக்கிக் கொள்வதில் கெட்டிக்காரர். தொழில் ஸ்தானத்தில் நல்லதும் கெட்டதும் நடக்கச் செய்யும். குடும்பத்தில் கருத்து வேற்றுமைப்படாது இருக்க முயலுங்கள். நாம் கஷ்டப்படுவதெல்லாம் யாருக்கு எனச் சிந்தித்துச் செயலாற்றுங்கள். குடும்பத்தின் கருத்து வேற்றுமையை சாதுரியமாகச் சமாளித்துச் செயற்படுங்கள். இடமாற்றமோ, பிரயாணங்களையோ தவிர்த்துக்கொள்ளுங்கள். அதனால் வீண் சிரமங்களிலிருந்து தப்பிக்கொள்வீர்கள்.

விருச்சிகம்: உங்களைக் கண்டு உலகமே பயப்படும் என்ற எண்ணம் வேண்டாம். நீங்கள் இருக்கும் இடங்கள் கலகலப்பாக இருக்குமாமே? என்ன இருந்தாலும் நீங்கள் நிதானமாகச் செயற்பட்டால் நல்ல பலன்கள் விளையும். குடும்பத்தில் கலகலப்பு இருக்கும். எதிர்ப்பாலாரால் கலக்கம்,

(X ஆம் பக்கம் பார்க்க)

மகாதேவா ஜோதிடம்

இதாதட சஞ்சி

சொற்சிலம்பம்

புதிர்ப் போட்டி இல. 19



சொற்சிலம்பம் இல. 19
சஞ்சீவி,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர் : .....

விலாசம் : .....

..... இங்கே வெட்டுக .....

முடிவு திகதி: 17 - 10 - 1997

இடமிருந்து வலம்

1. பாவம் செய்தோருக்கான இடம். 4. பாடல். 6. ஆனம். 7. ஒரு தானியம். 8. சகோதரிகளின் கணவன்மாரின் உறவு முறை. 11. வீடு. 12. வளையில் வாழ்வது. 13 பாவை ஓது. 14. நிகழ்ச்சி. 16. திசை. 17. சினைப்பட வருவது. 19. இணக்கம். 21. கருணை. 22. வலிமை.

மேலிருந்து கீழ்

1. பிரதி. 2. அழகி. 3. பல சேர்ந்து கரைந்தால் வருவது. 4. உறவுக்குப் பகை இதனாலும் வரும் 5. பொருளின் பெறுமதியை இப்படிக் கூறுவோம். 7. ஒரு பிரபந்தவகை. 9. பல பொருள்களை கலக்க வருவது. 10. வானர ராஜா. 11. துன்பம். 12. எங்களுடையது என்பதைக் குறிப்பது. 13. அரைவாசி. 15. வரவேண்டியது. 18. உஷ்ணம். 19. தடிமல் பிடித்தால் வரும்.

சொற்சிலம்பம் இல. 17 - விடைகள்

இடமிருந்து வலம்

1. வாசகர். 4. அகதி. 7. தபால். 8. சஞ்சரி. 9. விசுவாசம். 12. பல்லி. 14 அந்தம். 16. இரு. 17. புதன். 18. குரல்: 20. தாதி. 21. நான்கு. 23. நன்று. 24. பேதை.

மேலிருந்து கீழ்

1. வாதம். 2. சபா. 3. கல்வி. 4. அஞ்சலி. 5. கசம். 6. திரி. 8. சவால். 10. சுபம் 11. சந்ததி. 13. பரு. 14. அபுதாபி 15. தன். 16. இல். 18. குன்று. 19. ரகு. 21. நான். 22. சீதை.

பல நூற்றுக்கணக்கான வாசக நேயர்கள் இப் போட்டியில் ஆர்வத்துடன் பங்குபற்றி சரியான விடைகளை எழுதி அனுப்பியுள்ளனர். அவர்களில் அதிர்ஷ்டச் சீட்டிழுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளின் விவரம் வருமாறு:-

★ முதலாம் பரிசு:- செல்வி உஷாநந்தி சண்முகநாதன்
வளாக ஒழுங்கை,
திருநெல்வேலி.

★ இரண்டாம் பரிசு:- செ. சுதாகரன்,
நிதிக்கிளை மாவட்டச்செயலகம்,
யாழ்ப்பாணம்.

★ மூன்றாம் பரிசு:- ம. சத்தியசீலன்,
''கல்வீடு'', கல்லூரிவீதி ஆத்தியடி,
பருத்தித்துறை.

இவர்கள் மூவருக்கும், சரியான விடைகளை எழுதிய ஏனைய சகல வாசக நேயர்களுக்கும் எமது பாராட்டுக்கள்.

புதிர்ப் போட்டிக்கு விடைகளை அனுப்பும் போது கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் போட்டியின் இலக்கத்தைத் தவறாமல் குறிப்பிடவும்.

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன்/சஞ்சீவி ஊழியர்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் போட்டியில் கலந்து கொள்ள முடியாது.

முதற் பரிசு:-	ரூபா.	150. 00
இரண்டாம் பரிசு:-	ரூபா.	100. 00
மூன்றாம் பரிசு:-	ரூபா.	50. 00

★ புதிர்ப்போட்டி இலக்கம். 18 இன் முடிவுகள் அடுத்த வார சஞ்சீவியில் வெளிவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் நல்லூர் சிவநூலகம்.

கூடல் இன்றியே குழந்தை உருவாவதா? இயற்கைக்கு சவாலாகும் 'குளோனிங்'!

தொழிற்சாலைகளில் ஒரேமாதிரி — ஒரே அச்சில்— மோட்டார் சைக்கிள்களையோ, கார்களையோ, பஸ்களையோ நூற்றுக்கணக்கில் தயாரித்துத் தள்ளுவதுபோல ஆஸ்பத்திரிகளில் இருந்து ஒரே மாதிரியான — ஒரே அச்சில் — மனிதர்களைப் பிரசவித்து வெளியே தள்ளினால் எப்படியிருக்கும்?

ஒரு வேடிக்கையான கேள்வியாக இது இருந்தாலும் யதார்த்தத்தில் நிகழக்கூடிய ஓர் உண்மைதான் இவ்வாறு வினாவாக எழுப்பப்பட்டிருக்கின்றது.

பிறப்புரிமை பற்றிய மருத்துவப் பொறியியல் ஆய்வுகள் இயற்கையை விஞ்சும் வேகத்தில் வளர்ந்து, இந்த ஆபத்து எல்லையைத் தொட்டிருக்கின்றன.

ஆண்—பெண் கூடலிலே புதிய வாழ்வு ஜனிக்கின்றது. உணர்ச்சியின் விளைவு உயிராவது இயற்கையின்விந்தை.

ஆனால் கூடலின்றியே— உணர்ச்சிச் சங்கமம் இன்றியே—ஒரே அச்சில் பல உயிர்களைத் தயாரித்துத் தள்ளும் நிலைவரை மருத்துவ விஞ்ஞானம் வளர்ந்திருப்பது அதனிலும் விந்தையாகும்.

இந்த விஞ்ஞான முறைக்குத்தான் 'குளோனிங்' என்று பெயர்.

இப்படியொரு புதுமுறை மூலம் இனவிருத்தி செய்யலாமா? பாலுணர்வுக்கும் அதற்குவடிகாலாக அமையும் தாம்பத்திய உறவுக்கும், அதனால் ஏற்படும் உறவுப் பிணைப்புக்கும் சாவுமணி அடிக்கும் இம் முறையை அறிமுகப்படுத்துவதை அனுமதிக்கலாமா? இயற்கைக்கும் இறைவனுக்கும் எதிரான செய்கையன்றோ இது?— என்ற கூக்குரல்கள் உலகளாவிய ரீதியில் பெருமளவில் கிளம்பியிருக்கின்றன.

ஓர் அங்கியிடமிருந்து பெற்ற ஏதோ ஓர் அங்கத்தின் அணுவிலிருந்து —அதன் அடிப்படையை வைத்துக்கொண்டு — பாலினச் சேர்க்கையில்லாமல்—ஒரே மாதிரியான—அதே அங்கியின் வடிவொத்த — பல உயிர்களை உருவாக்குவதே 'குளோனிங்' முறையாகும். ஒரு வகையில் ஒட்டுச் செடி வளர்ப்பது போன்றதே இது.

ஆரம்பத்தில் பக்டீரியா, மற்றும் புரோட்டோசோவாக்கள் (ஒரு கல உயிர்கள்) போன்ற உயிரிகளில் இம் முறை பிரயோகிக்கப்பட்டது. அதில் வெற்றி கிட்டியதை அடுத்து ஆடு, மாடு, எலி என வளர்ந்த இம் முறை இப்போது மனிதன் வரை முன்னேறியிருக்கின்றது.

இனப்பெருக்கத்தில் 'கூடல்' அல்லது 'இனச்சேர்க்கை' என்ற விவகாரத்துக்கே சமாதி கட்டக்கூடியதாக முனைந்திருக்கும் இந்தப் பரபரப்பான ஆராய்ச்சி முறைக்கு முதலில் வித்திட்டவர்கள் ஸ்டில்மேன் என்பவரும் ஹோல் என்பவரும்தான். 1993 அக்டோபரில் இது தொடர்பான தமது ஆய்வு முடிவுகளை வெளியிட்டு உலக மக்களைத் திகைக்க வைத்தனர் அவர்கள்.

இதனையடுத்து —

''நோபல் பரிசு பெற்றவரின் விந்து வேண்டும்'' —

''உலக அழகியின் முட்டை அல்லது கரு வேண்டும்'' —

என்றெல்லாம் கேட்டு இப்பொதே முன் பதிவுகள் ஆரம்பித்து விட்டன. மறுபுறத்தில் 'ஆண்கள் இல்லாத உலகம்' 'கன்னித்தன்மை இழக்காத பெண்களின் கிரகம்' என்றெல்லாம் புத்தகங்கள் வெளியாகத் தொடங்கிவிட்டன.

'குளோனிங்' முறையின் தொடக்கம் 1799 ஆம் ஆண்டு ஆரம்பமானது என்று கூறலாம். அப்போதுதான் விலங்குகளில் செயற்கை முறையில் விந்துகளைச் சேகரித்து, இனக்கலப்புச் செய்யும் முறை தோன்றியது.

1944 ஆம் ஆண்டில் முதலில் கருவறைக்கு வெளியே கருத்தரிக்கும் முறை உருவானது.

அதன் பின்பு ஆண்களின் விந்துக்களை பதனம் செய்து நீண்ட காலம் வைத்துப் பயன்படுத்தலாம் என்பதைக் கண்டுபிடித்தனர்.

1951 இல் முதன் முதலாக ஒரு பசுவின் சினையை அப்புறப்படுத்தி வேறு ஒரு பசுவில் வைத்து சோதனை செய்தனர். 1952 இல் சேமித்து பதப்படுத்தி வைக்கப்பட்ட நாம்பன் மாட்டின் விந்தைப் பயன்படுத்தி புதிய பசுக்கன்று உருவாக்கப்பட்டது.

அதே ஆண்டில் தவளையை குளோனிங் முறைக்கு உட்படுத்தி, பல பேத்தைவால்களை உருவாக்கி, ஒரே வடிவொத்த பல தவளைகளைத் தோற்றுவிப்பதில் விஞ்ஞானிகள் வெற்றி கண்டனர்.

1978 ஆம் ஆண்டு லூயிஸ் பிரௌன் என்ற பெண்மணி, முதல் சோதனைக் குழாய்க் குழந்தைக்குத் தாயானாள்.

1990 களில் 'குளோனிங்' முறை மூலம் கால்நடைப் பிராணிகளின் பெருக்கம் இடம் பெற்றது.

1993 இற்குப் பின்னர் 'குளோனிங்' முறையில் மனிதர்களையும் பெருக்கலாம் என்று விஞ்ஞான ரீதியாக உணரப்பட்டது. என்றாலும் இதுவரை அந்த அடிப்படையில் மனித உயிர்கள் தோற்றுவிக்கப்பட்டதான சான்றுகள் ஏதுமில்லை.

என்றாலும் யுத்த தேவைகள் கருதி பலமுள்ள படைகளைத் தோற்றுவிக்கும் நோக்குடனேயோ அல்லது கைத்தொழில் புரட்சி போன்ற சர்வதேச மட்டத்திலான புரட்சிகளை வழிநடத்தும் திட்டத்துடனேயோ அல்லது இது போன்ற பிற காரணங்களுக்காகவோ விஞ்ஞான வளர்ச்சி கண்ட ஒரு நாடு இத்தகைய அசாதாரண வழிமுறையை நாடி மனித உயிர்ப்பெருக்கம் ஒன்றை மேற்கொண்டால் என்ன செய்வது என்ற அச்சம் சர்வதேச ரீதியில் இன்று ஏற்பட்டிருக்கின்றது.

தாயின் கருப்பைக்குள் ஒரு கருவில் இருந்து தோன்றிய — ஒத்த — இரட்டையர்கள் கூட உருவத்தில் ஒத்திருந்தாலும் மனத்தளவில் வேறுபட்டே காணப்படுகின்றார்கள். எனவே 'குளோனிங்' முறையில் ஒரே தோற்றமுடைய பலர் தோற்றுவிக்கப்பட்டாலும் — அவர்கள் உருவத்தில் ஒற்றுமை உடையவர்களாகக் காணப்பட்டாலும் — குணங்களில் மாறுபட்டே இருப்பார்கள்.

இப்படி உருவாக்கப்படக் கூடிய சந்ததியைச் சேர்ந்தோர் இனவிருத்தி செய்யக் கூடியவர்களாக இருப்பார்களா என்ற சந்தேகமும் இப்போது கிளப்பப்பட்டிருக்கின்றது.

என்றாலும்—

இத்தகைய ஒரே அச்சு முறையில் பல மனித உயிர்களைத் தோற்றுவித்து விட்டு, அந்த உயிர்களைப் பயன்படுத்தி, தற்போது செயலிழந்து மாற்று அவயவ சிகிச்சைக்காகக் காத்திருப்பவர்களுக்கு அவயவங்களைப் பெற்றுக்கொடுக்க முடியும் என்றும் ஓர் ஆலோசனை தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

சரி, இந்த 'குளோனிங்' முறையில் உண்மையாக நடப்பது என்ன?

- பிரியா -

அதை அறிவதற்கு' முதலில் —

பெற்றோரின் இயல்புகள் எப்படி பிள்ளைகளுக்கு கடத்தப்படுகின்றன என்பதை அறியவேண்டும்.

உயிரினம் ஒன்றின் உயிர் கொண்ட மிகச் சிறிய அலகை கலம் (Cell) என்று கூறுவார்கள். இது புரதத்தையும், கொழுப்பையும் வேறு பல சிக்கலான இரசாயனப் பொருள்களையும் கொண்ட கூட்டான — சிக்கலான — மிக நுண்ணிய—கட்டமைப்பு ஆகுகின்றது.

கலங்களின் மையப் பகுதியில் கரு (Nucleus) காணப்படும். கருவிலே நிறமூர்த்தங்கள் (Chromosomes) காணப்படுகின்றன. இந்த நிறமூர்த்தங்களிலேயே தான் பரம்பரை அலகுகள் (Genes) பொதித்துள்ளன.

இந்தப் பரம்பரை அலகுகளின்தான் அந்த உயிரினத்தின் தன்மைகள் அனைத்தும் நுட்பமாகப் பதியப்பட்டிருக்கின்றன.

பரம்பரை அலகுகளில் DNA எனப்படும் இரட்டையான — பிணைக்கப்பட்ட — சுருளாக முறுக்கப்பட்ட — நாடாக்கள் உள்ளன. இவையே அந்த உயிரினத்தின் வெவ்வேறு இயல்புகளைத் தீர்மானிக்கும் சக்தி கொண்டவை.

வழக்கமாக உடல் 'கலங்களில் இரட்டையாகக் காணப்படும் இந்த நாடாக்கள் அந்த உயிரியின் ஆணின் விந்தில் தனியனாகவும், பெண்ணின் முட்டையில் தனியனாகவும் இருக்கும்.

கூடலின் போது ஆண் விந்தும், பெண் முட்டையும் இணைந்து கரு உண்டாகும் போது இந்தத் தனியான DNA சங்கிலிகள் இரட்டையாக இணைந்து சாதாரண

(XI ஆம் பக்கம் பார்க்க)

ஒற்றைச் செருப்பை காசாக்கிய பெரியவர்

காசி இந்துப் பல்கலைக்கழகத்தைத் தோற்றுவித்தவர் மதன்மோகன் மாளவியா.

பல்கலைக்கழகத்தை நிர்மாணிக்க அவர் முயற்சி மேற்கொண்டிருந்த சமயம்... எத்தனையோ சிக்கல்கள், எதிர்பாராத இடர்ப்பாடுகள்!

இந்து பல்கலைக்கழகத்தை நிர்மாணித்தே தீருவது என உறுதியோடு செயற்பட்டார் மதன் மோகன் மாளவியா. அந்தச் சமயம் மாளவியாவுக்குப் பண நெருக்கடியும் ஏற்பட்டது. மாளவியா தளர்ந்து விடவில்லை. ஊர் ஊராகச் சென்று பல செல்வந்தர்களையும், வணிகர்களையும் சந்தித்து பல்கலைக்கழகம் கட்ட நிதி திரட்டினார். நிதி வசூல் செய்வதற்காக அவர்—இந்து அல்லாது — ஹைதராபாத் நவாப்பிடமும் சென்றார்.

''என்ன தைரியம் இருந்தால் இந்துப் பல்கலைக்கழகம் கட்டுவதற்கு என்னிடமே வந்து நிதி கேட்பாய்'' என்று கண்கள் சிவக்க உறுமிய நவாப், தான் அணிந்திருந்த செருப்பைக் கழற்றி மதன்மோகன் மாளவியா மீது வீசினார்.

பதில் பேசாமல் நவாப்பின் அரண்மனையை விட்டு வெளியேறிய மாளவியா, நேராக கடை வீதிக்கு வந்தார். நவாப் தன் மீது வீசிய செருப்பை பொதுமக்களிடம் ஏலம் விட ஆரம்பித்தார். நவாப்பின் செருப்பு என்பதால் போட்டி போட்டுக் கொண்டு ஒவ்வொருவரும் விலை கேட்டார்கள்.

அதற்குள் இந்தச் செய்தி நவாப்புக்குப் போக... அவருக்குப் புதிதாக ஒரு சங்கடம் பிறந்தது, 'தன்னுடைய செருப்பு சொற்ப விலைக்கு ஏலம் போனால் அது தனக்குத்தானே கேவலம்...' என்று நினைத்தார் நவாப். உடனே தன் சேவகன் ஒருவனிடம் பெரிய பணமூடை ஒன்றைக் கொடுத்து ''நீ போய் என் செருப்பை பெரிய தொகைக்கு ஏலம் எடு'' என்று அனுப்பினார்.

இப்படி, நவாப்பின் ஒற்றைச் செருப்பை அவருடைய சேவகன் மூலம் ஒரு பெரிய தொகைக்கு நவாப்புக்கே ஏலத்தில் விற்பனை செய்தார் மாளவியா. அந்தப் பணத்தைக் காசி இந்துப் பல்கலைக்கழகம் கட்டப் பயன்படுத்திக் கொண்டார்.

சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்துவதில்தான் அனைத்தும் தங்கியுள்ளது. ★

நோயை விரட்டுவதற்கு வர்ம சிகிச்சை முறை!

வர்மக்கலை, சித்தர்கள் அளித்த தெய்வீகக்கலையாகும்.

போரிக்காலத்தில் பகைவரின் உயிரைப்போக்கவும் தம் உயிரைக் காக்கவும் இக்கலையை நம் முன்னோர் பயன்படுத்தி உள்ளார்கள்.

வர்மக்கலையில் இருந்து தோன்றியவையே அக்குபிரஷ்ஷர், அக்குபங்சர் முதலிய முறைகளாகும். காதுகுத்தல், மூக்கு குத்தல், காலில் — தண்டை, கையில் — காப்பு, உருத்திராட்ச, மாலை அரைஞாண்கயிறு, கால்விரலில் — மெட்டி அணிதல், நெற்றியில் விபூதி, குங்குமம் திருமண் இடுதல், காலில்மரக் கட்டை செருப்பு அணிதல் முதலியவையும் இந்த வழி வந்தவையே.

அகத்தியர், போகர், தேரையர் போன்ற சித்தர்களால் தோன்றிய சித்த சாலைகளில்தான் நரம்பு கோளாறுகளுக்கு சிகிச்சை அளிக்கும் அரிய வர்ம சிகிச்சையும் பேணப்பட்டது. இச்சிகிச்சை மூலம் நரம்பு சம்பந்தப்பட்ட நோய்களை மட்டுமல்லசாதாரண ஜலதோஷம் முதல் ஆபத்தான புற்றுநோய்வரை குணப்படுத்தமுடியும்.

பெரும்பாலான நோய்களுக்குக் காரணம் நரம்புக் கோளாறுகளே ஆகும். நம் உடம்பில் நரம்பு மண்டலத்தில் 206 வர்மப்புள்ளிகள் உள்ளன. இவையே சக்தி மையங்கள் ஆகும். இந்த வர்மப்புள்ளிகளை ஒரு வர்மானியனே அறியமுடியும். உடம்பு முழுவதும் ஆதிக்கம் செய்யும் நரம்புகளின சக்தி வர்மத்தனம் எனப்படும்.

பாதிக்கப்பட்ட வர்மப்புள்ளிகளைக் குறிப்பிட்ட இடத்தில் குறிப்பிட்ட நேர அளவில் குறிப்பிட்ட அளவில் அழுத்தி விடுவதன் மூலமும்— உடம்பை மசாஜ் செய்வதன் மூலமும் — இயங்கச் செய்து, நோய்களைக் குணப்படுத்துகின்றோம்.

இச் சிகிச்சை அளிக்கும் போது நோயாளிகளின் மனம் ஒரு நிலையில் இருக்க வேண்டும் சக்தித்தடையை நீக்க அழுத்தம் கொடுக்கும் போது நோயாளியின் கவனம் முழுவதும் அழுத்தம் கொடுக்கப்படும் வர்மப்புள்ளியின்மீதே இருக்க வேண்டும். நோயாளியின் உணவுக் கட்டுப்பாட்டையும் பின்பற்ற வேண்டியது மிகவும் அவசியமாகும்.

தொகுப்பு:-

- க. கனகராசா -

முயன்று பாருங்கள்

(VII ஆம் பக்கப் புதிருக்கு விடை)

11	24	7	20	3
4	12	25	8	16
17	5	13	21	9
10	18	1	14	22
23	6	19	2	15

பயன்தரும்...

(III ஆம் பக்கத் தொடர்)

வற்றில் ஏற்படும் கோளாறுகளை குணப்படுத்தும்; மலக்குடலில் வாசம் செய்யும் கிருமிகளைக் கொன்று வெளியேற்றும்; ஜீரண உறுப்புக்களுக்கு நல்ல பலத்தைக் கொடுத்து ஜீரணசக்தியை உண்டுபண்ணும்; மங்கிய கண்பார்வையைத் தெளிவடையச் செய்யும்; பற்களில் ஏற்படும் பல வித கோளாறுகளைப் போக்கி விடும்; சிறுநீர்ப்பையில் ஏற்படும் கல்லடைப்பைக் குணப்படுத்தும்; மலச்சிக்கலையும், காலில் ஏற்படும் பித்த வெடிப்பையும் போக்கும்; மூளைக்கும் பலம் தரும்; நல்ல அறிவை விருத்தியாக்கும்; தொற்று நோய்க் கிருமிகளை இரத்தத்தில் சேர விடாமல் பாதுகாக்கும்.

தினசரி, பப்பாசிப்பழம் சாப்பிட தினசரி ஒரு பப்பாசிப்பழம் வாங்க வேண்டியதில்லை. நன்றாகப் பழுத்த ஒரு பழத்தை வாங்கி வந்து, நீளமாகக் கீறி, அன்றைக்குத் தேவையான அளவு பழத்தை துண்டாக வெட்டி எடுத்துக் கொண்டு, மெல்லிய சுத்தமான வெள்ளைத் துணியை சுத்தமான நீரில் நனைத்து நன்றாக மடித்து எஞ்சிய பழத்தை அப்படியே சுருட்டி வைத்துவிட வேண்டும். மறுநாள் தேவையான அளவு வெட்டி எடுத்துக்கொண்டு மறுபடியும் ஈரத் துணியால் சுற்றி பாதுகாப்பான இடத்தில் வைத்துவிட வேண்டும். இந்த விதமாக ஒரு பழத்தைப் பல நாள்கள் பயன்படுத்தலாம். [illegible] ★

-நன்றி:-கல்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிதையும் கவிதை வடிவம்

தென்னிந்தியாவில் வெளியாகும் ''ஓம் சக்தி'' என்ற சஞ்சிகையில் இரா.ரகுபதி என்பவர் எழுதிய விமர்சனக் கட்டுரை இது. நவீன இலக்கியக் களத்தில் சர்வதேச ரீதியாக அங்கீகாரம் பெற்ற இலக்கிய வடிவம் புதுக்கவிதை. அதன் தன்மை குறித்தும் தற்காலப் போக்கில் அதன் நிலை குறித்தும் இக் கட்டுரையாளர் விமர்சிக்கிறார்.

இக் கட்டுரையில் கட்டுரையாளரின் தாக்குதலுக்கு இலக்காகியுள்ள விக்கிரமாதித்யன், கல்யாண்ஜி, எம். யுவன், பழமலய் போன்றோரும் நவீன கவிதைக் களத்தில் தமக்கெனத் தடங்களைப் பதித்தவர்களாக இலக்கிய உலகில் அடையாளம் காணப் பட்டுள்ளனர்.

அண்மைக் காலமாக எமது இளைய தலைமுறையினரிடையே கவிதைபற்றிய ஆர்வம் பெருகியே வருகிறது. 'சஞ்சீவி' கவிதைப் பகுதிக்கு வந்து குவியும் ஆக்கங்கள் அதற்குச்சான்று பகர்கின்றன. இக் கட்டத்தில் ''நல்ல கவிதை'' பற்றிய விமர்சன ரீதியான கருத்துக்கள் அவசியமாகின்றன. எனவே இக் கட்டுரை தொடர்பாகவும், நவீன கவிதை வடிவம் தொடர்பாகவும் ஆரோக்கியமான விமர்சனக் கருத்துக்கள் வாசகர்களிடம் இருந்து எதிர்பார்க்கப்படுகின்றன. சுருக்கமானதும், தரமானதுமான விமர்சனங்கள் பிரசுரிக்கப் படும். (ஆ-ர்)

தொல்காப்பியம், யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை போன்ற நூல்கள் கவிதை உருவத்தின் இலக்கணத்தை எடுத்துக் காட்டின. அதனைப் பின்பற்றிய சங்கப் புலவர்கள், சங்க மருவிய புலவர்கள், இடைக்காலப் புலவர்கள் தாங்கள் எடுத்துக்கொண்ட உள்ளடக்கப் பொருள்களுக்கு ஏற்ற உருவத்தை எடுத்துக் கொண்டு, சிற்பி சிலையைச் செதுக்குவதைப் போல தங்கள் படைப்புக்களை உருவாக்கினர். மகாகவி பாரதி நவகவிதையென்று புதுக்கவிதைக்கு வித்திட்டார்.

ந. பிச்சமூர்த்தி, சி. சு. செல்லப்பா இவர்களைத் தொடர்ந்து கவிஞர்கள் அப்துல் ரகுமான், கிற்பி, மீரா, மு மேத்தா, இன்குலாப், சரோடு தமிழன்பன், பரிணாமன் உட்பட மேலும் பலர் புதுக்கவிதையில் தங்கள் தடயங்களை உருவாக்கினர். இவர்கள் படைப்பில் உருவ அமைதி இருந்தது. அது கவிதை தரும் மெய்ப்பாட்டு உணர்வுகளைத் தந்தது. ஆனால் இன்று இதழ்களில் வெளிவரும் பல கவிதைகளின் கவிதையின் உருவம் சிதைந்து காணப்படுகிறது. கவிதைகளுக்குரிய அடிப்படை மூலங்களைக் கூட இழந்துவிட்ட நிலையைக் காண முடிகிறது. இத்தகைய உருவ அமைதிச் சிதைவைப் பற்றிய ஒரு சிறிய ஆய்வுக் கட்டுரையே இது.

ஒவ்வொன்றிற்கும் ஒரு வடிவம் உண்டு; ஓர் அழகு உண்டு. அது போல் கவிதைக்கு யாப்புக் கட்டுக்கள் தளர்ந்தாலும் ஓர் இனிமை அதற்கென உண்டு. வசனகவிதையென்றாலும் சரி, ஹைக்கூ போன்ற குறுங்கவிதைகள் என்றாலும் சரி அதனுள் ஓசை இனிமை பொதிந்திருக்கும். இயல்பாகவே உருவம் அமைந்து காணப்படும். ஆனால் இன்று சிதைந்து வரும் கவிதை வடிவத்தில் உரைநடைக்கென இருக்கும் ஒரு கட்டமைப்பைக் கூட காணமுடிவதில்லை.

''ஜம்பமாக சொல்லிக் கொண்டால் சிகரங்களை நோக்கிய பயணம். சொல்லப் போனால் அவன் சுபாவத்திற்கு சமவெளிதான் சரியான பொருத்தம் ... காட்ரேஜ் பீரோ, குர்ல—ஆன் மெத்தை, அயன்பாக்ஸ், கேஸ் அடுப்புச் சிலிண்டர், ஃப்ரிட்ஜ், கிறைண்டர், குக்கர், மிக்ஸி, பஜாஜ் ஸ்கூட்டர், டிக் ஷெஃப், பிள்ளைகளுக்கு கான்வெண்ட் படிப்பு, மியூஸிக்கல் வால் கிளாக், கலர் டி.வி, டேப்ரிக்காடர், சோபாசெட், எதுவும் குறைச்சலில்லை, ஏகமாய் வசதி; எல்லாம் லக்ஷ்மி கடாக்ஷம், சுபபோகம்தான். புறநகர்ப் பகுதியில் போகன்வில்லா பங்களாவில் புஸ்தகங்கள் பத்திரிகைகள் சிலோன் ரேடியோவிற்கு நடுவில்தான் எப்போதும் அவன்''—1.

''தூங்கும் போது இன்னார் சாயலில் இருக்கிறேன் என்கிறார்கள், உட்கார்கிற விதம் அவரைப் போல என்று இன்னொருவர்; நடக்கும் போது பண்டாரவிளை சின்ன நாடான் போல இருக்கிறேன் என்று சொன்னவர் எலும்பு முறிவுக்குக் கட்டுப் போட்டவராக இருக்க வேண்டும்; ஒளியற்ற கண்களும் மனம் நிறைந்த சிரிப்பும் தன்னுடைய தாயாதி ஒருவரைப் போல இருக்கிறதென்று சொல்பவர் என் உறவினர் கூட அல்ல''—2.

''அகழ்ந்து கண்டெடுத்த நகரைப் பார்க்கப் போனேன். நூற்றாண்டுகள் கழித்து வரப்போகும் ஒருவனுக்காகக் காலத்தில் காத்திருந்தது. அது புகைந்த கட்டடங்களோடு புதைந்த கனவுகளில் ஒன்றென நடந்து சென்றேன்''—3.

''ஒப்புரவாக இருந்த நிலம். பெரிய அளவில் எடுத்திருக்கிறார்கள். இந்தப் பக்கத்திலிருந்தும், அந்தப் பக்கத்திலிருந்தும் மண்ணை வெட்டிக் கொண்டு போன போது மழை இல்லாமல் இருந்திருக்கும் தண்ணீர் தேங்கி நிற்கிறது; என்னைப் போலத்தானே! இரட்டை ஏரி என்பதாக இல்லை. ஏராளமான குளங்களாக ஆள் கணக்கில் ஆழங்கள் இருக்கும். நீல வானமும் வெள்ளை மேகமும் நிலத்துக்கு அடியில் கிழிசல்களாக என்ன வெல்லாம் முடிகிறது கண்களால்!''—4.

மேலே கண்ட பகுதிகளைப் பிரித்துப்போட்டு 1996 — 97 — இந்தியா ருடே இலக்கிய மலரில் முறையே 1. விக்ரமாதித்யன், 2. கல்யாண்ஜி, 3. எம் யுவன், 4. பழமலய் என்பவர்கள் எழுதிய கவிதைகள் என்று வெளியிட்டிருக்கிறார்கள். கவிதைக்குரிய உணர்ச்சி துளியேனும் இன்றி பிளாக்கணம் வைப்பது போன்ற கருத்துக்களை உள்ளடக்கமாகக் கொண்டவை இவை.

உரைநடை வடிவத்தில் அமைந்துள்ள இப்பகுதிகளை, கவிதை வடிவத்தில் இது உள்ளதற்கான அடையாளத்தில் இப்படி வெளியிட்டுள்ளார்கள்.

'ஜம்பமாகச் சொல்லிக் கொண்டான்'
சிகரங்களை நோக்கிய பயணம்
சொல்லப் போனால் அவன்
சுபாவத்திற்கு
சமவெளிதான் சரியான பொருத்தம்
.....
.....
காட்ரேஜ் பீரோ குர்ல ஆன் மெத்தை
அயர்ன் பாக்ஸ் கேஸ் அடுப்பு
சிலிண்டர் ஃபிரிட்ஜ்
கிரைண்டர் குக்கர் மிக்ஸி
பஜாஜ் ஸ்கூட்டர், டிக் ஷெஃப்
பிள்ளைகளுக்கு கான்வெண்ட் படிப்பு
மியூசிக்கல் வால் கிளாக்
கலர்டிவி,டேப்ரிக்காடர்,சோபாசெட்
எதுவும் குறைச்சலில்லை.
ஏகமாய் வசதி
எல்லாம் லக்ஷ்மி கடாக்ஷம்
சுப போகந்தான்.
புறநகர்ப் பகுதியில் போகன்வில்லா
பங்களாவில்
புஸ்தகங்கள் பத்திரிகைகள்
சிலோன் ரேடியோவுக்கு நடுவில்தான்
எப்போதும் அவன்''

கவிதை என்ற வடிவத்தில் வெளியிடப்பட்டுள்ள இதில், ''சொல்லப் போனால் ...சமவெளியில்...பஜாஜ் ... பிள்ளைகளுக்கு ... ஏகமாய் எல்லாம் என்று'' 'உரைநடையில் மிகச்சாதாரணமாகக் காணப்படும் வார்த்தைகள், உள்ளடக்கம், 'உணர்ச்சியற்ற ஒரு செய்திதான் இதில் இடம் பெற்றுள்ளன. மேலும் அளவுக்கு அதிகமான ஆங்கிலக்கலப்பு. இதை எப்படிக் கவிதை என்று ஏற்றுக் கொள்வது? எடுத்துக்காட்டாக.

நல்ல செய்தி வேண்டுமா? — ப்ளீஸ்
இதைப் படிக்காதீர்கள் —
தீர்மானம்செய்து கொள்ளும்நேரம்
என்பதை விட
தீர்மானமாய் இருக்க வேண்டிய
நேரம்
இது
ஆசுவாசத்தை விட ஆபத்துஅதிகம்
நெருக்கடியின் பிடியில் அரசு
பல வருடங்களாய் காணாத
உணவுப் பற்றாக்குறை
ஓங்கி வரும் கயாட்சி கோரிக்கை
வன்முறையில் முடியலாம், சரியான
வழி தெரிந்தாக வேண்டிய
தருணம் இது

இது 1997—ஆம் ஆண்டு ''ஆபத்துக்களும் ஆசுவாசங்களும்'' என்ற தலைப்பில் ஜனவரி (6 — 20) இதழில் இந்தியா ருடே வெளியிட்டுள்ள உரைநடை கட்டுரையின் முதல் பகுதி. இப்பகுதியை மேலே கண்டவாறு பிரித்துப் போட்டால் ஒரு கவிதை வடிவம் வந்துவிடுகிறது. இக்கட்டுரையின் தொடக்கத்தில் காட்டப் பட்டுள்ள பத்திகளை விட இது கருத்து வகையில் அவைகளை விட கூர்மை யாகவே இருக்கிறது.

ஆகவே, ''இந்தியா ருடே'' ''ஆனந்தவிகடன்'', (இந்தியா ருடே இலக்கிய மலரில் வெளிவந்த விக்ரமாதித்யனின் அதேகவிதை 26. 1 97 ஆனந்த விகடனிலும் வந்துள்ளது). புதிய பார்வை, குமுதம் போன்ற முன்னணி ஏடுகள் கவிதைகள் என்ற வடிவத்தில் எழுதப்படும் உரைநடைப் பத்திகளை வெளியிட்டு வருகின்றன.

மலர் என்றால் சிறிதேனும் மணம் இருக்க வேண்டும். மணமில்லாக் காட்டுப் பூக்களில் கூட அழகு மிளிரும். காகிதப் பூக்களிலும் கூட வடிவத்தில் ஒருமை காணலாம். ஆனால் கவிதை என்ற வடிவத்தில் வெளியிடப்படும் இவ்வேடுகளில் வரும் கவிதைகளில், கவிதைக்குரிய சிறிய நவீனம் கூடத் தென்படுவதில்லை.

கவிதையின் அடிப்படைப் பண்புகள் உணர்ச்சி, கற்பனை. கருத்து வடிவம் இதுபோன்ற கவிதைகளில் வெளியிடப்படும் உணர்ச்சியும், கற்பனையும் கருத்தும் ஒரு சாதாரண வாசகனுக்குப் பிடிபட்டு விடுமா என்பது ஐயமே.

சொற்களைக் கையாளுவதில், இருண்மை, எண்ணங்களில் வெறுமை, வறட்சி, வடிவத்தில் சிதைவு இவைதான் — தமிழில் புதுமை செய்கிறேன் என்று எழுதுகின்ற புதுக்கவிதைக் காரர்களின் கவிதைகளில் காணப்படுகிறது. வடிவச் சிதைவு என்பது இலக்கணச் சிதைவிலிருந்து தொடங்கி விட்டாலும் சில அடிப்படைப் பண்புகள் கூட இல்லாமல் கவிதை சிதைக்கப் படுவது என்பது, கைகால்கள், கண்கள், மூக்கு வாய் மாறிப் போய்ப் பிறக்கும் அகோரக் குழந்தைகள் போன்ற நிலையைத்தான் காட்டுகிறது.

நாளேடுகள் வெளியிடும் ஒரே வரி மின்னல் கவிதைகளில் சொத்தைகள் போக எவற்றில் கவிதைகளின் சிறப்பை உணர முடிகிறது. ஆனால் தங்கள் பெயர்களைக் குறிப்பிடும் போதுகூட புதுமை செய்கிறேன் என்ற நிலையில், ''றஞ்சனி'' (1997 — ஜனவரி, இந்தியா ருடே 6.20 இதழ், பக். 85) என்று குறிப்பிட்டுக் கொள்ளும் கவிதையாளர்கள் / கவிதாயினிகளால் தமிழில் புதுமை மலர்ந்து விடப்போவதில்லை.

ஆனால் இது போன்று எழுதுகின்றவர்களைத் தேடிப் பிடித்து 'இலக்கிய மலர்கள்' என்ற பெயரில் இந்தியா ருடே போன்ற இதழ்கள் வெளியிடுவதை இலக்கிய உலகின் கவனத்திற்குக் கொண்டு வர வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

சிந்தனைப் பிறழ்வுகளால் படைக்கப்பட்ட இந்த வடிவம், சிதைந்த கவிதைகள் கால வெள்ளத்தில் அடித்துச் செல்லப்படும் என்று நம்பினாலும், 'நல்ல படைப்புகள் வர வேண்டும். — படைக்கப்பட வேண்டும்' என்ற உந்துதலை தமிழ் இலக்கிய உலகம் மேற்கொள்ள வேண்டிய கட்டாயத்தை, இப்படைப்புகள் உணர்த்தி இருக்கின்றன என்பதில் ஐயமேதுமில்லை. ★

இந்த வார இராசி...

(VIII ஆம் பக்கத் தொடர்ச்சி)

காயம் என்பன ஏற்படும். தொழில்ஸ்தானத்தில் புகழும், முன்னேற்றமும், புதியதீட்டங்களும் உருவாகும். சகோதரங்களின் முன்னேற்றங்களுக்கு உதவிகள் செய்வீர்கள். வாகன இழப்பு அல்லது செலவுகள் ஏற்படும் பலன்கள் உண்டு. புத்திரர்களால் கலக்கம் இருந்தாலும் ஓரளவு நன்மைகளும் ஏற்படும். கேட்டை நட்சத்திரகாரர் அவதானமாக இருத்தல் வேண்டும்.

தனுசு: உங்களுக்கு சோதனைகள் ஏற்பட்டால் ஒழிய ஊக்கங்கள் எதிலும் வரமாட்டாது. சகோதரங்கள் விண்பழி சுமத்துவார்கள். சொந்தமென்ன? பந்தமென்ன? உங்களுக்கு கஷ்டங்கள் வரும் பொழுது வராதவர்கள் காலம் கடந்து உதவி செய்வதனால் உங்களுக்கு அதிக நன்மைகள் இல்லைத்தானே? தொழில் ஸ்தானத்தில் போட்டிகள் வரலாம். மேலதிகாரிகள் உதவிகள் செய்வார்கள். குடும்பத்தில் சமாதானநிலையும், கலகலப்பும் ஏற்படும். புத்திரர்களுக்கு நன்மைகள் ஏற்படும். இடமாற்றம் செய்ய வேண்டாம்.

மகரம்: உங்களை மீறிய யோசனை, பெரிய மனுஷன் நான் என்ற எண்ணம், மற்றவர்களின் விஷயங்கள் எல்லாவற்றையும் உங்கள் வேலை மாதிரி எண்ணுகின்ற நினைப்பு இவ்வளவும் உங்களுக்கு உண்டு. அடிக்கடி கோபிப்பதனால் எந்தவிதமான நன்மையும் இல்லை. தொழில் ஸ்தானத்தில் அடிக்கடி சலிப்பு, களைப்பு ஏற்படும் நிலை உண்டு. எவரையும் எதிர்க்கும் மனோபாவம் ஏற்படும். நன்மை, தீமை கலந்த இவ்வுலகில் சமாளித்து வாழ்வதுதான் கெட்டித்தனம். பொருளால் வேதனையும் இடமாற்றங்களும் ஏற்படும். குடும்பத்தில் சிலருக்கு நன்மையான காரியங்கள் நிறைவேறும். திருவோணம் நட்சத்திரகாரர் இடமாற்றங்கள் செய்யும் பொழுது அவதானமாக இருக்கவும்.

கும்பம்: உங்களுக்கு எதிர்பாலாருடன் போட்டிகள் ஏற்படும். எதையும் தாங்கும் இதயம் உள்ள நீங்கள் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும். உடல் நிலையில் கண், கை, கால் தாக்கங்கள் ஏற்படலாம். வாரிற்றில் நோ சிலருக்கு வரலாம். ஏழரையின் தாக்கம் இருப்பதனால் பொருளில் அவதானமாக இருக்கவும். தொழில் ஸ்தானத்தில் மாற்றங்கள் வரும். நன்மை, தீமை கலந்த பலன் கொடுக்கும். தேவையற்ற பிரயாணங்களைத் தவிர்த்துக் கொள்ளவும். சகோதரர்கள் இனங்களிடம் இருந்து காத்திரமான கருத்துக்கள் வரும். சனீஸ்வரனுக்கு பிரீதி செய்யவும். அம்மனைவேண்டுதல்செய்வதில் தவறாது இருக்கவும். கொடுக்கல் — வாங்கலில் வீண் பழி வர இடம் உண்டு. எனவே கவனமாக இருக்கவும்.

மீனம்: உங்களுக்கு ஏட்டிக்குப் போட்டியான காலமாகும். ஏழரைச் சனீஸ்வரனின் தாக்கம் இருக்கின்றது. அவதானமாகச் செயற்படவும். தொழில் ஸ்தானத்தில் பொருள் விஷயத்தில் அவதானமாக இருக்கவும். அடிக்கடி மறதி வரும். அலைச்சலும் உண்டு. நெருங்கிய சொந்தக்காரர் வீண் பழி சுமத்துவர். இடமாற்றங்கள் சகஜமாகும். புத்திரருக்காக பொருட் செலவுகள் அதிகரிக்கும். எதிர்ப்பாலாரால் அடிக்கடி கலகங்கள் வர இடம் உண்டு ஓடிஓடித் தேடினாலும், வீடுவந்துசேராத நிலைதான். ஆயினும் தெய்வவழிபாடும் சனீஸ்வரன் பிரீதியும் எழைகளுக்குத் தானதர்மமும் செய்துவரவும். அதனால் நன்மைகள் ஏற்படும்.

துலாம்: என்ன அதிகம் அடிக்கடி யோசித்துக்கொண்டிருக்கிறீர்களாம்? கலகம் பிறந்து நியாயம் பிறக்கும் எனச் சொல்லுகிறார்களே! கலகம் பிறந்தும் நியாயத்தை நான் காணவில்லை எனக் கவலைப்படாதீர்கள். நியாயப்படி நடக்கும் மனிதர்கள் குறைந்த இடத்தில் நீதி நியாயத்தை அதிகம் எதிர்பார்க்க முடியாதுதானே? ஒரு பகுதி வெளிச்சம், மறுபகுதி இருட்டுத்தானே? இவ்வுலகில் சந்தர்ப்பவாதிகளால் சரித்திரங்களை மாற்றிவிட முடியாதல்லவா? தொழில் ஸ்தானத்தில் நியாயம் கேட்டு மனஸ்தாபப்படாதீர்கள். குடும்பத்தில் கலகலப்பு, சகோதரர்களுடன் வாக்குக்கலகம், வீடுமனை வாகனச் சிறப்பு, மறைமுக எதிரிகளினால் உங்களுக்கு நன்மையான பலாபலன்கள் ஏற்பட இடம் உண்டு. தந்தை வழியினருக்கு அல்லது தந்தைக்கோ உடல்நிலை பாதிப்பு கொடுக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜாலியன்வாலா பாக்கில்

கால் பதிக்கும் மகாராணி!

பிரிட்டிஷ் மகாராணி எலிஸபெத்தும் கணவர் எடின்பரோ கோமகனும் நாளை முதல் ஒரு வார காலத்துக்கு இந்தியாவில் விஜயம் மேற்கொள்கின்றனர். பாகிஸ்தான் விஜயத்தை முடித்துக் கொண்டு இந்தியா செல்லும் அவர்கள் அங்கு அமிர்தசரஸ், கொச்சி, சென்னை ஆகிய நகரங்களுக்கு விஜயம் செய்யவுள்ளனர்.

கடந்த ஒகஸ்டில் மகாராணியின் இந்த உத்தேச விஜயம் பற்றிய அறிவிப்பு வெளியானதுமே அது சர்ச்சையைக் கிளப்பிவிட்டிருந்தது. அமிர்தசரஸில் சீக்கியர்களின் சரித்திரப் புகழ் பெற்ற பொற்கோவிலுக்குச் செல்லவுள்ள மகாராணி அதற்கு அருகே உள்ள ஜாலியன்வாலா பாக்கை (Jallianwala Bagh) எட்டிப்பார்ப்பாரா?

அங்கேதான் சர்ச்சையின் ஆரம்பமே இருந்தது.

சூரியன் அஸ்தமிக்காத பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியத்தின் வரலாற்றில் ஒரு கறுப்புப் புள்ளியாகவும், இந்தியச் சுதந்திரப் போரில் சரித்திர நிகழ்வாகியும் விட்ட ஜாலியன் வாலா பாக் இப்போது ஒரு நினைவுச்சின்னம்.

பூங்காவுக்குள் நடந்தது

1919 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 13 ஆம் திகதி. பஞ்சாப் மக்களின் பைசாகி (புத்தாண்டு) தினம். ஜாலியன் வாலா பாக்கில் உள்ள நான்கு பக்கமும் அடைக்கப்பட்ட பூங்காப் பகுதிக்குள் வைத்து சுமார் ஆயிரம் பஞ்சாப் மக்கள் பிரிட்டிஷ் படைகளால் சுட்டுத் தள்ளப்பட்டனர்.

உயிராபத்தை விளைவிக்கக் கூடிய ஆயுதங்களை இந்தியர்கள் எவரும் வைத்திருக்கக் கூடாது என பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் விதித்த கடுமையான சட்டத்தின் கீழ் பஞ்சாப் மக்கள் கெடுபிடிகளுக்கு ஆளானார்கள். பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்த டாக்டர் கிச்லூ, மற்றும் சத்தியபால் மாலிக் என்ற இருதலைவர்களை இச் சட்டத்தைப் பயன்படுத்தி தீவிரவாதிகள் எனக் கூறி அவர்களை நாடு கடத்த முயற்சி நடந்தது. அச்சமயத்தில் தமது தலைவர்கள் நாடு கடத்தப்படவிருப்பதை அறிந்த மக்கள் கிளர்ந்தெழுந்தனர். தங்கள் எதிர்ப்பைத் தெரிவிப்பதற்காக ஜாலியன் வாலா பாக்கில் ஆயிரக் கணக்கில் திரண்டனர்.

இந்த மக்கள் எழுச்சியை இரும்புக் கரம் கொண்டு அடக்க அப்போதைய அமிர்தசரஸ் நகர படை அதிகாரி பிரிகேடியர் ஜெனரல் றெஜினோல்ட் டயர் முடிவு செய்தார்.

ஒடுக்கமான ஒரேயொரு பாதையை மட்டும் கொண்ட ஜாலியன்வாலா பாக் பூங்காவுக்குள் திடீரெனப் புகுந்த டயர் எவ்வித முன்னெச்சரிக்கையும் இன்றி அங்கு திரண்டிருந்த மக்களைச் சுட்டுத் தள்ளுமாறு பொலீஸாருக்கு உத்தரவிட்டார். அவ்வளவுதான். சீறிப் பாய்ந்த துப்பாக்கிக் குண்டு மழைக்கு பெண்கள், குழந்தைகள், வயோதிபர்கள் உட்பட ஆயிரக் கணக்கானோர் இரையாகினர். அங்கு ஏற்பட்ட நெரிசலில் சிக்கி நூற்றுக்கணக்கானோர் மாண்டனர்.

காட்டு மிராண்டித்தனமான இச்சம்பவத்தில் 379 பேர் மட்டுமே கொலையுண்டதாக பிரிட்டிஷ் அதிகாரபூர்வ அறிக்கை கூறியது. ஆனால் பலியானோரின் எண்ணிக்கை 2 ஆயிரத்துக்கும் அதிகம் என்று உயிர் பிழைத்தோர் கூறினர்.

முடி மறைக்க முயற்சி

முதலில் இச்சம்பவத்தை மூடி மறைக்க முற்பட்ட பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் பின்னர் சம்பவம் குறித்து விசாரணை நடத்த ஹண்டர் பிரபு தலைமையில் விசாரணைக் குழு ஒன்றை அமைத்தனர். சம்பவம் நடந்து இரண்டு மாதங்களின் பின்னர் ஒருவாறு விசாரணை ஆரம்பமானது. விசாரணையின் போது ஜெனரல் டயர் தனது குற்றத்தை ஏற்றுக் கொண்டார்.

பிரிட்டிஷ் இராணுவம் பற்றிய பய பக்தியை பஞ்சாப் மக்களிடம் ஏற்படுத்தவே அக்காரியத்தைத் தான் செய்ததாக டயர் கூறினார். அப்போது பஞ்சாப் ஆளுநராக இருந்த சேர் மைக்கேல் ஒடயரும், பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியத்தின் இந்திய அதிபதியாக விருந்த செம்ஸ் போர்ட் பிரபுவும் அதனை ஆதரித்தனர்.

இது நடந்து சுமார் 78 ஆண்டுகள் கழிந்த பிறகு — அஸ்தமித்து வரும் பிரிட்டிஷ் அரச பரம்பரையின் கடைசி மகாராணி எனக் கருதப்படும் எலிஸபெத் முதற் தடவையாக ஜாலியன்வாலா பாக்கிற்கு செல்லவுள்ளார்.

பொற்கோவிலுக்கு விஜயம் செய்யவுள்ள மகாராணி அருகே உள்ள ஜாலியன் வாலா பாக் நினைவுச் சதுக்கத்தில் மலரஞ்சலி செலுத்தக்கூடும் என்ற தகவல் தெரிய வந்ததும் இச் சம்பவத்துக்காக அவர் மன்னிப்புக் கோரவேண்டும் என்ற கோரிக்கை வலுக்கத் தொடங்கியது.

முதற்கோரிக்கை

பஞ்சாப் விவசாயப் பல்கலைக் கழகப் பேராசிரியரும், விடுதலைப் போராட்ட வீரர் பகத்சிங்கின் நெருங்கிய உறவினருமான ஜக்மோகன் சிங்கே இக் கோரிக்கையை முதலில் எழுப்பினார். இக் கோரிக்கை நியாயமானது என ஒரு சாரார் குரல் எழுப்பவே சில பிரிட்டிஷ் பத்திரிகைகளும் அதை ஆதரித்து எழுதின.

நல்லூர் தாஸ்

உலக வரலாற்றில்பல்வேறு காலகட்டங்களில், பல நாடுகளில் ஜாலியன்வாலா பாக் போன்ற படு கொலைகளும், காட்டுமிராண்டித் தனங்களும் நடந்தேறியுள்ளன. 1983 ஜூலையில் இலங்கையில் வெலிக்கடைச் சிறையில் நடந்ததும் இத்தகையதே.

ஆனால் கடந்த காலத் தவறுகளுக்காக மன்னிப்புக் கோரும் நாகரிக முதிர்ச்சி தற்கால உலகப் போக்கில் காணப்படுகிறது.

இரண்டாம் உலகப்போரின் போது 2 லட்சம் கொரியப் பெண்களை ஜப்பானியப் படைகள் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தின. அதற்காக 1992இல் ஜப்பானிய மக்கள் சார்பில் கொரியாவிடம் பகிரங்க மன்னிப்புக் கோரப்பட்டது.

விக்ரோரியா ஆட்சிக் காலத்தில் நியூசிலாந்தில் மாவோரிஸ் என்ற பழங்குடி இன மக்கள் நாட்டை விட்டு வெளியேறக் கட்டாயப்படுத்தப்பட்ட சம்பவத்துக்காக கடந்த 1995ஆம்ஆண்டுஅங்கு விஜயம் செய்த எலிஸபெத் மகாராணியார் மன்னிப்புக் கோரியிருந்தார்.

இவற்றையெல்லாம் பின்னணியாகச் சுட்டிக் காட்டியே ஜாலியன் வாலா பாக் படுகொலைகளைப் புரிந்த பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியத்தின் சார்பாக அதன் இப்போதைய மாட்சிமை தாங்கிய பிரதிநிதியான எலிஸபெத் மகாராணி மன்னிப்புக் கோர வேண்டும் என்ற கோரிக்கை எழுப்பப்பட்டது.

78 ஆண்டுகளுக்கு முன்பு நடந்த படுகொலைகளுக்காக இப்போது மன்னிப்புக் கோருமாறு கேட்கும் பஞ்சாபியர்கள், 1984 இல்பொற் கோவில் மீது இந்திய இராணுவம் நடத்திய ''புளுஸ் ரார்'' நடவடிக்கைக்காக இந்திய அரசு மன்னிப்புக் கோரவேண்டும் என கேட்க மாட்டார்களா?

இவ்வாறானதொரு அச்சம் அரச உயர்வட்டாரங்களில் எழவே செய்தது. அதனால் இந்திய விஜயத்தின் போது மகாராணி அமிர்தசரஸ் செல்வதைத் தவிர்த்துக் கொள்வது நல்லது என்ற சாரப்பட பிரதமர் குஜ்ரால் தெரிவித்த கருத்துக்கள் வெளியாகின. பின்னர் அதுபற்றி மகாராணிக்கு இந்திய அரசு கடிதம் ஒன்றை அனுப்பியது. ஆனால் அடுத்த ஒரு சில நாட்களிலேயே மகாராணி அமிர்தசரஸ் உட்பட இந்தியாவில் தாம் விரும்பிய எந்த இடத்திற்கும் செல்லலாம் என்று திட்டவட்டமாகக் கூறவேண்டிய அரசியல் நிர்ப்பந்த நிலை இந்திய அரசுக்கு ஏற்பட்டது.

''மகாராணியை அமிர்தசஸுக்குச் செல்ல விடாமல் தடுப்பது சீக்கியர்களுக்கும், பஞ்சாபிகளுக்கும் எதிரான செயல்'' என்ற விதமாகப் பஞ்சாப்பில் கோஷங்கள் கிளம்பியதே அதற்குக் காரணம் ஆகும். எனவே இந்த விவகாரம் அரசியல் மயமாவதை விரும்பாத இந்திய அரசு மேற்படி அறிவிப்பை விடுத்துஒதுங்கிக்கொண்டது.

தற்போது இது தொடர்பான சர்ச்சை தணிந்து விட்டது.

மகாராணி அமிர்தசரஸுக்கு செல்வார். ஆனால் அங்கு நடந்த படுகொலைச் சம்பவங்களுக்காக அவர் மன்னிப்புக் கோர மாட்டார். ஆயினும் ஜாலியன்வாலா பாக் நினைவுச் சதுக்கத்தில் அவர் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்துவார் என்று பிரிட்னிலும் இந்தியாவிலும் உத்தியோக பூர்வமாகஅறிவிக்கப்பட்டுவிட்டது எனினும் அமிர்தசரஸில் எதிர்வரும் 14 ஆம் திகதி என்ன நடைபெறும் என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

ஜாலியன்வாலா பாக் படுகொலை வரலாற்றில் மிக மோசமானது தான். அதற்காக பிரிட்டிஷ் அதிகாரத்தை மன்னிப்புக் கோருமாறு கேட்கும் உரிமை பஞ்சாபியருக்கும் சீக்கியருக்கும் உண்டு. ஆனால் சுதந்திரம் பெற்று 50 ஆண்டுகளைக் கடந்துள்ள இந்தியாவின் அதிகார வர்க்கங்கள் இது போன்ற கோரிக்கைகள விடுக்கும்அருகதையை இழந்து விட்டன என்றே கொள்ளலாம்.

1984 இல் முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி கொல்லப்பட்ட பின்னர் டில்லியிலும் ஏனைய இடங்களிலும் சீக்கியர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட படுகொலைகள் — 1987 இல் யாழ்ப்பாணத்தில் மருத்துவ மனைக்குள் புகுந்து இந்திய அமைதிப் படைகள் நடத்திய வெறியாட்டம் உட்பட பல படுகொலைகள் —

1994 இல் இந்திய முஸ்லிம்களின் மனங்களைப் புண்படுத்தும் வகையில் அயோத்தியில் அமைந்திருந்த பாபர் மசூதி இந்துமத வெறியர்களால் ஒரு நொடியில் இடித்துத் தரை மட்டமாக்கப்பட்டமை — போன்ற சம்பவங்களுக்காக இந்திய ஆட்சியாளர்களை வரலாறு ஒரு போதும் மன்னிக்கப் போவதில்லை. ★

சர்வஜன வாக்கெடுப்பை...

(11 ஆம் பக்கத் தொடர்)

யது.

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபைக் கூட்டத்தில் பங்குபற்றுவதற்காக ஸ்ரீலங்காவின் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கடந்த வாரத்தில் அமெரிக்கா சென்றிருந்தார்.

சீர்குலைந்துள்ள அமெரிக்க — ஸ்ரீலங்கா உறவை சீர்படுத்தவும் —

புலிகளுக்கு எதிரான தீவிர நிலைப்பாட்டை எடுப்பதற்கு அமெரிக்காவைத் தூண்டவும் —

அமைச்சர் கதிர்காமர் அமெரிக்காவில் எடுத்த முயற்சிகள் ஓரளவு பலனளித்துள்ளன.

அமெரிக்காவில் தங்கியிருந்த சமயம் அமெரிக்காவின் இராஜாங்க அமைச்சர் (அமெரிக்க பாணியில் இராஜாங்க செயலாளர்) மடலைன் அல்பிரைட் அம்மையாரை கடந்த 2 ஆம் திகதி சந்தித்துப் பேசினார் லக்ஷ்மன் கதிர்காமர்.

பயங்கரவாத இயக்கங்களின் பட்டியலில் தமிழீழ விடுதலைப் புலிகளையும் சேர்ப்பதாக அமெரிக்கா பிரகடனப்படுத்த வேண்டும் என்றும் இச்சந்திப்பின் போது கோரிக்கை விடுத்தார் லக்ஷ்மன்.

ஸ்ரீலங்காவுக்கு நட்புறவு விஜயம் ஒன்றை மேற்கொள்ளும் படியும் அல்பிரைட் அம்மையாருக்கு அழைப்பு விடுத்தார் கதிர்காமர்.

ஆனால் கதிர்காமரின் இரண்டு கோரிக்கைகளில் ஒன்றுக்கே சாதகமான பதில் கிடைத்திருக்கின்றது.

1996 ஜனவரி 31 ஆம் திகதி கொழும்பில் புலிகள் நடத்தியதாகக் கூறப்படும் அதிரடித் தாக்குதலினால் மத்திய வங்கிக் கட்டடமும் அதையொட்டிய வர்த்தகக் கட்டடங்களும் எரிந்து நாசமாகியது தெரிந்ததே.

அந்த வர்த்தக மையத்தை மீளமைப்பதற்கான திட்டங்களைத் தயாரிப்பதற்கும் அதற்கான நிதியை கடனடிப்படையில் பெறுவதற்கும் அமெரிக்க வங்கி ஒன்று மற்றும் அமெரிக்க நிறுவனங்களின் உதவியை ஸ்ரீலங்கா அரசு நாடியிருந்தது.

ஸ்ரீலங்கா அரசாங்க ரீதியில் வழங்கிய உறுதிப்பிணையின் அடிப்படையில 11 கோடி அமெரிக்க டொலர் (சுமார் எழுநூறு கோடி ரூபா) கடனை வழங்கவும் அமெரிக்க அரசசார்பு வங்கி ஒன்று முன்வந்தது.

ஆனால் இத்திட்டம் நிறைவேற்றப்படுவதற்கு இடையில் — இடை வழியில் — இத்திட்டத்திலிருந்து ஒருதலைப்பட்சமாக ஸ்ரீலங்கா அரசுத் தரப்பு விலகிக் கொண்டுவிட்டதாகக் கூறப்படுகின்றது. இது விடயம் அமெரிக்க — ஸ்ரீலங்கா உறவில் பெரும் விரிசலை ஏற்படுத்தியிருக்கின்றது.

இந்த விவகாரத்தில் ஸ்ரீலங்கா அரசுஅதிகாரிகளும், தனியார் நிறுவன அதிகாரிகளும் தங்களது தொழில்சார் நிபுணத்துவ கோட்பாடுகளுக்கு மாறாகவும் நேர்மையற்ற முறையிலும் நடந்து கொண்டிருப்பதாக சம்பந்தப்பட்ட அமெரிக்க நிறுவனங்களின்உயரதிகாரிகள்தெரிவித்திருக்கின்றனர்.

ஸ்ரீலங்காவில் அமெரிக்கநிறுவனங்களைக் கையாள்வது தொடர்பாகக் கடைப்பிடிக்கப்படும் அதிகாரத்தனமான போக்கும் கெடுபிடிகளும் ஸ்ரீலங்காவுக்கான அமெரிக்கத் தூதர் பீற்றர் பேலேயைச் சீற்றமுற வைத்திருக்கின்றன.

மத்திய வங்கிக் கட்டடப் பகுதியை மறு சீரமைப்பதற்கு அமெரிக்க வங்கிக் கடன் வசதியைப் பெறுவதில் இடம்பெற்றிருப்பதாகக் கூறப்படும் குளறுபடி தொடர்பாக, அமெரிக்க இராஜாங்கஅமைச்சர் அல்பிரைட் அம்மையார் ஸ்ரீலாங்காஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார். ஆனால் அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களை ஏற்க மறுத்து — அமெரிக்க கடன் வசதி தொடர்பான உடன்பாட்டை நிராகரித்து — ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்க அல்பிரைட் அம்மையாருக்கு பதில் அனுப்பியிருந்தார்.

இந்தப் பின்னணியில்தான் கதிர்காமர் அமெரிக்காவில் அல்பிரைட் அம்மையாரைச் சந்தித்தார்; புலிகளை பயங்கரவாத அமைப்பாக அறிவிக்கக் கோரினார்; ஸ்ரீலங்காவுக்கு வரும்படி அழைத்தார்.

மிகவிரைவில் பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் விஜயத்தை மேற்கொள்ளவிருக்கும் அல்பிரைட் அம்மையார், கதிர்காமரின் அழைப்பை ஏற்று அந்த விஜயத்தின் நடுவில் ஸ்ரீலங்காவுக்கும் விஜயம் செய்யக் கூடிய வகையில் தனது திட்டத்தை மாற்றிக் கொள்வார் என ஸ்ரீலங்காத் தரப்பில் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் கதிர்காமரின் அழைப்பை ஏற்க அல்பிரைட் அம்மையாரின் உதவியாளர்கள் மறுத்துவிட்டனர்.

'அல்பிரைட் அம்மையாரின் இந்தியா, பாக்கிஸ்தான் விஜயம் இன்னும் உறுதி செய்யப்படவில்லை. அவ்வாறு உறுதி செய்தாலும் கூட அதற்கு நடுவில் ஸ்ரீலங்காவுக்கு வருவதற்கு அமெரிக்க அமைச்சருக்கு நேரம் இருக்காது' — என்றசாரப்பட்டபதிலளித்து. ஸ்ரீலங்காத் தரப்பின் அழைப்பை நாசூக்காக நிராகரித்து விட்டனர் அமெரிக்க அதிகாரிகள்.

என்றாலும் புலிகள்தொடர்பான கதிர்காமரின் கோரிக்கையை ஏற்க அமெரிக்கத் தரப்பு இணங்கியது. ★

கூடல் இன்றி...

(IX ஆம் பக்கத் தொடர்ச்சி)

உடல் கலத்தை ஒத்த பரம்பரை அலகுகளாகி விடுகின்றன. பின்னர் அக்கலம் பல்கிப் பெருகி தனி உயிராகப் பரிணமிக்கின்றது.

'குளோனிங்' முறையின் போது சாதாரண கலத்தின் சுவரைப் பிளந்து, அதன் உள்ளே, இரட்டைச் சுருளாக முறுக்கப்பட்ட நிலையில் காணப்படும் நாடாக்கள் போன்ற DNA க்களை தனித்தனியாகப் பிரித்து, ஆண் விந்தில் இருப்பது போன்று தனியன்களாக DNA க்களை உருவாக்குவதில் மருத்துவ ஆய்வாளர்கள் வெற்றி கண்டுள்ளனர்.

ஓர் அங்கியின் ஒரு கலத்தை எடுத்து அதன் சுவரான ஸோனா பெலூசிடாவை அகற்றி விடுவார்கள். இப்போது மரபணுக்கள் இரண்டாகப் பிரிந்து விடும். பிறகு இரண்டையும் பிரித்துவிட்டு செயற்கையான ஸோனா பெலூசிடா என்னும் வெளிச் சுவரை உருவாக்கி விடுவார்கள்.

இவற்றை வைத்து பின்னர் இனப்பெருக்கத்தைத் தொடருவார்கள்.

டாக்டர் லிம்மட் என்பவர் ஓர் ஆட்டின் பால் மடியில் இருந்து கலத்தை எடுத்து மற்றொரு ஆட்டின் முட்டையை அகற்றி இரண்டையும் சேர்த்தார். பின்னர் வேறு ஓர் ஆட்டின் கருவறையில் அதனை வைத்து 'டோலி' என்ற ஆட்டுக் குட்டியைப் பிரசவிக்கச் செய்தார்.

இந்த முறையில் ஒத்த வடிவுள்ள மனிதர்களை கூட்டம் கூட்டமாக — கூடல் இன்றியே — உருவாக்க விரும்பினால் கூட அதுவும் இலகுவில் சாத்தியம் என்பதே இப்போதைய மருத்துவத்துறை பரபரப்பாகும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்ஜீரியாவில் தொடரும் படுகொலைகள்!

தீவிரவாதிகளால் ஆட்சியை பிடிக்க முடியுமா?

வட ஆபிரிக்க நாடான அல்ஜீரியாவில் அப்பாவி மக்கள் கொல்லப்படும் சம்பவங்களும், வன்முறைகளும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன.

கிராமப்புறங்களில் கோடரிகள், கத்திகள், சாதாரண துப்பாக்கிகள் மூலம் தாக்குதல்கள் நடத்தப்படுவது நாளாந்த நிகழ்வுகளாக மாறி வருகின்றன. அழுத்து வெட்டிக் கொல்லப்படுவோரே அதிகம்.

பெண்கள் கடத்தப்பட்டு கட்டாய திருமணங்களுக்கு உள்ளாக்கப் படுகின்றனர். ஆயிரக்கணக்கானோர் காணாமற் போகின்றனர்.

உலகிலே சமீப காலத்தில் இல்லாதவாறு பெண்கள், குழந்தைகள் என்ற வேறுபாடின்றி இடம் பெற்றுவரும் படுகொலைகள் அல்ஜீரிய வரலாற்றில் கறைபடிந்த அத்தியாயங்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

இரு தரப்பினரும் கொலைகளுக்கு மறுப்பு

இந்தப்படுகொலைகளுக்கும் வன்முறைகளுக்கும் இஸ்லாமிய அடிப்படைவாதிகளான தீவிரவாதிகளே காரணம் என்று அல்ஜீரியாவின் இராணுவ ஆட்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

ஆனால் இந்தப் படுகொலைகளுக்கு அரசாங்கத்தின் கூலிப்படைகளை இஸ்லாமிய தீவிரவாதிகள் குற்றஞ் சாட்டுகின்றனர்.

மக்களுக்காகப் போராடும் நாம் மக்களை ஏன் படுகொலை செய்ய வேண்டும் என்று அவர்கள் கேட்கின்றனர்.

இராணுவத்தின் ஆதரவுடன் ஆட்சி நடத்தும் ஜனாதிபதி லியாமாய்ன் ஷெரூவல் (Liamaine Zeroual) இந்தப் படுகொலைகளைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில் இருக்கிறார்.

வன்முறைகளை முடிவுக்குக் கொண்டுவர எவருடன் சமாதானப் பேச்சு நடத்துவது என்று தெரியாத நிலையில் இராணுவ ஆட்சியாளர்கள் இருந்து வருகின்றனர். படுகொலைகளுக்கும் குண்டுத் தாக்குதல்களுக்கும் எவருமே உரிமை கோருவதில்லை.

அல்ஜீரியாவின் இஸ்லாமிய அடிப்படை வாதிகளின் கட்சியான ISF என அழைக்கப்படும் இஸ்லாமிய மீட்பு முன்னணியிலிருந்து (Islamic Salvation Front) பிரிந்த ஆயுதக் குழுக்களே அரசியல் நோக்கமின்றி நடத்தப்படும் இப் படுகொலைகளுக்குக் காரணம் என்று தற்பொழுது நம்பப்படுகிறது.

சமீபத்தில் குடிமக்கள் வாழும் பகுதி மீது றொக்கட் தாக்குதலும் நடத்தப்பட்டுள்ளது.

அபாஸி மடானி காவலில்

இஸ்லாமிய மீட்புமுன்னணியின் தலைவர் அபாஸிமடானி 1992 ஆம்ஆண்டு முதல் காவலில் இருந்து வருகிறார்.

1994 இல் ஜனாதிபதி லியாமாய்ன் ஷெரூவல் பதவிக்கு வந்த போது தனது நல்லெண்ணத்தைக் காட்டுவதற்காக அபாஸிமடானியை விடுதலை செய்திருந்தார்.

ஐ. நா. வின் உத்தரவாதத்துடன் தீவிரவாதக் குழுக்களுடன் பேச்சு நடத்தி படுகொலைகளை முடிவுக்குக் கொண்டு வருவதாக அபாஸி மடானி அப்பொழுது அறிவித்தார்.

எனினும் அல்ஜீரிய ஆட்சியாளர்கள் அவரை மீண்டும் காவலில் வைத்துள்ளதுடன் இந்த விவகாரத்தில் தலையிட வேண்டாம் என ஐ. நா பொதுச் செயலாளர் கோபி அனானுக்கு அறிவித்தும் விட்டனர்.

அபாஸி மடானியை விடுதலை செய்தால் இஸ்லாமிய மீட்பு முன்னணி மீண்டும் அரசியலுக்கு வந்து விடும் என்று இராணுவ ஆட்சியாளர்கள் கருதுகிறார்கள்.

இந்த ஆண்டு ஜூன் மாதம் இராணுவ ஆட்சியாளர்கள் பல கட்சிகள் கலந்து கொள்ளும் நாடாளுமன்றத் தேர்தலை நடத்தினர்.

எதிர்பார்க்கப் பட்டபடி தேர்தலில் இஸ்லாமிய மீட்பு முன்னணி போட்டியிட அனுமதிக்கப்படவில்லை. 1992 இல் விதிக்கப்பட்ட அதன் மீதான தடையும் நீக்கப்படவில்லை.

அல்ஜீரியாவின் இஸ்லாமிய அடிப்படை வாதிகளின் கட்சியான இஸ்லாமிய மீட்பு முன்னணியின் தலைவர் அபாஸி மடானி.

ஜனாதிபதி ஷெரூவலின் கட்சியான தேசிய ஜனநாயக கூட்டணி 155 தொகுதிகளிலும் இந்தக் கூட்டணியின் ஆதரவுக் கட்சியான தேசிய விடுதலை முன்னணி 64 தொகுதிகளிலும் வெற்றி பெற்றன. அல்ஜீரிய நாடாளுமன்றத்தின் முழு உறுப்பினர் எண்ணிக்கை 380 ஆகும்.

எதிர்க்கட்சியினரும் இஸ்லாமிய தீவிரவாதிகளும் தலையெடுக்க முடியாத விதத்தில் தேர்தலை நடத்தி முடித்து தனக்கு ஆதரவான அரசு ஒன்றை உருவாக்குவதில் ஜனாதிபதி ஷெரூவல் வெற்றி கண்டுள்ளார்.

1992 இல் ஆரம்பித்த போராட்டம்

இஸ்லாமிய தீவிரவாதிகளின் இராணுவ ஆட்சியாளர்களுக்கு எதிரான தற்போதைய போராட்டம் 1992 ஆம் ஆண்டு ஆரம்பமானது.

இந்தப் போராட்டத்தால் அப்பாவிப் பொதுமக்கள், வெளிநாட்டவர்கள், அரசஉயர் அதிகாரிகள் உட்பட 60 ஆயிரம் பேர் கடந்த ஐந்தரை வருடகாலத்தில் படுகொலை செய்யப்பட்டனர்.

இஸ்லாமிய மீட்பு முன்னணியின் அரசுக்கு எதிரான போராட்டம் ஆரம்பமாவதற்கு 1991–92 தேர்தலே காரணம் ஆகும்.

1991—92 தேர்தல்களில் அபாஸி மடானி தலைமையிலான இஸ்லாமிய மீட்பு முன்னணி வெற்றி பெற்றிருந்த சமயம் இராணுவ ஆட்சியாளர்கள் தலையிட்டனர்.

மதசார்பற்ற ஜனநாயகத்தைப் பாதுகாப்பதாகக் கூறிக்கொண்டு அத்தேர்தலை செல்லுபடியற்றதாக்கியதுடன் இஸ்லாமிய மீட்பு முன்னணியையும் தடைசெய்தனர்.

அவசரகாலச் சட்டமும் பிரகடனம் செய்யப்பட்டது.

1991 டிசம்பரில் நடந்த முதலாவது கட்டவாக்களிப்பில் இஸ்லாமிய மீட்பு முன்னணி அமோக ஆதரவுபெற்றிருந்தது. 1992 ஜனவரியில் நடைபெற இருந்த இரண்டாம் கட்ட வாக்களிப்பே இராணுவ ஆட்சியாளர்களால் இரத்துச் செய்யப்பட்டு தேர்தல் செல்லுபடியற்றதாக்கப்பட்டது.

1992 இல் இஸ்லாமிய மீட்பு முன்னணியின் போராட்டம் கார்க் குண்டு வெடிப்புகள், அரச உயர் அதிகாரிகள், வெளிநாட்டவர்கள் கொலைகளுடன் ஆரம்பமானது.

போராட்ட ஆரம்பகாலத்தில் ஏழு பிரெஞ்சுக்காரர்கள் கொல்லப்பட்டனர். அல்ஜியேர்ஸிலிருந்து பாரிஸுக்கு பறந்து கொண்டிருந்த பிரெஞ்சுவிமானம் ஒன்று கடத்தப்பட்டது. பாரிஸிலும் குண்டுகள் வெடிக்கவைக்கப்பட்டன.

இஸ்லாமிய தீவிரவாதிகளுக்கு ஆதரவளித்த குற்றச்சாட்டின் பேரில் பாரிஸில் அல்ஜீரியர்கள் பலர் கைது செய்யப்பட்டனர்.

படுகொலைகளுக்கு G. I. A. காரணம்

தற்பொழுது அல்ஜீரியாவில் நடைபெறும் படுகொலைகளுக்கு இஸ்லாமிய மீட்பு முன்னணியில் இருந்து பிரிந்துபோன சிறு,சிறு ஆயுதக் குழுக்களே காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவற்றுள் பிரதான ஆயுதக் குழு G. I. A என அழைக்கப்படுகிறது.

சில மாதங்களுக்கு முன்னர் அல்ஜீரிய இராணுவத்தினுடனான மோதலில் ஒன்றில் G. I. A. குழுவின் தலைவர் டெமில் ஸிட்ரோனி கொல்லப்பட்டு விட்டார் என்று நம்பப்படுகிறது.

தலைவர் இன்றி அரசியல் நோக்கம் எதுவுமே இல்லாமல் செயற்படும் இக்குழு தலைநகர் அல்ஜியேர்ஸிலும் இராணுவப் பகுதிகளிலும் நடத்தும் படுகொலைகள் குழப்பங்களை இஸ்லாமியர் வைப்பதற்கும் அவர்களின் நிலங்களையும் சொத்துக்களையும் பறிப்பதற்கும் திட்டமிடுவதாக அவதானிகள் கூறுகின்றனர்.

எனினும் இக் கொலைகளின் சூத்திரதாரிகள் கண்டறியப்பட வேண்டும் என்றும் இதற்காக சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் எதிர்க்கட்சிகள் கோரிக்கை விடுத்து வருகின்றன.

பிரான்ஸின் குடியேற்றநாடு

அல்ஜீரியா முன்னர் பிரான்ஸின் குடியேற்ற நாடாக இருந்தது. அதுமட்டுமல்ல அதன் எல்லை நாடுகளில் லிபியாவைத்தவிர ஏனைய நாடுகளான மொரோக்கோ, மொரிட்டானியா, மாலி, நைகர், டுனிசியா ஆகியவையும் பிரான்ஸின் குடியேற்ற நாடுகளாகவே இருந்தன. இதனால் பிரான்ஸில் தற்பொழுது 40 லட்சம் வட ஆபிரிக்க முஸ்லிம்கள் வாழ்கின்றனர். இதனைவிட அல்ஜீரியாவில் இருந்து குடியேறிய 10 லட்சத்துக்கு மேற்பட்ட ஐரோப்பியர்களும் பிரான்ஸில் வாழ்கின்றனர்.

1955 ஆம் ஆண்டுக்கும் 62 ஆம் ஆண்டுக்கும் இடையில் பிரெஞ்சு ஆதிக்கத்துக்கு எதிராக நடைபெற்ற சுதந்திரப் போராட்டத்தின் போது பீதியால் இவர்கள் அல்ஜீரியாவில் இருந்துவெளியேறி இருந்தனர்.

பிரான்ஸில் சார்ல்ஸ் டி கோலின் ஆட்சிக் காலத்திலேயே அல்ஜீரியா சுதந்திரம் பெற்றது.

சுதந்திரம் கிடைத்தவுடன் அதிகாரப் போட்டி

F.L.N. என அழைக்கப்பட்ட அல்ஜீரிய தேசிய விடுதலை இயக்கமே பிரெஞ்சு ஆதிக்கத்துக்கு எதிராகப் போராடியது.

ஆனால் அல்ஜீரியா சுதந்திரம் அடைந்தவுடன் F.L.N. இரண்டாகப் பிரிந்து அதிகாரப் போர் மூண்டது.

இந்தச் சண்டையில் அஹ்மட் பென் பெல்லா (Ahmed Ben Bella) ஆட்சியைக் கைப்பற்றினார். எனினும் 1965 ஆம் ஆண்டு இராணுவப் புரட்சி மூலம் அவரது ஆட்சி கவிழ்க்கப்பட்டது. பூமெதியன் (Boumedienne) என்பவர் தலைமையில் புதிய ஆட்சி அமைக்கப்பட்டது

1989 அரசமைப்பு

1989 இல் அல்ஜீரிய இராணுவ ஆட்சியாளர்கள் அரசமைப்புச் சட்டம் ஒன்றை உருவாக்கி வாக்கெடுப்புக்கு விட்டு மக்களின் ஆதரவையும் பெற்றனர்.

மக்களின் அடிப்படை உரிமைகள், பல கட்சி ஆட்சி முறை ஆகியவற்றுக்கு புதிய அரசமைப்பு உத்தரவாதம் அளித்தது.

இதன் அடிப்படையிலேயே 1991 டிசம்பரில் தேர்தல் நடத்தப்பட்டு, இஸ்லாமிய மீட்பு முன்னணி வெற்றி பெறும் வாய்ப்பு ஏற்பட்ட சமயம் தேர்தல் செல்லுபடி அற்றதாக்கப்பட்டது.

இஸ்லாமிய மீட்பு முன்னணிக்கு தடைவிதித்த இராணுவ ஆட்சியாளர்கள் அல்ஜீரியாவில் உள்ள சுமார் 10 ஆயிரம் பள்ளி வாசல்களில் அரசியல் நடவடிக்கைகளுக்குத் தடைவிதித்தனர்.

லண்டனில் தலைமையகம்

இஸ்லாமிய மீட்பு முன்னணியின் தலைமையகம் லண்டனில் இயங்கிவருகிறது.

பிரான்ஸுக்கு எதிராகவும் அல்ஜீரிய இராணுவ ஆட்சியாளர்களுக்கு எதிராகவும் இஸ்லாமிய மீட்பு முன்னணியின் லண்டன் தலைமையகம் அறிக்கைகளை விடுத்து வருகிறது. அல்ஜீரிய இராணுவ ஆட்சியாளர்களுக்கு பிரான்ஸ் ஆதரவு அளிப்பதாக இஸ்லாமிய தீவிரவாதிகள் நம்புகின்றனர்.

இஸ்லாமிய தீவிரவாதிகள் ஆட்சிக்கு வந்தால் அல்ஜீரியா மற்றொரு ஈரானாக மாறிவிடும் என்று பிரான்ஸ் நம்புகிறது. அல்ஜீரிய இராணுவ ஆட்சியாளர்களை மேற்கு நாடுகளும் ஆதரிக்கின்றன.

அல்ஜீரியாவில் ஆட்சிக்கு வந்தால் கடுமையான இஸ்லாமிய சட்டங்களை (Shariat) அமுல் செய்வது இஸ்லாமிய தீவிரவாதிகளின் திட்டம் ஆகும்.

பிரெஞ்சுகலாசாரத்தில் ஊறிய நாடு

அல்ஜீரியா 1834 ஆம் ஆண்டு பிரான்ஸின் ஒரு குடியேற்ற நாடாகியது. 1881 ஆம் ஆண்டு வட அல்ஜீரியா பிரான்ஸின் ஒரு பகுதியாக பிரகடனம் செய்

உலகஉளா

ஏன்.பி. சீலன்

1967 ஆம் ஆண்டு மத்திய கிழக்கில் இஸ்ரேலுக்கும் அரபு நாடுகளுக்கும் இடையில் யுத்தம் மூண்ட போது இஸ்ரேலுக்கு எதிராக அல்ஜீரியாவும் யுத்தப் பிரகடனம் செய்தது. அமெரிக்காவுடனான உறவுகளைத் துண்டித்துக் கொண்டு சோவியற் யூனியன் பக்கம் சாய்ந்தது

1988 ஆம் ஆண்டு விலைவாசி உயர்வுக்கு எதிராக அல்ஜீரியாவில் கிளர்ச்சிகள் ஏற்பட்டன. இதனை அடக்க இராணுவம் நடத்திய தாக்குதல்களில் 500 க்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டனர்.

அல்ஜீரியாவில் பொதுத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை படிப்படியாக வலுத்து அது கிளர்ச்சியாக உருவெடுக்கும் நிலை தோன்றியது.

யப்பட்டது. நீண்டகால பிரெஞ்சு ஆட்சியினால் பிரெஞ்சு கலாசாரத்தில் ஊறிப்போன நாடு அல்ஜீரியா.

ஆனால் இன்று அல்ஜீரியாவில் நடைபெறும் படுகொலைகள் பிரெஞ்சுக்காரரோ அல்லது எந்த ஒரு வெளிநாட்டவரோ பாதுகாப்பு இன்றி நடமாட முடியாத நிலையைத் தோற்றுவித்துள்ளது.

அதே சமயம் தீவிரவாதிகள் தலைநகர் அல்ஜீயேர்ஸுக்கு சென்று ஆட்சியைப் பிடிக்கும் நிலையிலும் இல்லை.

தீவிரவாதிகளும் வேண்டாம்; இராணுவ ஆட்சியாளர்களும் வேண்டாம் என்பதே பெரும்பாலான அல்ஜீரிய மக்களின் கருத்து என்று கூறப்படுகிறது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org